303 No. M. 2330 SIDDHANTHAM
Vol. 25—No. 8

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'


மலர் 25 | நந்தன ஆவணி 1952 ஆகஸ்ட் | இதழ்

REGISTRAR OF BOOKS
MADRAS


உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| நாட்டு ஒலி | ... | 289 |
| திருமாகறல் | ... | 298 |
| திருவிரிஞ்சிபுரம் | ... | 301 |
| தலைமை உரை | ... | 303 |
| பால் இனம் | ... | 310 |
| "குகை—நமசிவாய தேசிகர்" | ... | 317 |
| திருக்கழுக்குன்றம் ஆனிமகப் பெருவிழா | ... | 327 |
| [illegible] தேர்வு விவரம் | ... | 334 |
| | ... | 336 |

ம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
யர் : வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சைவ சித்தாந்த மகா சமாஜம்
, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15



திருவிரிஞ்சிபுரம் - முன்கோபுரம்



திருவிரிஞ்சிபுரம் - உள்பார்வை

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 25 | நந்தன ஆவணி 1952 ஆகஸ்ட் | இதழ் 8

## 1. நாட்டு ஒலி

1. உண்மை யாது? மேடைப் பேச்சுக்களில் நமது நாட்டுச் சமயப் பரப்பு, சமய உணர்ச்சி, சமய நம்பிக்கை, இவைகளைப் பற்றி அடிக்கடி திட்மான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அவைகள் உண்மைபோலக் கேட்போர்களுக்குத் தோன்றும். ஆனால் அவைகளை முழுவதும் உண்மையென்று எடுத்துக் கொள்வது தவறு. நன்றாய்க் கூர்ந்து பார்க்குங் காலத்தில்,

> " பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினால்
> மெய்ப்போ லும்மே, மெய்ப்போ லும்மே."

என்று அரசப்புலவர் சொல்லியது மேடைப் பேச்சுக்களை பொறுத்தோ என்று ஐயுறவேண்டி வரும். மேடைப் பேச்சுக்கள் மட்டுமல்ல, எழுத்திலும், அச்சிலும் இதனையே காண்கின்றோம். சிறப்பாகச் செய்தித் தாள்களில் இவ்வித நிலைமை நிரம்பக் காண்போம். அறிவுடையவர்கள் இவ்விதக் கருத்துக்களை அலசிப் பார்த்து அவற்றில் உண்மையிருந்தால் மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நமது நாட்டில் சிறப்பாகத் தென்னிந்தியாவில் சமயப் பற்று அளவுகடந்திருக்கிறதென்றும், சமய நிலையங்களில் அருமையாய் ஈட்டின பொருளை வீண்விரயம் செய்கிறார்களென்றும், கிடைத்தற்கரிய காலத்தை அவைகளுக்காக மட்டு இன்றிச் செலவழிக்கின்றார்கள் என்றும், சில பேச்

சாளர்கள் அடிக்கடி மேடைகளில் பேசுகின்றார்கள். அச்செலவுகளையெல்லாம் நீக்கிப் பொருள் சேகரிப்பதிலும், மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும், அதற்காகப் பாடுபட்டுச் சேவை செய்வதிலும், அருமையான காலத்தையும், பொருளையும், அறிவையும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்திக் கூறுவார்கள். பொருளைப் பெற்று, இன்பம் துய்த்தலைப் பற்றி எவரும் தடை சொல்லவே மாட்டார்கள். அது ஒவ்வொரு நாட்டிற்கும் வேண்டியதுதான். தென்னாட்டிற்கு மிகவும் வேண்டும். ஆனால் சமயத்தைப் பற்றிக் கூறும் கருத்து உண்மையல்ல. மக்களில் பெரும்பான்மையோர் பொருள் ஈட்டத்தை விடச் சமயத்திற்கு அதிக நேரமும், சிந்தையும் பொருளும் செலவழிக்கின்றார்களா? ஊன்றிப் பார்த்த அளவில் அவ்வாறு இல்லை எனலாம்.

முதலில் நேரத்தை எடுத்துக்கொள்வோம்; சாதாரண மனிதன் 24 மணி நேரத்தில் தூக்கத்தில் 8-மணி போக, மீதியிருக்கும் 16-மணியில், சமயத்திற்கோ அல்லது கடவுள் வணக்கத்திற்கோ எத்தனை செலவழிக்கிறான். நகரத்திலேயாவது சில மக்கள் 5 அல்லது 10 நிமிஷம் செலவழிப்பார்கள். நாட்டுப்புறங்களில், பெரும்பான்மையான பாமரர்கள் அதுவும் செலவழிப்பதில்லை. சமய நிலையங்களை எடுத்துக் கொள்ளலாம். ஆலயங்களுக்குச் செல்வதிலும், அவைகளுக்குப் பொருள் உதவி செய்வதிலும், வழிபாடு செய்வதிலும், எத்தனை பேர் ஈடுபட்டிருக்கின்றார்கள். நகரங்களிலே தலயாத்திரை புரிபவர்களும், திருவிழாக்களைக் காணச் செல்லுகிறவர்களும், ஒரு பகுதியாராக இருக்கக் கூடும். நாட்டுப்புறங்களிலே ஆண்டுக்கொருமுறை நடைபெறும். கிராம தேவதைத் திருவிழாக்களில் வேடிக்கையாகப் பாமர மக்கள் காலங்கழிப்பதும், பொங்கல் இட்டு வயிறு நிரம்ப உண்பதில் இன்பப்படுவடுவதிலும், சிந்தை செலுத்துவதன்றி உண்மையான சமய வழிபாடு அவர்கள் மனதில் இல்லை. சமய உணர்ச்சியை எடுத்துக் கொண்டாலும் அதே நிலைமைதான் இருக்கின்றது. நகரங்களில் சமயச் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு சமயச் சொற்பொழிவுகளை நடத்துவதும், சமய [illegible]கள் புரிவதும், வழிபாடுகள் இயற்றித் திருமுறைகள், பிர[illegible]ங்கள், ஓதிப்பொருள்

186884



விரிப்பதும் ஆங்காங்கு நடைபெறக் காண்கின்றோம். நாட்டுப்புறங்களிலோ படிப்புக் குறைவினாலும், வறுமைப் பெருக்கினாலும், பாமரமக்களில் யாதொரு சமய உணர்ச்சியும் ஏற்படுவதில்லை.

இவ்வாறாக 3-வகைகளிலும் சமய எண்ணம் நமது நாட்டில் மிகக் குறைவாக இருப்பதனை அறியலாம். மேலும் சமயச் செழிப்புக்கு அடையாளங்களாக நிற்கும் கோயில்களின் பரிதாபமான நிலையைப் பற்றிச் சிறிது ஆராய்வாம்.

இப்போது இருக்கும்படியான கோயில்களின் எண்ணிக்கை மக்களுக்குச் செய்யக் கூடிய சமய சேவைக்குப் போதுமானவையா? அவைகளுக்கு எவ்வளவு பேர் செல்லுகிறார்கள்? சென்றாலும் மக்களுக்கு வேண்டிய சமய போதனை தரப்படுகின்றதா? அவைகளால் மக்கள் பயன் பெறுகிறார்களா? எத்தனைக் கோயில்கள் ஒரு பயனும் இல்லாமல் பாழடைந்து கிடக்கின்றன. அவைகளைச் சீர்ப்படுத்துவதற்கு போதுமான பணம் இல்லையா? இருந்தால் அது ஏன் செய்யப்படுவதில்லை? இந்தச் செயலில் மக்களுடைய ஊக்கம் ஏன் குறைந்திருக்கின்றது? இந்தக் கேள்விகளைக் கேட்டு அவைகளுக்குச் சரியான விடைகளை நீங்களே சிந்தித்துப் பாருங்கள். நமது நாட்டிலேயே கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் பேதம் உண்டு. கிறிஸ்தவர்களில் 5000-பேருக்கு ஒரு கோயில் வீதம் கட்டுகிறார்கள். இந்துக்களிலோ, லட்சம் பேருக்கும் ஒரு கோயில் இல்லை. கிறிஸ்தவர்களில் அவர்களுக்கென்று ஏற்பட்டுள்ள கோயில்களினால் முழுப்பலன் அடைகிறார்கள். இந்துக்களில், சில வைதீகர்களைத் தவிர மற்ற மக்களில் பெரும்பான்மையோருக்குக் கோயில்களினால் யாதொரு பயனும் கிடைப்பதில்லை. கிறிஸ்தவ ஆலயத்தை ஒட்டிப் பள்ளிக்கூடம், சமய போதனை, ஞாயிறு வகுப்பு, வைத்திய சிகிச்சை, சமூக சேவை, துன்ப ஆறுதல், சமயப் பத்திரிகை முதலிய நன்மைகள் எல்லாம் கிடைக்கும். இந்து ஆலயங்களிலோ அப்படிப்பட்ட வசதிகள் ஒரு சிறிதும் செய்யப்படவில்லை. ஆகவே சமய உணர்ச்சி எவ்வாறு இந்துக்களில் பெருகும்? இந்தப் பரிதாபமான நிலைமையே நமது நாட்டிலிருக்கும்போது சமயத்தில் நமது நாட்டு மக்கள் அளவுக்குமிஞ்சி ஈடுபடுகிறார்கள் என்று கருதும் மேடைப்பேச்சு எவ்வாறு உண்மை

யென்று சொல்லக் கூடும்? பத்திரிகைகளில் அவ்வாறு எழுதும் மக்களும் உண்மை நிலையைக் கண்டு எழுதுகிறார்களா என்பது சந்தேகம். இந்த நிலைமை தென்னாட்டில் மட்டுமன்று, இந்தியா முழுவதுமே இருக்கிறதென்று கூறலாம். சமயப் பிடிப்பு நம்மைவிட்டு நீங்கவேண்டுமென்று பேசுகிறவர்கள் பெரும்பாலும், சில அரசியல்வாதிகளே ஆவர். புதிதான அரசியல் கொள்கைகளில் ஈடுபட்டு மேடைமேல் ஏறிப் பேசுகிற சில இளைஞர்களே இவ்வித வாக்குவாதங்களில் ஈடுபடுகிறார்களென்று அறியவேண்டும்.

2. மற்றொரு தப்புக் கருத்து: நமது நாட்டுப் பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் நம்மைவிட நாகரிகச் செழிப்பில் நிலைத்து ஓங்கிக் கொண்டிருக்கும் அமெரிக்காவுடன் அடிக்கடி ஒப்பிட்டுப் பேசுவதும் எழுதுவதும் உண்டு. அமெரிக்கர்கள் இவ்வாழ்விற்கு ஏற்றபடி பொருள் அதிகரிப்பைச் சிந்தித்துப் பெறுகிறார்களே ஒழிய மனோ வாக்குகளுக்கு எட்டாத சமய தத்துவங்களில் ஈடுபடுவதே இல்லை என்றும், நாமும், சமய ஈடுபாடாகிய பழைய கொள்கைகளை விடுத்துப் பொருள் துறையில் சிந்தையைச் செலுத்தி முன்னேற வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசுகிறார்கள். இவர்கள் வெளியிடும் இந்தக் கருத்தில் இரண்டு கூறுகள் இருக்கின்றன. அவ்விரண்டும் தவறானவையே. முதற் கூறு அமெரிக்கர்கள் சமய ஈடுபாடின்றிப் பொருளீட்டத்திலேயே சிந்தை செலுத்துகிறார்கள் என்பதாகும். 2-வது கூறு நாம் பொருள் வருவாய் எண்ணாது சமயச் சிந்தனையிலேயே காலம் கழிக்கிறோம் என்பது. நம்மைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் கருத்து பிசகானதென்று மேலே கூறியிருக்கின்றோம். இனி அமெர்க்கர்களைப்பற்றிக் கொண்டிருக்கும் கருத்தும் சுத்தப் பிசகானதென்று அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் எழுதின கட்டுரையிலிருந்தே எடுத்துக் காட்டுவோம்.

“சென்ற 30-ஆண்டுகளாகப் பரிசிலனைகளும் முயற்சிகளும் எடுத்துக்கொண்டு சமயச் சேவைகளின் மூலம் ஆன்மீக முன்னேற்றத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்திப் பல திட்டங்களையும் செய்துகொண்டு வந்திருக்கின்றோம். இனி மேலும் அவ்வாறு செய்ய நமக்கு உறுதிப்பாடு இருக்கிறதென்று அறிவோம்.



சென்ற 30-ஆண்டு அளவில் நமது நாட்டுத் தேவாலயங்களின் தொகை 2,28,880 இருந்து, 2,81,511 வரை அதிகப்படுத்தியிருக்கிறோம். ஆலயத்து அங்கத்தினர் தொகையும் 4,65,90 000 இருந்து 888,30,000 வரை ஏற்றியிருக்கிறோம். மக்கட் பெருக்கம் 46-சதவீதம் அதிகரித்திருக்க ஆலயத்து அங்கத்தினர் 86·4 சதவீதம் பெருகியிருக்கின்றார்கள். ஆண்டுதோறும் சமயச் செய்கைகளுக்காக நாம் செய்யும் செலவு மும்மடங்கு ஏறி வந்திருக்கின்றது. 1950-வது ஆண்டில் மட்டும் ஒரு நாள் ஒன்றுக்கு சராசரியாக 10 கோயில்கள் கட்டப்பட்டன.

ஒரு முக்கியமான குறிப்பு என்னவென்றால் கோயில் அங்கத்தினரைக் காட்டிலும் ஞாயிற்றுக்கிழமை வகுப்புகளுக்குச் சேரும் மக்கள் எண்ணிக்கை வெகு விரைவாக முன்னேறிக்கொண்டு செல்லுகிறது. அவ்வகுப்புக்களில் கற்பிக்கப்படும் போதனை வியக்கத்தக்க நம்பிக்கையை உண்டுபண்ணுகிறது. இந்த முடிவை காணும்போது நமது இளைஞர்கள் ஒருக்காலும் தளர்ச்சி அடைய மாட்டார்கள் என்று உறுதியாய்க் கூறலாம். மானிட அறிவு வளர்ச்சி செய்தன்றுபோலத் தகுந்த அஸ்திவாரத்தின்பேரில் கட்டப்பட்டுள்ளது. பல நூற்றாண்டுகளாக நாம் பெற்ற தேர்ச்சிகளெல்லாம் உறுதி பெற்ற அஸ்திவாரம்போல நின்று இருக்க அதின்பேரில் இப்போது செய்பவைகளை அமைத்து வருகின்றோம்.

• நாம் கட்டிவரும் அஸ்திவாரமானது முந்திய தலைமுறைகள் கொண்டதைக் காட்டிலும் அகலமாகவும், வலுவாகவும் இருக்கின்றது. முன்னாளில் ஆன்மீக முயற்சி என்ன செய்து வந்ததோ அதைப்போலவே எதிர்காலத்திலும் அதன் வலுவை நிலைநிறுத்தி வரும். அந்த முயற்சி நமக்குள் நம்பிக்கை தந்து இனிமேல் குறையாத வளர்ச்சியில் பெருகுவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களை நமக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும்.”

இப்படிப்பட்ட உறுதி கொண்ட மொழிகளை ஒரு அமெரிக்க எழுத்தாளர் சமயத் திருவிழா ஒன்று நிகழ்ந்தபோது அதனைக் கண்டு ஆறுதல் அடைந்து எழுதியிருக்கின்றார். அவர் எழுதினது கிறிஸ்து சமய வளர்ச்சியைக் குறித்து. ஆனால் அந்தக் கொள்கை எல்லாச் சமயத்தார்

களுக்கும் ஒக்குமல்லவா? சமயக் கொள்கைக்கு மட்டும் அல்ல, சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம், நியாயம் முதலிய எல்லாப் பண்புகளுக்கும் ஒக்கும் என்று கூற வேண்டும்.

மேலே கூறிய அமெரிக்க எழுத்தாளரின் கருத்துக்களைச் சிறிது ஆராயுங்கள். அவர் கூறியிருக்கும் கணக்குப்புள்ளிகளை நன்றாகக் குறித்துக் கொள்ளுங்கள். அமெரிக்காவில் உலகாயதமும், பிழைப்புப் பகுத்தறிவுமே குடிகொண்டிருக்கின்றன என்று எண்ணிக் கொண்டிருக்கிறோம். அவைகள் தாம் நம் கண்களுக்கெதிரே பருப்பொருள்களாகத் தோன்றுகின்றன. சமயப் பெருக்கமும், அதன் வளர்ச்சியும் நமக்குத் தெரிவதில்லை. அந்த நாட்டு அறிஞர்களுக்கு மட்டும் தெரிகின்றது. அந்த நாட்டில் பொருள் பெருக்கத்திற்கு எத்தனை செலவு செய்கிறார்களோ அதைவிட அதிகமாக சமயப் பெருக்கத்திற்கும் முயற்சிகள் செய்து வருகிறார்கள். இதற்கு ஒரு காரணமும் கூறலாம். தற்போதைய அமெரிக்கக் குடிகள் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன் இங்கிலாந்திலிருந்து சமய ஈடுபாட்டின் காரணமாகத்தான் தாய் நாட்டைவிட்டுப் புதுக்கண்டத்திற்குக் குடியேறினவர்கள். முன்பின் தெரியாத ஜனங்களுக்குத் துன்பங்கள் வரும் என்று எதிர்பார்த்தே தமது சமயக் கொள்கைகளை வழிபட்டுப் பாதுகாக்கும் பொருட்டு அமெரிக்கா சென்று குடியேறினார்கள். அவ்வகையாக மதப்பற்று மிகுந்த வீரர்களின் சந்ததியார்கள் எத்தனை நூற்றாண்டு ஆனபோதிலும் தம் அருமைக் கொள்கைகளை விட்டுக்கொடுக்க மாட்டார்கள் அல்லவா? அந்தக் காரணத்தினால்தான் நாள் ஒன்றுக்கு 10 புதுக்கோயில்கள் கட்டுகிறார்கள். அவைகளைப் பராமரிக்கச் செலவும் செய்கிறார்கள். அவைகளுக்குத் தவறாமல் சென்று வழிபாடும் இயற்றுகிறார்கள். சமயக் கொள்கைகளை வாழ்க்கையில் புகுத்தி நன்மையும் பயனும் பெறுகிறார்கள். அந்த நம்பிக்கையின் பயனைப் பொருள் ஆதாரத்திலும், முன்னேற்றமும் வெற்றியும் பெறுகிறார்கள். நமது நாட்டில் அவ்வாறு உண்டா?

3. **நமது சமய நிலையங்கள்:** நமது சமய நிலையங்கள் மூன்றுவகைப்படும் என்று பலதடவைகளில் உணர்த்தியிருக்கின்றோம். அவைகள், ஆலயம், மடம், கழகம் என்பன.



இம்மூன்றில் ஆலயம்தான் தோற்றத்தில் மிகப் பருப்பொருளாக எதிர்நிற்கின்றது. மடம் என்பது முற்காலத்தில் சிறந்திருந்து நாளாவட்டத்தில், களைகள் ஏறி அவற்றின் தீங்கினால் பலன்கள் குறைந்து கொண்டே வந்து தற்போது மிகக் குறுகிய அளவில் காட்சி தந்துகொண்டிருக்கின்றது. சமயக் கழகங்களோ எந்தவிதமான ஒற்றுமையும் வடிவும் இன்றி இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிருக்கின்றன. இந்த நிலையில் நமது மூவகை நிலையங்களும் இருக்கின்றன. இந்தச் சீர்கெட்ட நிலைமையில் நாம் இருக்கும்போது எப்படித்தான் நம்மை அமெரிக்கர்களுக்கு ஒத்திட்டுப் பார்ப்பதோ அறியோம்.

அமெரிக்கர்கள் பல்லாயிரக்கணக்கில் ஆலயங்களை எழுப்பிக் கொண்டிருக்க நாமோ பண்டைய ஆலயங்களையே பழுது பார்த்துப் பாதுகாக்க முடியவில்லை. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மூவேந்தர்கள் கட்டிவைத்த பெருங்கோயில்கள் நமது பண்பாட்டின் சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருந்தும் அவைகளை ஒரு சிறிதும் நாம் வளர்த்தவில்லை. இனி, புதிய நிலையங்களை எவ்விதமாகக் கட்டுவோம், எவ்வாறு வளர்ப்போம், தற்காலம் எத்தனை மக்களுக்கு ஒரு கோயில் இடம் தருகிறது என்று யாராவது கவனிக்கின்றார்களா? இப்படியாயின் உண்மையான சமய ஈடேற்றம் நமது நாட்டில் எவ்வாறு இருக்கும்.

இனி, 2–வது நிலையமாகிய மடத்தைப் பற்றிக் கூற வேண்டியதேயில்லை. முந்நாளில் மடமானது சிஷ்யகோடிகளின் சமய போதனைக்காக ஏற்பட்டிருந்தது. இந்நாளிலோ சிஷ்யகோடிகள் என்றால் மடத்தார்கள் அஞ்சுகிறார்கள். வெறுக்கவும் செய்கிறார்கள். ஒன்றிரண்டு மடங்களைத் தவிர பெரும்பான்மையான மடங்கள் மக்களின் பொருட்டு இருக்கிறதில்லை. மடத்து அதிபர்களின் பொருட்டே பிழைத்து வருகின்றன. அப்படிப்பட்ட மடங்கள் இருந்து பயனில்லை. சீர்திருத்திக் கொள்ளாவிட்டால் அழிந்து போவதே நல்லது.

இனி மூன்றாவதான நிலையம் ஆகிய கழகம் நமது நாட்டில் மிகத் தாழ்ந்த நிலைமையில் இருக்கின்றது. வேறு நாடுகளில் கழகங்களினால்தான் கோயிலும் மடமும் போற்றப்பட்டு வருகின்றன. கழகம் என்பது மக்கட் தொகுதி

அதில் அறிஞர்கள் சேர்ந்து உழைத்தால் அதுவும் சீர்திருத்தம் பெற்று மற்றை இரண்டையும் ஆதரித்து நிற்கும். நமது நாட்டில் கணக்கற்ற கழகங்கள் தோன்றி நின்று, அழிகின்றன. காளான் அல்லது நாய்க்கொடையின் ஆயுள் தான் அவைகளுக்கு உண்டு. அவைகள் நிரந்தர ஆயுள் பெற்று நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் சேவை செய்யும்பட்சத்தில் அவைகளும், நாடும் முன்னேற்றம் அடைவது திண்ணம்.

4. நமது சமாஜம்: தென்னாட்டுச் சமயக் கழகங்களில் நமது சமாஜம் முன் அணியில் நிற்பவைகளில் ஒன்று. சென்ற 47–ஆண்டுகளாக அது சமயத்திற்கும், நாட்டிற்கும் கணக்கற்ற அரிய சேவைகள் செய்துவந்திருக்கின்றது. 1905–முதல் அது செய்திருக்கும் சேவைகளை ஒழுங்காக எழுதினால் ஒரு பெரும் நூலே ஆகும். ஆனால் அவைகளைப் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியும் வகையில் நிரந்தரமான செய்கைகள் ஏற்படவில்லை. பல்லாயிரக்கணக்கில் வெளியிட்ட இலவச சமய நூல்கள் சமாஜம் செய்த வேலைக்குச் சான்றுகளாக இருக்கக்கூடும். ஆனால் அவைகள் சில சமய அன்பர்களின் வீடுகளில் பார்த்து அறியலாமே தவிர ஒரு குறிப்பிட்ட நூல் நிலையத்தில் வைக்கப்படவில்லை. சமாஜத்தின் திங்கள் வெளியீடாகச் சித்தாந்தம் என்ற பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதில் அருமையான சமயக் கட்டுரைகளும் ஆண்டுவிழாப் பேச்சுகளும் அறிக்கைகளும் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளைக்கொண்டு சமாஜத்தின் வேலையை நன்கு அறியலாம். அச்சித்தாந்தத் தொகுதிகளும் ஒழுங்காக ஒரு நிலையத்தில் வைக்கப்படவில்லை.

ஆண்டுதோறும் ஆண்டுவிழாவும் சமயச் சொற்பொழிவுகளும் நடந்து வருகின்றன. தலைமைப் பேச்சுகளாவது, தனியாக ஓரிடத்தில் தொகுத்து வைக்கப்படவில்லை. ஆண்டுக்கொருமுறை ஆயிரக்கணக்காக பணச் செலவு செய்து, பாணவேடிக்கைபோல திருவிழாக்களை நடத்திப் பயனென்ன? சமாஜம் செய்யும் வேலைகள் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்றால் அதற்கு ஒரு தனி நிலையம் வேண்டாமா? அச்செய்திகளைக் காட்டும் சான்றுகள் முழுவதும் அதில் அமைக்கப்பட வேண்டாமா? அமெரிக்க,



ஐரோப்பா முதலிய இடங்களில் எந்த இயக்கத்திற்கும் ஒரு தனி நிலையம் உண்டு. ஒரு நிலையம் மட்டுமல்ல, ஒரு நடுநிலையமும், பல கிளை நிலையங்களும் தோன்றிப் பெருகி வரும். சமய இயக்கத்திலோ நிரந்தர நிலையங்கள் மிக அவசியம். கோயில்களே யன்றிச் சமயக் கழக நிலையங்களும் அங்கே ஏற்படுகின்றன. நமது சமாஜம் ஒரு சமய இயக்கம் ஆதலால் அதற்கு ஒரு நடுநிலையம் வேண்டாமா? அமெரிக்காவில் நாள் ஒன்றுக்கு 10 கோயில்கள் கட்டி முடித்தார்கள் என்றால் நமது சமாஜத்திற்கு 50–வருஷத்தில் ஒரு நடுநிலையம் ஆவது அமைக்கவேண்டாமா? அதைப் பற்றிச் சிந்திப்பதற்கு இதுவே தகுந்த தருணம்.

நமது சமாஜத்தார் தொடக்கத்திலேயே நடுநிலையம் ஒன்று தாபிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. பிறகு ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திலும் ஒரு நடுநிலையமும், புத்தகசாலையும் நிறுவிக்க வேண்டுமென்று பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஒரு சொந்த நிலையம் ஏற்படவில்லை. மீண்டும் 1917–ஆம் ஆண்டில் சபாஇரத்தின முதலியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் சமாஜத்திற்காக ஒரு நிலையம் கட்டவேண்டுமென்று தீர்மானித்து, அதற்காக இராஜு கிராமணியார், மயிலாப்பூரில் அதற்கு வேண்டிய நிலத்தைக் கொடுப்பதாகவும் 42 அன்பர்கள் தொகைகள் கொடுப்பதாகவும் கையொப்பமிட்டிருக்கிறார்கள். இந்தச் செய்தி அந்த ஆண்டு அறிக்கையில் அச்சிடப்பட்டுள்ளது. அப்போது வசூலித்த தொகையும் கையொப்பமிட்ட தொகைகளும் உத்தேசித்த நிலமும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. நிலையம் ஒன்று ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பிறகு 1941–முதல் பல ஆண்டு விழாக்களில் நடுநிலையத்தைப் பற்றிய பேச்சுக்களும் தீர்மானங்களும் முயற்சிகளும் கூடத் தோன்றின. ஆனால் அவைகளும் சித்தியானதாகத் தெரியவில்லை.

இந்த ஆண்டாவது நடைபெறும் விழாவில் நடுநிலையத்தைப் பற்றிப் பேச்சு அளவில் நிறுத்தாமல் செயல் முறையில் கொண்டுவர வேண்டும். மூன்று ஆண்டுகளில் வெள்ளி விழா நடத்தவேண்டும். அப்போது ஒரு நடுநிலையமும், ஒரு நூலகமும் நமது சமாஜத்திற்கு இருக்கின்றன என்று

தோற்றுவித்தாலன்றி, நமது முந்திய செயல்கள் எல்லாம் பகட்டுகள்போல பயனின்றி மறைந்து போகும். மேலே கூறியபடி அமெரிக்காவில் நூறுயிரக்கணக்கில் சமய நிலையங்கள் தோன்றிக் கொண்டிருக்க, 50-ஆண்டு அரிய வேலை செய்து வருகிற சமாஜத்திற்கும் ஒரு நிரந்தரமான நிலையம் இருக்கவேண்டுமென்ற உறுதி அன்பர்களுடைய நெஞ்சில் படியவேண்டும். இது ஒரு சிறந்த திருத்தொண்டாகையால் இதனைக் குறித்துப் பன்னிப்பன்னி மீண்டும் மீண்டும் வற்புறுத்தி எழுதிவர வேண்டும். இனி அன்பர்கள் ஊக்கங்கொண்டு எண்ணின காரியத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வருவார்களாக.

---

## 2. தலப்பகுதி

# 1. திருமாகறல்

1. இடம் : செங்கல்பட்டு வட்டத்தில் காஞ்சீபுரத்திற்குத் தெற்கே 11 கல்லில் உள்ளது. சேயாற்றின் வடகரையில் உள்ளது. ஊர் சிறியது. இதற்குச் செல்லும் வழியில் வேகநதி பாலாறு என்ற இரண்டு ஆறுகளையும் கடக்க வேண்டும். பாலாற்றிற்கு அணைவழியும் கிடையாது. ஊரில் 2000 மக்கள் இருக்கலாம். பாதிப்பேர் அரிஜனங்கள்.

பத்து ஆண்டுகளின் போது திருத்தேர் இழுக்கையில் சக்கரம் ஒரு குழியில் இறங்க மேல்தளம் உடைந்து முன்னால் சாய்ந்தது. அருகில் இருந்த போலீஸ் உத்தியோகஸ்தர் உள்பட ஐந்து பேர்கள் இறந்தனர். சிறிது எச்சரிக்கையாக இருந்திருந்தால் இந்த விபத்து நேர்ந்திருக்காது.

2. கோவில் : கருங்கற்பணி. ஆனால் செப்பனிடப்படவில்லை. முன் வாயில் கோபுரம் இல்லை. தொடங்கியது நின்றுவிட்டது. வடக்கிலும் மேற்கிலும் மதில்கள் விழுந்து விட்டன. உள்மண்டபங்கள் இருட்டு. காற்றிற்கும் வெளிச்சத்திற்கும் ஆக எடுத்துக்கட்டுக்கள் அமைக்க வேண்டும். வாகன மண்டபத்தில் தூண்கள் மட்டும் நிற்கின்றன. மேல்தளம் இல்லை. அறுபத்துமூவர் மண்டபம் செங்கல் சுவரால் மூடப்பட்டுள்ளது. உள்ளே இருட்டு இச்சுவரை எடுத்துவிடலே நன்று. மூலஸ்தானம் வெகு அழகாக இருக்கிறது. அது யானை முதுகு என்ற அமைப்பில் உள்ளது (கஜப்பிருஷ்டம்). அம்மன்கோயில் தெற்கு நோக்கி இருக்கிறது. கோயில் சுத்தமாக வைக்கப்படுவதில்லை.



3. மூர்த்திகள் : சுவாமி அடைக்கலம் காத்தநாதர். தேவி புவனநாயகி அல்லது திரிபுவன சுந்தரியம்மை.

தீர்த்தம் சேயாறு. மூலஸ்தானத்தில் சுவாமி ஒரு நீண்ட மால்போன்ற வடிவில் இருக்கின்றார். தலமான்மியத்தில் அதனை உடும்பின் உருவம் என்று கூறப்பட்டுள்ளதாம். புராணம் கிடைக்கவில்லை.

4. பதிகம் : தேவாரப்பதிகம் சம்பந்தரால் பாடப்பெற்றது.

“ விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி
நீடுபொழின் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்க
ளுவினைக ளுருமுடனே.

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி
யாடல்கவி னெய்தி யழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகற லுளான்
இலையின்மலி வேலுனைய சூலம்வல
னேந்திஎரி புன்சடையினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை
யேத்தவினை யகலுமிகவே.

கடைகொணெடு மாடமிக வோங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி
கூடுசம் பந்தனுரையால்

மடைகொள்புன லோடுவயல் கூடுபொழின்
மாகறலு ளானடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்க
டொல்வினைக ளொல்குமுடனே.

5. கல்வெட்டுக்கள் : இக்கோயிலில் 6 கல்வெட்டுக்களும், பெருமாள் கோயிலில் 5 கல்வெட்டுக்களும் உள்ளன. சோழர்கள் கல்வெட்டு 9-ம் பாண்டியர் கல்வெட்டு இரண்டும் உள்ளன. அவைகளின்படி எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என்று ஊர்ப்பெயரும், சுவாமியின் பெயர் அகத்தீசுவர் என்றும் அறிகிறோம். சுந்தரபாண்டியன் காலத்தில் (1251–1264) சாமனவரதன் என்பவன் அகத்தீசுவரர் ஆலயத்தைச் சுற்றிலுமிருந்த இடங்களில் புதிதாகத் திருவீதிகளும் திருமடை விளாகங்களும் கட்டினான்.

இனி வைகுந்தப்பெருமாள் கோயில் கல்வெட்டுக்களின்படி இராசராசச் சோழன் III நாளில் இக்கோயில் பெருமாளுக்குத் திருமேற் கோயில் வீற்றிருந்த பெருமாள் என்று பெயர் இருந்ததாம். அதே அரசன் 23-ம் ஆண்டில் ஸ்ரீவிமானம் (மூலஸ்தானம்), திருவர்த்தமண்டபம், திருமண்டபம், சோபானம் (படி), ஸ்ரீபீடம் முதலியன அவ்வூர்க்கு பட்டியர்போயன் கட்டினான்.

தாயார் சந்நிதியில் முன்புறத்தில் ராசராசன் 6-வது ஆண்டில் இச்சந்நிதி கட்டப்பட்டதாம்.

இக்கோயிலில் மெய்க்கீர்த்திகளைத் தவிர வேறு இரண்டு செய்யுள்களும் இருக்கின்றன.

1. திருமன்னு சீராசராசற்கி யாண்டு சென்ற
இருபத்துமூன்றுவதில் செந்தளிச் சூழ்
மருமன்னும் பொழில் திருமாகறல் திருமேற் கோயில்
மன்னி வீற்றிருந்த பெருமாளுக்கு மண்மேல்
கருமன்னு சீவிமான மத்தமண்டப மேல்கலந்த
மண்டபத்தொடு சோபானஞ்சீ பீடம்
தருமன்னும் கொடை பட்டியர் போயன் மணியன்
தரும் பொருள்கள் செய்வித்தான் தருமநிலை பெறவே.



2. சீராச ராசற்காண் டாறிற்றென் மாகறற்
பாரார் புகழண்டம் பாக்கிழான்—சாரார்
தரும்போர்க் கருந்திருவன் காழன் முருகன்
திருக்கோயில் செய்தான் சிறந்து.

---

# 2. திருவிரிஞ்சிபுரம்*

1. இடம் : இத்தலம் தொண்டை நாட்டில் வடார்க்காடு ஜில்லாவில் உள்ள வேலூருக்கு நேர்மேற்கே 7 கல்லிலும் (மைலிலும்), காட்பாடியிலிருந்து பெங்களூர் செல்லும் ரயில் பாதையில் 3-வது ஸ்டேஷனை விரிஞ்சிபுரத்திலிருந்து தெற்கே 2½ கல் தூரத்திலும் உள்ளது. இது பாலாற்றின் தென்கரையிலுள்ளது. இதற்கு வேலூரிலிருந்து மோட்டார் முதலிய போக்குவரத்து வசதியுண்டு.

2. கோயில் : மிகப் பழைய கோயில். இது ஐந்து கோபுரங்களும், ஐந்து ஆவரணங்களும் (பிராகாரங்களும்), சுமார் 30 அடி உயரமுள்ள கருங்கல்லாலாகிய வேலைப்பாடமைந்த அழகிய மதிற்சுவரும், நூற்றுக்கால் மண்டபம் முதலிய பல மண்டபங்களும், சிங்க புஷ்பகரணி முதலிய தீர்த்தங்களும், ஓர் உயரிய துவஜஸ்தம்பமும் (கொடிமரமும்), கஜபிரஷ்ட பிரணவத்தூபியுடைய கர்ப்பக்கிரகமும் கொண்டு விளங்குகின்றது. இவற்றுள் மேற்குக்கோபுரம் மட்டும் சிதலப்பட்டுள்ளது.

3. மூர்த்திகள் : சுவாமி பெயர் ஸ்ரீமார்க்கசகாயர், மார்க்கபந்தீசர் (வழித்துணைவர்); அம்பிகை பெயர் ஸ்ரீமரகதவல்லி, சுவாமி சுயம்புமூர்த்தி, நீண்ட திருமேனி. முதல் நான்கு ஆவரணங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க மூர்த்திகள் உமாமகேசர், நிருத்தகணபதி, சொர்ணகணபதி, வல்லபகணபதி, சப்தமாதாக்கள், அஷ்டோத்திர

* இஃது, சித்தூர், சித்தாந்த சைவ வளர்ச்சிக் கழகத்தினரின் 18-வது ஆலய வழிபாடு திருவிரிஞ்சைப்பதியில் 23-3-52ல் நடைபெற்றபோது, ஷை சழகத் தலைவரால் எடுக்கப்பட்ட குறிப்புக்களின் சாரமாகும்.

186884

சதநாமலிங்கம், சகஸ்ரலிங்கம், ஹரிஹரபுத்திரர், சிவசர்மர் முதலியனவாகும். ஐந்தாம் ஆவரணத்தில் குறிப்பிடத்தக்க மூர்த்திக் கோயில்கள் திருப்பிரமேசர் கோயில், வீரபத்திரர் கோயில், அப்பையதீக்ஷிதர் கோயில், காளி கோயில் முதலியனவாகும்.

4. தல மகிமை: பரமசிவன் ஒரு சமயம் பார்வதியை காளி (கருநிறமுடையவள்) என அழைக்க, அதற்கு நாணி, அச்சக்தி இங்கு எழுந்தருளி நோன்புநோற்று மரகதவல்லி எனப் பெயர் பெற்றாள். ஆதலின் " கௌரிபுரி " எனவும், விஷ்ணு பூசித்ததால் " விண்டுபுரி " எனவும், அருணையில் முடிகாணாது அவத்தையுற்ற விரிஞ்சனால் (பிரமனால்) பூசிக்கப்பட்ட காரணத்தால் " விரிஞ்சிபுரம் " எனவும், கரன் பூசித்து வழிப்பட்டதால் "கரபுரி" எனவும் சிறப்புப் பெயர் பெற்றுள்ளது.

சிவசருமன் என்னும் ஆதிசைவ இளைஞர் தனது உரிமைப் பூசனையை நிறைவேற்ற, அவற்காக இறைவனும் இலிங்கமூர்த்தி திருமுடி வளைத்துத்தந்த வரலாறும், குந்தளபுரியிலிருந்து கொண்டுவந்த மிளகு வியாபாரிக்கு இறைவன் வழித்துணைபுரிந்து " மார்க்கசகாயர் " என திருப்பெயர் கொண்ட வரலாறும், அத்தலபுராணத்தால் அறியத்தக்கதாகும். தலம் தீர்த்தம் மூர்த்தி விசேடம் பெற்ற ஓர் வைப்புத்தலமாகும். இங்கு நடைபெறும் திருவிழாக்களில் கார்த்திகைமாதக் கடை ஞாயிறு விழா மிகச் சிறப்புடையது.

5. நூல்கள் : திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய காப்புத்திருத்தாண்டகத்தில், " தெண்ணீர்ப்புனற் கெடில வீரட்டமும் " என்ற பாசுரத்தில், " கண்ணார் நூதலார் கரபுரமும் " எனவும், பட்டினத்தார் பாடலில், " கான் சாயும் வெள்ளிமலை " என்ற செய்யுளில், " ஊன்சாயும் சென்மம் ஒழித்திடுவாய் கரபூரனுக்கா " எனவும், இத்தலம் பற்றிய குறிப்பு வருதல் காண்க. இன்னும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் திருக்கரபுரம், கரபுரி, திருவிரிஞ்சை என்று குறிப்பிட்டுப் பாடிய பாடல்கள் ஆறு வந்துள்ளன. தனிப் பாடற்றிரட்டில் இரட்டைப்புலவர் இத்தலம் பற்றிப் பாடியதாக 14 செய்யுட்கள் உள்ளன. " திரு



விரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் " என்ற பிரபந்தமும், சைவ–எல்லப்பநாவலர் இயற்றிய 'திருவிரிஞ்சைப்புராணம்' என்னும் தலபுராணமும் இத்தலத்திற்கு உள்ளது. கல்வெட்டுக்களும் பல உள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தலத்திற்கு அன்பர்கள் பலரும் சென்று பிறவிப் பெருங்கடல் கடக்க, பெருமானின் வழித்துணை வேண்டி வழிபட்டு இன்புற்று உய்வாராக.

---

## 3. சமயப்பகுதி

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 68-வது ஆண்டுவிழாவில்

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிகசுவாமிகள்

அருளிய

# தலைமை உரை

(26-5-52)

(மலர் - 25 ; இதழ் - 7 ; பக்கம் 281இன் தொடர்ச்சி)

இச் சிவநெறி மிகப் பழைய காலத்திலிருந்து இன்று வரை மக்கட் சமுதாயத்தின் வாழ்க்கையிலே அமைந்து விளங்கி வருகின்றது. தமிழ்மக்களது அன்பின் பெருக்காலும், ஊக்கத்தின் ஊட்டத்தாலும் வளர்ந்து வளம் பெற்று வந்திருக்கிறது. சங்க காலத்தில் சிவநெறியும் அதன் வழிபாடும் மிகச் சிறந்த முறையில் இருந்திருக்கிறது. சங்க இலக்கியங்களில் சிவபெருமானது பெருமைகளும் வழிபாட்டு முறைகளும் பேசப்படுகின்றன. பின் வந்த தமிழ்ப்பெருங் காவியங்களெல்லாம் சிவபிரானது பெருமையைப் பேசுகின்றன. " பிறவா யாக்கைப் பெரியோன் " என்று சிலப்பதிகாரம் சிவபெருமானைப் போற்றுகின்றது. "போகம் ஈன்ற புண்ணியன்" என்று சிந்தாமணி புகழ்கின்றது. "நுதல்விழி நாட்டத் திறையோன் " என்று மணிமேகலை வாழ்த்துகின்றது, இங்ஙனம் அறிவுடைப் புலவர் பெருமக்களால் சங்க காலம் முதல் இலக்கியங்களின் மூலம் சைவம் வளர்க்கப்பெற்றது. சைவத் திரு

நெறியின் வளர்ச்சியிலே தமிழ் மன்னர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. தமிழ் மன்னர்கள் தமது வெற்றியின் சின்னமாகச் சிவபெருமானுக்கு விண்ணளாவும் மாண்புடைய திருக்கோயில்கள் பல எடுத்தனர். திருக்கோவில்களுக்கு நிறைய இறையிலியாக - நிபந்தங்களாக நிலங்களை விட்டு முன்னேன் பூசையை முட்டின்றி நடத்தினர். சமண பௌத்த சமயங்களின் பேராபத்திலிருந்து, தமிழகத்தைக் காத்துச் சிவநெறியை நாடெங்கும் பரப்பிய நாயன்மார்களின் அருண்மொழிகளை மக்களிடையே பரப்பினர். திருமுறைகளை ஓதித் திருந்திய வாழ்க்கையை நடத்த மக்களை ஆற்றுப்படுத்தினர். தாமே சிவபூசை முதலியன அன்புள்ளத்தோடு செய்து தமது வழி நிற்கும் மக்களையும் நன்னெறியிற் செலுத்தினர். தமிழ்ப் பேரரசர்களுக்கு முன்னும் பின்னுமாக சைவத்தின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட மடாலயங்கள் பல எழுந்தன. அவைகள் தோன்றிய காலத்திலும் பின்னரும் செய்த சமயப் பணிகளை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இங்ஙனம் புலவர்களாலே - இலக்கியங்களாலே - திருமுறைகளினாலே - மடாதிபதிகளாலே சைவம் வளர்ந்து வந்தது.

## சைவத்தின் சாதனங்கள்

சைவத்தின் சாதனங்கள் அருமையில் எளியன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு திறத்தனவாம். இவற்றையே வேறு முறைகளாலும் பேசும் மரபு உண்டு.

இந்நெறிகளின் தொடர்பைத் தாயுமான அடிகள் அரும்பு, மலர், பிஞ்சு, காய் என்று உவமைகளின் மூலம் தொடர்பு படுத்தி விளக்குவார். இச்சாதன நெறிநின்று விதித்தன செய்தல், வேள்வி வேட்டலினும் உயர்வாம். வேதத்துள் விதித்தவேள்வி முதலியன நிலையற்ற இம்மைப் பயன்களையே தரவல்லன. அவை சிவஞானத்தைத் தரவல்லன அல்ல. சிவஞானம் தராததோடன்றித் தீவினை போல் அச்சிவஞானம் நிகழவொட்டாது தடை செய்து நிற்கும். தீவினைகள் கரும்பொன் விலங்கும், வேதத்துள் விதித்த வேள்வி முதலிய நல்வினைகள் செம்பொன் விலங்குமாம் என உணரற்பாலன. வேள்வி முதலிய அறங்களின் பயன், முன் பசித்து உண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியால் வரும் இன்பத்தைப் போலும். சரியை முதலிய அன்பு நெறிகளால் எய்தப்படும் சிவஞானம், பசித்துண்டு பின்னும் பசித்தலில்லாத அமரர்களது அமுத உண்டியாலாய பயனைப் போலும். அமுத உண்டி, நரை திரை மூப்பின்றி நிலைபெறுதலாய பயனைத் தருதலோடு பசி தீர்தலாகிய அவாந்தரப் பயனையும் தருதல் போலச் சரியை முதலியனவும், சிவஞானத்தைப் பயத்தலோடன்றித் தத்தம் பதி முத்தியாகிய அவாந்தரப் பயனையும் தரவல்லன. ஞானத்தாலன்றி வீட்டின்பத்தைப் பெறுதல் முடியாது. சரியை முதலியன ஞானத்தைக் காட்ட, அந்த ஞானம் திருவடி இன்பத்தைக் கொடுக்கும். மேலாய திருவடி இன்பத்தை ஞானமே தருதலால் அதனை மெய்கண்ட தேவர் “நன்னெறியாகிய ஞானம்” என்பர்.

சரியை முதலிய நெறிகளில் நிற்பார், திருக்கோயில் வழிபாடு, குருவழிபாடு, சிவனடியார் வழிபாடு முதலிய சைவ வழிபாட்டு நெறிகளில் தவறாது நிற்பர். உணர்ந்தவர்கள் உள்ளத்தில் ஒளிவளர் விளக்காக அமைந்திலங்கும் சிவபெருமான், கருணையின் காரணமாக யாவரும் வழிபட்டுய்ய அருளுருவம் தாங்கி ஆலயங்களில் இருந்து அருள் வழங்குகின்றார். “திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே” என்று நம்பிக்கையின் சிகரமேறி அன்பின் வழி நின்று, சித்தம் சிவமாய நிலையில் வழிபடுவார்க்குத் திருவுருவங்களில் வெளிப்பட்டு அருள் வழங்குவன். உயிர்கள் முத்திறத்தன; அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப் பேசப்பெறும். சகலான்மாக்களுக்குச் சகலான்மாக்களைப் போலவே உருவம் தாங்கி வந்து உபதேச வாயிலாகவும், நூல் வாயிலாகவும் அனுபவ வாயிலாகவும் அறிவுறுத்தி மலபந்தங்களினின்றும் நீங்கி சிவஞானம் பெறத் துணை செய்வார். இங்ஙனம், பேருதவி செய்கின்ற குருமூர்த்திகளைச் சிவமே எனக்கருதி வழிபடுதல் வேண்டும். சைவத்திற்கே உரிய உயர்ந்த வழிபாடாகக் காட்சி அளிப்பது சிவனடியார் வழிபாடு.

சைவத் திருநெறியின் பெருமைகள் பலவற்றுள் சிவனடியார் வழிபாட்டை வற்புறுத்துவது ஒன்றாகும். அடி

யார் வழிபாடும்கூட ஈற்றுச் சாதனமாகச் சீவன் முத்தர் நிலையிலும், செய்யப்படுவனவாக அமைத்தது உணரத்தக்கது. சமய வாழ்க்கையில் தறுக்கு உள்ளம் இருத்தல் கூடாது. ஆணவ இருளைப் போக்கும் தக்க ஒளியாக யான், எனது என்ற தீய உணர்ச்சிகளை ஓட்டும் உயர் சாதனமாக—சந்தேகம் என்னும் சஞ்சலப் பேயை விரட்டும் உயர் மருந்தாகச்—சிவனடியார் வழிபாட்டைக் கண்டனர். சமய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வேண்டற்பாலது சந்தேகமற்ற உள்ளம். சாதாரண உலகியலிலேகூடச் சந்தேக உணர்ச்சி கொண்டவனுக்கு ஆக்கம் இல்லை. தீய குணங்களுள் ஒன்றாகத்தானே சந்தேகம் வைத்தெண்ணப்படுகிறது! மகாகவி ஷேக்ஸ்பியர்--(Suspision always haunts the guilty mind) சந்தேகம் குற்றமுள்ள நெஞ்சிற் குடியிருக்கும் என்று கூறுகின்றார். பிறரைப் பற்றி அவர்களது அகத்தைப்பற்றி ஆராய்தலே எப்பொழுதும் ஆபத்தாக முடிதல் உலக இயற்கை. தன்னை விடப் பிறர் சீரியர் அல்லர் என்ற உணர்ச்சி உலகில் பெரும்பாலோர்க்கு இருப்பது இயற்கை. இதனாலெல்லாம் விளைகின்ற தீமைகளை எண்ணித்தான் சைவப் பெருமக்கள், 'தூய்மையின் சின்னமாகிய நீறு, கருணையின் காரணமாகிய கண்டிகை அடிமைத் திறம், நினைந்துருகும் பெற்றியைக் காட்டும் ஐந்தெழுத்தோதல் முதலியவற்றைக் கொண்டவர்களைக் கண்டால் சிவமாகவே கருதி வழிபடுக' என்று ஆணையிட்டார்கள். அயராத அன்பிற் சிறந்த – சித்தம் சிவமேயாய சிவஞானிகளோடு இணங்கி இருக்க என்று ஆணையிட்டார்கள். சிவவேடம் நமக்குச் செய்கின்ற உதவி அளப்பிலது. சிவவேடம் சிவபெருமானை நமக்கு நினைப்பித்து வாழ்த்த வகை செய்கிறது. உலகியலிலே இருக்கின்ற பொழுது சிவபெருமானை நினைப்பிக்கின்ற தொண்டு பெருந்தொண்டு. அதனாலன்றோ சேரமான்பெருமாள் நாயனார், "திரு நீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாதேகும்" என்று கூறினார். சிவவேடத்தைக் கருணை என்றே சேக்கிழார் பாராட்டுகின்றார். திருநாவுக்கரசர் பெருமான் கல்லையே தெப்பமாகக் கொண்டு, கருங்கடலைக் கடந்து கரையேறி பாதிரிப் புலியூர் நகரினுள் வருகின்றார். இந்த இடத்தில் சேக்கிழா



ரடிகள் திருநாவுக்கரசரைத் திருவேடத்தரசராகக் காட்டுகின்றார்.

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

என்று திருநாவுக்கரசரின் தோற்றத்தைக் காட்டுகின்றார். இந்தத் திருவேடப் பொலிவுடன் நகரினுள் நுழைந்த அடிகளைக் கண்ட மக்கள் கைகுவித்து வணங்குகின்றார்கள். அடிகளது திருவேடம் அத்துணை பேருக்கும் சிவபெருமானை நினைப்பிக்கின்ற கருணையாலாய தொண்டைச் செய்தது. இத்தகு கருணையைக் கண்டால், அமணருக்கும் தீய எண்ணம் உண்டாகி இருக்காது என்று தம்முள் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

"கண்டார்கள் கைதலை மேல்குவித் திந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை அமண்கையர் தீங்கு விளைக்கச்செற்றம்
உண்டா யினவண்ணம் எவ்வண்ணம் என்றுரைப் பார்கள்பின்னும்
தொண்டாண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே"

என்பது சேக்கிழார் அடிகள் பாடல். சிவவேடத்தைக் கண்டபொழுது சிவபெருமானை நினைத்து வாழ்த்த முடிகிறது என்பதனைச் சுந்தரர்,

"துணிப்படும் உடையும் சுண்ணவெண் ணீறும்
தோற்றமும் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினால்கூறி மனத்தினால்
தொண்டனேன் நினைவேன்"

என்று அருளி விளக்குகின்றார். சிவனடியார் வழிபாட்டினாலும் இணக்கத்தினாலும் வாசனாமலத் தாக்கலிலிருந்து வீடுபெற முடிகிறது. மாதவச் சிவஞான முனிவர் தமது மாபாடியத்தில் சிவனடியார் வழிபாட்டைப் பற்றிக் கூறுவன சிந்தனைக்குரியன. செல்வப் பெருக்கம் உடையார்க்கு உணவாகிய ஆன்பால், உடம்பு நோயின்றி வளரச்செய்யும் மருந்தும் ஆமாறுபோல இவ்வழிபாடு மலவாசனை சிறிதும் தாக்காது, சிவானந்தம் மேன்மேல் வளரச்செய்யும் சாதன

மாதலும் உண்மையான்; அதுபற்றி ஆசிரியர் விதித்துரைத்தலும் செய்தாரென்க" என்பது அவர்களது பொருளுரை.

சமயத்தினுடைய சீரிய இயல்பு சமுதாயத்தை ஒட்டியதாக இருத்தலேயாம். ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு முறையை எல்லோரும் பின்பற்றுவார்கள் என்பது இயலாததொன்று. அவரவர்களது மனோ நிலைக்கு ஏற்பப் பணி செய்யவும், வழிபாடாற்றவும், நல்லறம் செய்யவும் வழி துறைகள் வகுத்துக் கொடுக்கின்ற சமயமே தலையாய சமயம். என்றும் நிலைபெற்றிருக்கின்ற பேறும், அத்தகைய சமயத்திற்கே உண்டு என்றும் அறியப்படும். இங்ஙனம் சமுதாயத்திற்கே ஏற்றவாறாக, சமுதாயத்தின் சாயலாக, பழைமைக்குப் பழைமையாக, புதுமைக்குப் புதுமையாக விளங்குவது சைவம்.

இன்று தமிழகத்தில், கடவுட் கொள்கைக்குப் புறம்பான கருத்துக்கள் உலவுகின்றன. சமயச் சார்புடையோம் என்பவர்களிடத்திலும் உண்மைச் சமய வாழ்க்கையைக் காண்பது முயற்கொம்பாக இருக்கின்றது. இன்றைய சமயம் சடங்குச் சமயமாகக் காட்சி அளிக்கின்றதே அன்றி வாழ்க்கையில் தோய்ந்த சமயமாகக் காட்சி அளிக்கவில்லை. ஆலயங்களிலும் பிற சமய நிலையங்களிலும் சமயச் சார்புள்ள தொண்டுகள் குறைந்து லௌகீகச் சார்பு பெருகி ஆடம்பரங்களும், ஆர்ப்பாட்டங்களும் நிறைந்து வருகின்றன. ஆலயங்களும், ஏனைய சமயநிலையங்களும், செய்யவேண்டிய அளவு சமயப் பணியைச் சால்புறச் செய்யவில்லை. அவைகளின் பணி வளரவேண்டும். சமயம் சடங்களவில் நிற்கும் நிலைமாறி வாழ்க்கையில் தோய்ந்த நிலையில் காட்சி அளிக்கவேண்டும்.

## ஒருசில கடமைகள்

இன்றைய சமயத்தின் நிலையையும், சிறப்பாகச் சைவத்தின் நிலையையும் எண்ணிப் பார்த்தால் செய்யவேண்டிய தொண்டுகள் பலவுள. சமயச் சார்புடைய பெருமக்கள் அனைவரும், பொது மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும். அவர்களின் உளம் அறிந்து உவப்பக்கூறிச் சமய வாழ்க்கையை வற்புறுத்துதல் வேண்டும்.



அதற்குச் சிற்றூர் பேரூர்களிலெல்லாம் சமயப் பணிக்கெனத் தனித்த கழகங்கள் அமைக்கப் பெறுதல் வேண்டும். மக்கள் அனைவருக்கும், திருவாசகம் ஓதுகின்ற உணர்ச்சியை உண்டாக்கவேண்டும். திருவாசகத்தை முறையாக ஓதுகின்ற பணியைக் கைக்கொண்டால், சீக்கிரத்தில் தமிழகம் தனது பண்டைப் பெருமையை எய்தக்கூடும். திருவாசகம் ஓதுதலால் உள்ளம் தூய்மையடைந்து அன்பில் சிறந்த நல்லறப் பண்பாட்டைப் பெறலாம். எனவே தமிழகத்தில், ஒவ்வொரு ஆண்மகனும் பெண்மகளும் ஒன்றியஉள்ளத்தோடு திருவாசகம் ஓதுதல்வேண்டும். அந்தத் திருத்தொண்டைக் காலந் தாழ்த்தாது தொடங்க வேண்டும். பல ஆலயங்களின் நிலை இரங்கத்தக்க நிலையில் இருக்கிறது. சென்ற மாதத்தில் நாம் ஒரு தலத்திற்கு வழிபாட்டிற்குச் சென்றிருந்தோம். அந்த ஆலயத்தை இருள் படலம் சூழ்ந்திருந்தது. நிர்மால்யங்கள் சிதறிக் கிடந்தன. சிவபெருமான் தோற்றத்தால் கரிய பரிவட்டம் உடுத்திருந்தார். அறுபான்மும்மை நாயன்மார்கள் புழுதி தோய்ந்த மேனியாக நிர்வாண நிலையில் காட்சி அளித்தனர். இந்த ஆலயத்தின் வருவாய்க்கோ, அதனைப் பரிபாலிப்பவரின் செல்வச் செழிப்புக்கோ யாதொரு குறையும் இல்லை. இந்த மாதிரி எத்தனையோ தலங்களைச் சுற்றுப் பிரயாணங்களில் பார்க்கிறோம். இந்தக் கொடிய பரிதாபகரமான நிலையில் மாற்றத்தைக் காணவேண்டும். இன்னும் சமய வாழ்க்கையின், முறைகளையும் பயன்களையும் எளியமுறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். இளைஞர்களுக்குச் சமயக் கல்வி கற்றுக் கொடுப்பதனாலும், சிறந்த சமய நூற்பயிற்சியாளருக்கும் வாழ்க்கையாளருக்கும் பரிசுகள் கொடுப்பதினாலும் மக்களைச் சமய வாழ்க்கை உடையவர்களாக ஆக்கவேண்டும்.

## முடிவுரை

காணப்பட்ட உலகத்தின் வியத்தகு அமைப்புக்களுக்கு முதல்வனாக—கர்த்தாவாக—எல்லாம் வல்ல இறைவன் இருக்கின்றான் என்று அறிவுடைப் பெருமக்கள் எடுத்தோதினர் என்பதையும், அம்முதல்வனை நன்றியறிதல் உணர்ச்சியோடு வழிபடத்தொடங்கிய காலத்துச் சமய

வாழ்க்கைத் தொடங்கிற்று என்பதையும், தமிழகத்தின் தனி நெறியே சித்தாந்தத் திருநெறி என்பதையும், அது முடிந்த முடிபாகத் தொன்மை நலம் மிக்கதாகக் காட்சி அளிக்கிறது என்பதையும், சைவத்தின் வழிபாட்டு நெறிகள் எளிமை நலம் மிக்கு இம்மையும் எம்மையும் இன்பம் தருவனவாகக் காட்சி அளிக்கின்றன என்பதையும், சைவத்தின் சிவனடியார்–சிவவேட வழிபாடு மிகச் சிறந்த பண்பாட்டை அடிப்படையாக உடையதென்பதையும், சமுதாயத்தைத் தழுவிய சமயமாக சைவம் விளங்குகிறது என்பதையும் அதன் தற்கால இரங்கத்தக்க நிலையையும் ஆக்கத்திற்குரிய பணிகள் சிலவற்றையும், சிறப்பாகத் திருவாசகம் ஓதுகின்ற திருத்தொண்டின் பெருமையைப் பற்றியும், திருவருளால் நினைந்து உங்களுக்கும் நினைவுபடுத்துகின்ற பணியைச் செய்தோம்.

பல ஆண்டுகளாக, அன்பு நிறைந்த ஆர்வம் பொருந்திய உள்ளத்துடன், சைவப் பணி ஆற்றுகின்ற சபையின் திருத்தொண்டை வாழ்த்துகின்றோம். சபையின் நிரந்தர சித்தாந்த ஆசிரியராக விளங்கிப் பலருக்குச் சாத்திரப் பயிற்சியைத் தருகின்ற சித்தாந்தப் பேராசிரியர் சிவகுருநாதம் பிள்ளைக்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையது. சபையின் தொண்டர்கள் அனைவருக்கும், நமது உளம் தோய்ந்த வாழ்த்து.

வாழ்க சபை! வளர்க சைவம்!!

---

5. கலைப்பகுதி

# பால் இனம்

(ம. ரா)

ஓர் ஆங்கில ஆசிரியர் தன் ஆங்கில சஞ்சிகையில் பால் இனத்தைப் பற்றி (sex) ஒரு ருசிகரமான கட்டுரை ஒன்று எழுதியிருக்கின்றார். அதில் தன்னுடைய கருத்துக்களை கூறுவதற்கு முன் சில கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்.

"பால் இனம் என்பதென்ன? எங்கிருந்து எப்படி, ஏன் வந்தது? அதனை நில உலகத்தில் காண்கிறோம். இந்த



நில உலக உடலாகிய பரு உடல் அழிந்த பிறகு அது நிலைத்திருக்குமா? அப்படியாகில் அது எந்த உருவத்தில் நிலைத்திருக்கும்? அதனுடைய நோக்கமென்ன? இந்த உலகமாகிய பூவுலகத்தில் வாழ்க்கையில் ஆண், பெண் என்ற வேறுபாடு ஏற்பட்டு அவைகளின் சேர்க்கையால் புது உடல்கள் தோன்றுகிறாற்போல நுண் உலகமாகிய புவர்லோகத்திலும், அதைவிட நுட்ப உலகமாகிய சுவர்க்கலோகத்திலும் தொடர்ந்து அதே நோக்கத்துடன் அந்த வேறுபாடு இருக்குமா? ஆண் தன்மையும், பெண் தன்மையும் ஒரு முறை அது அதற்கேற்ற தனுக்களைப் பெற்ற பிறகு, பின்னர் அத்தன்மைகளோ அல்லது தனுக்களோ வளர்ச்சி தத்துவ முறையில் மாறுதல் பெறுவதுண்டோ? அவ்வாறு மாறுதல் அடைவதுண்டாயின் அம்மாறுதலுக்கு ஏதாவது, எங்காவது சான்று இருக்கின்றதா?"

இந்தக் கேள்விகளை எழுப்பிவிட்டு அவைகளுக்கு விடைகள் கூறுமுடியுமா என்று அப்பத்திரிகை ஆசிரியர் எழுதுகின்றார்—முதன் முதலில் உலகில் உலாவிவரும் பல் வேறு சமயங்கள் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் கூறுகின்றன என்று கேட்டுவிட்டுத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சி இதற்கு என்ன விடை கூறுகின்றது என்றும் அவர் எழுதியிருக்கின்றார். விஞ்ஞான ஆராய்ச்சியிலே உடல்கூறு நூலாசிரியர்களும், உயிர் நூலாசிரியர்களும் பல அரிய சோதனைகள் செய்து எழுதியிருக்கின்றார்கள். ஆண் பெண் தத்துவங்கள் எந்த முறையில் ஒன்றோடொன்று மாறுபடுகின்றன, எந்த முறையில் ஒன்றோடொன்று கவர்ச்சி கொள்கின்றன என்ற கேள்விகளுக்குப் பல இயற்கை விதிகளையும், ஆராய்ந்து கூறியிருக்கின்றார்கள். உயிர்த் தத்துவ நூலில் பரம்பரையாக என்ன குணங்கள் தொடர்ந்து வருகின்றன என்றும் அவ்வாறு தொடர்ந்து வரும் நோய்களையும் பலமின்மையையும் எவ்வாறு தடுக்க முடியும் என்றும், கூறுவது மட்டுமன்றிப் புது உடல்களையும், புதுக் குணங்களையும் எவ்வாறு வளர்த்த முடியும் என்றும் அந்நூல் அறிவிக்கின்றது.

இவ்வாறு உயிர் நூல் அளிக்கும் அறிவானது மிகவும் விரிந்திருந்தபோதிலும் மேலே கேட்ட கேள்விகளுக்கு ஒரு விதமான விடையும் தருவதில்லை. பால் இனத்தின் உண்மை

நிலையைப் பற்றியாவது, அடிப்படை இயற்கையைப் பற்றியாவது உயிர் நூல் இதுவரை யாதொரு விடையையும் தரவில்லை. உயிரின் வாழ்க்கையில் பால் குணம் மிகவும் சக்தி வாய்ந்த பண்பு என்று எல்லாரும் அறிவார்கள். அக்குணத்தினால் மிகுந்த இன்பமும், மிகுந்த துன்பமும் ஏற்படுகின்றன. அழுக்காறு, பொறாமை, கொடுங்குற்றம், பேரழிவு முதலிய பல தீமைகளும், அந்தப் பண்பே விளைவிக்கின்றது என்று கூறமுடியும். அப்படியிருந்தும் அதனுடைய உண்மை நிலை யாருக்குத் தெரியும்? உலகிலே ஆகாயக் கப்பல், நீராவி யந்திரம், மின்சாரம், காந்தம் முதலியவைகளை எவ்வாறு கொள்ளுகிறோமோ அவ்வாறு பால் இனத்தையும் ஒரு உள்ளப் பொருளாகக் கருதுகிறோம்.

பால் இனத்தினுடைய செயல்கள் பல மக்களிடம் பலவாறாக விளைந்து வருவதைப் பார்ப்போம். மக்களுடைய ஒழுக்க முறைகள் அவரவர்களுடைய பண்பாடுகளுக்கேற்றபடி மாறிவர, பால் இனத்தைப் பற்றிய எண்ணங்களும் அவ்வாறே மாறுபடும். சில சமயச் சமூகங்கள், பால் இனத்தால் ஏற்படும் உயிர்ப் பெருக்கம் தீமையின் செயல் என்று கருதி அதனை அறவே ஒழிப்பார்கள். அதற்காக பிரம்மசரியம் காத்துத் துறவறம் பூண்டிருப்பார்கள். அந்த வகையில் இல்லற வாழ்க்கையின் கட்டுப்பாடுகளை விட்டுச் சுதந்திரத்துடன் இருக்க விரும்புவார்கள். சில சமயங்களோ இல்லற வாழ்க்கையே நன்றென்று கருதி உயிர்ப் பெருக்கம் இறைவனால் ஆணையிடப்பட்ட கட்டளைகளில் ஒன்று என்று கருதி சாதாரண மக்களேயன்றிச் சமய வாழ்க்கையில் ஈடுபட்டவர்களும் அவ்வறத்தையே கைக்கொள்ளுவார்கள்.

உலகம் மாயையால் ஏற்பட்டது. அங்கே செய்யக்கூடும் செயல்களும் மாயையே என்று கூறிப் பால் இனத்தில் கட்டுப்பாடு வைத்துக்கொள்ளாத மக்களும் உண்டு. ருஷியாவில் புரட்சி நடந்த காலத்தில் தண்ணீர் வேட்கை போல புணர்ச்சி வேட்கையும் ஒன்று என்று கருதி நாட்டில் எங்கும் ஏகக்குழப்பம் ஏற்பட்டுவிட்டது. பின்னால் அதனைத் தடுக்கத் தலைவர்கள் கட்டளையிட்ட பிறகுதான் அக்குழப்பம் நின்றது.



இவ்வாறு நிலவுலகத்தில் பால் இனத்துக் குணங்களும், செயல்களும் இருக்க இவைகள் உடல் அழிந்த பிறகும் உண்டா என்பதுதான் இப்போதைய கேள்வி? உலகத்தில் உள்ள பால் இனத்தின் அடிப்படை முற்றும் நமக்கு விளங்காதிருக்கையில் நுண்ணிய உலகங்களில் அது எவ்வாறு இருக்குமென்று அறிய முடியுமா? மேல்நாட்டு அறிஞர்களில் இக்கொள்கைகளைப் பற்றி ஒரு சிறிது கூறினவர் ஸ்வீடன்போர்க் என்ற ஸ்வீடன் நாட்டு அறிஞர். நுண் உலகத்தின் செய்திகளை அந்த அறிஞருக்கு அறிவுறுத்தின அமரதூதன் பால் இனத்தைப் பற்றிய உண்மை இயல்பைக் கூற மறுத்துவிட்டானாம்.

ஆனால் தற்காலத்தில் நுண் உலக ஆராய்ச்சிகள் செய்துவரும் கழகத்தார்கள் பல செய்திகளை வெளியிடுகிறார்கள். வெறும் கட்டுக்கதைகள், புராணக்கதைகள் முதலியவைகளில் கூறப்படும் செய்திகளை ஒழித்துவிட்டு, நுண் உலகத்திலிருந்து அறியக் கூடிய மர்மச் செய்திகளின் மூலம் அறிவிப்பதாக ஆன்மீக அறிவாளர்கள் (spirtualist) கூறுகிறார்கள். அவர்கள் கூறும் செய்திகளைக் கொண்டு நிலவுலகத்தில் இருப்பதைப்போலவே, நுண் உலகங்களிலும், பால் வேறுபாடு இருக்கின்றதாம்.

மேற்கூறிய கருத்துக்களைக் கூறிவிட்டு ஆங்கில சஞ்சிகை ஆசிரியன் பால் இனத் தத்துவங்களை, ஐந்து பாகங்களாகப் பிரித்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து வருகிறார்.

இதுவரை மிக விரிவாக ஆங்கில ஆசிரியருடைய எண்ணப் போக்கை எடுத்து எழுதினோம். அப்போக்கு விஞ்ஞானத் துறையில் சென்று கொண்டிருக்கின்றது. சமயத் துறையில் சென்றதாகத் தெரியவில்லை. அதனை சமயத் துறையில் வைத்து ஒரு சிறிது ஆராய்வோம்.

ஆண், பெண் என்ற தத்துவங்கள் எதிரிடைக் குணங்களைக் கொண்டிருந்த போதிலும் சமநிலையான ஆற்றல் கொண்டிருக்கிறதென்று அறியலாம். அவைகள் ஒன்றுக்கொன்று மேல் அல்லது கீழ் என்று கூற இயலாது. சில பண்புகளில் ஒன்று மேலாகவும், மற்றது கீழாகவும் இருக்க, மற்றைப் பண்புகளில் பின்னது மேலாகவும், முன்னது கீழாகவும் இருக்கக் காண்போம். ஆகவே இரண்டும்

மொத்தத்தில் ஏற்றத்தாழ்ச்சியின்றி சமநிலை கொண்டதாக இருக்கின்றன எனக் கருதவேண்டும்.

ஆனால் சில மதங்களில் ஆண்பாலை உயர்ந்ததாகவும், பெண்பாலைத் தாழ்ந்ததாகவும் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவத்தில், ஆதாமைக் கடவுள் முதலில் படைத்துப் பின்னர் அவனுடைய விலா எலும்பைக்கொண்டு ஏவாளை உண்டாக்கினார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் கதையே இஸ்லாமியத்திலும், யூதத்திலும் கூறப்பட்டுள்ளது.

இக்கதையினால் ஆணைவிடப் பெண் குறைந்தவள் என்று சொல்வது மட்டுமன்றி ஆலயத்தில் தொழுவதற்குப் போகையில் ஆண்கள் வெறுந் தலையோடும், பெண்கள் முக்காடிட்டும் செல்லவேண்டுமாம். அந்த மதங்களில் பிறப்பு ஒன்றே என்று கருதப்படும். பின் பிறப்பு இல்லை என்றபடியால் இறந்த பிறகு பால் இனம் எப்படிப்பட்டதென்ற கேள்வியே எழுவதில்லை.

மறுபிறப்பு உண்டென்று நம்புகிற கீழை நாட்டுச் சமயங்களில் மட்டும் இந்தக் கேள்வி எழுகிறது. சமண சமயத்தில் பெண்களைக் கீழ்நிலையில் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுபேறு இல்லையென்றும் கூறுகிறார்கள். இதைக் கேட்க நமக்கு வியப்பாயிருக்கின்றது. இந்துச் சமயங்களை ஆராய்ந்து பார்த்தால் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமத்துவம் உண்டு என்று சமய தத்துவ நூல்கள் கூறினபோதிலும் உலக நடவடிக்கைகளில் பெண்கள் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். தரும சாத்திரங்கள் அல்லது ஸ்மிருதிகளில் பெண் தன்மை கீழ் நிலை ஆக்கப்பட்டிருக்கிறது. அந்தணர்களுடைய பெண்கள் வேதம் படிக்கப்படாதென்ற கொள்கையின் பொருள் என்ன? வேள்விகளிலும்கூட அவர்களுக்குச் சமப்பங்கு இல்லை. ஆனால் சைவத்தில் வேறு வகையாக இருக்கக் காண்போம்.

சைவ சித்தாந்தத்தின்படி முப்பொருள்கள் உண்டு. இம் முப்பொருள்கள் எக்காலத்திலும் உள்ளவை. அவைகள் கடவுள், உயிர், தளை என்பன. வடமொழியில் பதி, பசு, பாசம் என்பர். இம் முப்பொருள்களில், உயிர் என்பது குறுகிய அறிவுடையது. ஆனால் பெருகும் தன்மை



யுடையது. கடவுளோ ஒருவர், உயிர்களோ கணக்கற்றவை. எல்லா உயிர்களுக்கும் பண்புகள் ஒன்றே. தாழ்மையான நிலையிலிருந்து மேன்மையான நிலை அடையும் ஆற்றல் அவைகட்கு உண்டு. அவை படிப்படியாக வளர்ச்சி பெறும். அவ்வளர்ச்சி எல்லா உயிர்களுக்கும் சமமான ஆற்றல் அமைந்தது. இந்த வகையில் உயிர்களில் வேறுபாடில்லை. உயிர்கள் வளர்ச்சி பெறுவதினால் முழு அறிவை அடையக் கூடும். அவ்வாறு உயிர்கள் அடைவதன் பொருட்டு இறைவன் தன்னுடைய அநந்த கருணையினால் தனு, கரண, புவன, போகங்களை அவைகட்குக் கொடுக்கின்றான். அவைகளைப் பெற்று உயிர்கள் மேன்மையான நிலை அடையும். இந்நான்குவகைகளில், தனு என்பது உடல்; இந்த உடலில்தான் பேதம் உண்டு. அது ஆண் பெண் என்ற இருவகைப்படும். உடலில் பேதம் இருந்தாலும் ஆன்மாவில் பேதமில்லை. ஆகவே ஆண் உடலில் இருக்கும் உயிரும், பெண் உடலில் இருக்கிற உயிரும் இரண்டும் மேல்நிலை அல்லது வீடுபேறு அடையக் கூடியவை. இந்த வகையில் சைவத்தில் வீடுபேறு என்ற அளவில் வேற்றுமை இல்லை.

சைவ சித்தாந்தக் கொள்கை பொதுத் தன்மையில் இவ்வாறு இருக்கச் சிறப்புத் தன்மையில் புராணக் கூற்றுகள் என்ன சொல்லுகின்றன என்று பார்ப்போம். சமய வாழ்க்கை வாழ்ந்து இறைபணி நிற்றலில் திகழ்ந்த சைவப் பெருமக்களில் ஆண்பாலாரும் உண்டு ; பெண்பாலாரும் உண்டு. 63 மெய்யடியார்களில் ஆண்பாலாரு மிருக்கின்றனர். பெண்பாலாரு மிருக்கின்றனர். சம்பந்தர் முதலிய நாயன்மார்கள் ஆண்பாலரா யிருக்க, காரைக்காலம்மையார் முதலிய அடியார்கள் பெண்பாலராயிருந்தார்கள். சம்பந்தர் முதலிய மூவர்களும் தேவாராதிகளைப் பாடியிருக்க, காரைக்காலம்மையார் அருட் பிரபந்தங்களைப் பாடியிருக்கின்றார். சம்பந்தப் பெருமான் நல்லூர்த் திருமணத்தில் ஜோதியில் கலந்த காலத்தில் ஆண்பாலரோடு பெண்பாலரும் வீடுபேற்றைப் பெற்றார்கள். இதுபோலவே வைணவத்திலும் ஆழ்வார்களில் பெண்பாலர் உண்டு. ஆகவே சித்தாந்தத்தைக் குறித்தமட்டில் வீடுபேற்றில் மதவேறுபாடு இல்லை.

இனி, மேலான தத்துவ ஞானத்தை விட்டு நடுத்தரமாகவுள்ள புராணக் கூற்றுக்களை எடுத்துக்கொண்டால் நுட்ப உலகங்களில் ஆண், பெண் வேறுபாடு உண்டா என்ற கேள்விக்கு விடைகள் இருக்கின்றன. ஓர் உயிர் மரணத்தினால் உடலைவிட்டு நீங்கின பிறகு மறுபடி வேறு உடலை எடுக்கும் மட்டும் இடையில் இரண்டு நுட்ப உடல்களைக் கொண்டு அங்கே பாவம், புண்ணியம் என்ற இரண்டையும் முறையே அனுபவிக்கும் என்று கருட புராணம் கூறும். அந்த நுண்ணிய உடல்களில் ஆண் பெண் வேற்றுமை உண்டா? இச்சா உலகத்திலும் மானசீக உலகத்திலும் இந்த பேதங்கள் இருக்கலாமென்று புராணங்கள் சூசிப்பிக்கின்றன. இந்திர லோகத்தில் பெண்கள் உண்டு என்று புராணம் கூறும். தேவர், யக்ஷர், கந்திருவர், வித்யாதரர் முதலிய தெய்வீகப் பிறப்புக்களில் இருபாலாரும் இருக்கின்றனராம்.

இனி சைவப் புராணங்களில் கைலையில்ஆலாலசுந்தரர் பூத்தொடுக்கும் திருத்தொண்டில் அமர்ந்திருக்க கமலினி, நந்தினி என்ற இரு சேடிமார்களும் பூ எடுத்தார்கள் என்பது புராணக் கூற்று. மற்றும் இறைவனே கைலையில் இறைவியோடு எழுந்தருளியிருக்கின்றார் என்றால் அதன் பொருள் என்ன? இந்த வரலாறுகளின் அடிப்படைப் பொருளை நாம் அறியவேண்டாமா?

இனி மாணிக்கவாசகர்,

"தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ"

"மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது வென்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ"

என்ற செய்யுள்களில் பால் வேறுபாடு கூறியிருத்தலை அறிவோம். இவற்றில் அடங்கியிருக்கும் உட்பொருளை ஆராய்வோமாக.

---

## 6. கவிப் பகுதி

# "குகை-நமசிவாய தேசிகர்"

(அ. தா. ப. திருஞான சம்பந்தம்)

**தோற்றுவாய் :**—ஒரு நாட்டின் புகழ், எவ்வளவு மக்களைத் தன்னகத்தேகொண்டிலங்குகிறது என்பதால் வளர்வதில்லை. பின் எதனால் வளர இயலும் என்பதை வள்ளுவர் வகுத்துரைத்த நாட்டின் இலக்கணம் மூலம் நன்குணரலாம்.

*தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு.* (குறள் : அதி. 74–1)

குறையாமல் எல்லாப் பொருள்களையும், விளைவு செய்வோரும், தகுதிவாய்ந்த பெருமக்களும், கேடில்லாத செல்வமுடையோரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்திருப்பதே நாடாகும் என்பது வள்ளுவர் கருத்து. வள்ளுவப் பெருந்தகையார் அமைத்துப் பாடியுள்ள, தள்ளாத விளையுள், தக்கார், தாழ்விலாச் செல்வர் என்ற மூன்றில் இடையில் அமைத்துள்ள தக்கார் என்ற சொல் சிந்திக்கத் தகுந்தது. வள்ளுவர் முப்பொருள்கள் அமைத்துக் கூறுமிடங்களில் இடைப்பட்டதாய ஒன்று சிறந்ததோர் கருத்தை வெளியிட்டு உதவும் என்பதை உணர்க. தக்கார் என்ற சொல்லுக்குப் பொருள் காணவந்த உரை இயற்றுவதில் வல்லுனரான பரிமேலழகர், அந்தணர், தவச் செல்வர்கள், அறவோர் என்றே பொருள் கண்டிருத்தல் ஈண்டு உணரத்தக்கது. இதனால் நாம் இதுபோழ்து ஒரு முடிவிற்கு வரவேண்டியவர்களாய் இருக்கிறோம். அஃதாவது நாட்டின் புகழ்—குருதியை நீரென நிலத்தில் வடித்து உண்பொருள் அளிக்கும் உழவன், பேராசைப் பித்தர்களாய் வாழாத நற்செல்வர்கள் இவர்களால் அந்நாட்டிற்கு வருகிற புகழைவிட, இந்த இருவகையினர்க்கும் இடைப்பட்ட ஞானச் செல்வர்களால் வரும் புகழே மிகுதியுடையது; என்றென்றும் அழியாப் புகழுடன் நின்று நிலவுவதுமாகும்.

குன்றாத புகழை என்றென்றும் நிறைவோடு இப்பரத கண்டம் — சிறப்பாகத் தமிழகம் — பெற்று இலங்குகிறதெனின் அதற்குக் காரணம் என்ன? இடைவிடாது

தமிழகம் தன்பால் சமய மணத்தையும், அனுபூதிச் செல்வர்களையும் கொண்டு திகழ்வதே யாகும். அனுபூதிச் செல்வர்கள் சிவராஜ யோகியர்களாய்த் தவராஜ யோகத்தில் ஆழ்ந்து இன்ப வடிவினனும் இறைவனுடன் இடையருத் தொடர்பு பூண்டு, அவன் அருளால் அவன் பெருமையை வந்தித்து அவன் திருத்தாள்களுக்கு இலக்காயினர் என்பது நன்கு உணரத்தக்கது. அத்தகு பெரியோர்கள் நாட்டில் வாழ்ந்தார்கள் என ஊகித்தறிய ஒருசில ஏதுக்கள் ஓரோவிடங்களில் கிடைக்கின்றனவே யன்றி, அவர்களைப்பற்றிய முடிந்த வரலாற்றுண்மைகள் கிடைக்கின்றில. இதற்குக் காரணம் தண்ணளிமிக்கத் தமிழக மக்கள்தான்! தமிழரினம் தன்னைப் பற்றி விளம்பரப் படுத்திக் கொள்ளத் தெரியாத இனம் எனச் சிலர் கூறுவதிலும் தவறில்லை. தங்களின் இனப்பெருமையைப் பகட்டாக வெளிப்படுத்தவேண்டிய அவசியமில்லாவிட்டாலும், தாங்கள் உணரவும், தன்மானங் கொண்டு வகையாக வாழவாவது அறியவேண்டுமல்லவா? இதையும் உணர அவர்களுக்கு அறிவு கீழ்ப்பட்டால், அஃது அவலநிலை அன்றோ! பலதவச் செம்மல்களின் பெயர்கள் மட்டில் நாட்டில் ஏதோ மூலை முடுக்குகளில் தெரிந்துள்ளனவே யொழிய, வரலாற்றுண்மைகளால் அறிய முடியாதிருக்கிறது. அங்ஙனம் அறிய முடியாதிருக்கும் வரலாற்றுண்மைகளில் குகை நமசிவாய தேசிகப் பெரியாருடையது மொன்றாகும். இவரைப் பற்றிய சிறு குறிப்புக்களே, அருணாசல புராணப் பதிப்பில் குருநமசிவாயர் வரலாற்றினின்றும் அறிய முடிகிறது. முற்றிலும், வரலாற்றுண்மைகளை உணர்ந்த அன்பர்கள் சிரமம் பாராமல் வெளியிட்டுதவினால் தமிழகம் அன்னார்க்கு என்றென்றுங் கடப்பாடுடைத்து.

**வரலாறு :** சுவாமிகள் வடநாட்டிலே கர்னாடகப் பகுதியில் உள்ள மல்லிகார்ச்சுனம் என்றதோர் திருவூரில் தோன்றினார்கள். இவர் தந்தையார் பெயர் தெரியவில்லை. தாயார் பெயர் மனோன்மணி யம்மையார். இவ்வம்மையார்க்கு நெடுநாட்கள் பிள்ளைப்பேறு இன்மையால். வருந்தி இறை வழிபாடியற்றி வருங்காலை சுவாமிகள் தோன்றினார். இளமைக் காலத்திலேயே, இறையருள் பெற்ற சுவாமிகள் கல்வி கேள்விகளில் திறம்பட்ட அறிவுடையராகி, உலகப்



பொருள்கள்பால் வெறுப்புணர்ச்சி தோன்றிச் சிவானுபூதியில் இலயிக்க வேண்டும் என்ற விருப்பு மீதூற, ஞானச் செல்வர்களை அழைக்கும் அண்ணாமலை வந்தடைந்தார். அவன் தாள்களுக்குத் தன்னை அடைக்கலப் படுத்தி, பண்செறிந்தப் பாமாலைகள் பல பாடி அண்ணாமலைப் பெருமானார்க்குச் சூட்டினார். இங்ஙனம் வாழுங்காலை இவர்க்கு உற்ற சீடராக ஒருவர் வாய்த்தார். அவர்தான் குருநமசிவாயர் என்பவராவர். இவரே தன் குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டு, பொன்னம்பலம் சென்று பல பெரும் கோயிற் றிருப்பணிகள் செய்வித்தார் என அவர் வரலாறு கூறுகிறது. அவர் வரலாற்றை அருணாசலப் புராணப் பதிப்பில் காண்க.

சுவாமிகள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகையறிந்து, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவையனைத்தும் நீத்து வாழ்ந்தவர் என்பது அவர் பாடல்களால் அறிய முடிகிறது. இத்தகைய பெரியாரின் வரலாறு ஏனோ எழுதிவைக்கப் படவில்லை. அவர் சீடராகிலும் வரலாற்றை எழுதிவைத்திருக்கலாம். ஆனால் வரலாறு எழுதுவதற்குப் பதிலாகக் குருவின் பெயரில் தனக்கிருந்த அயராத பற்றைக் காட்டுவான் வேண்டிப் புகழ்மாலைகள் பல, எண்ணரிய பாடல்களாகச் சூட்டியுள்ளார். மடத்தில் உள்ள பல பழைய ஏட்டுச் சுவடிகள் செல்லுக்கு விருந்தாயின. எஞ்சியுள்ள சில சுவடிகளும், நன்முறையில் பாதுகாக்கப் பெறவில்லை. சுவாமிகள் அருளியுள்ள அருணகிரி யந்தாதி, சாரப் பிரபந்தம் இவைகளே அருணாசலப் புராணப் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தோ! வாழ்வைத் தூய்மை செய்யும் ஏடுகள் மண்ணுக்குள் மண்ணாய் அழிந்தனவே! எண்ண எண்ண நாடிகள் படபடக்கின்றன. சுவாமிகள் இயற்றியுள்ள மேற்குறிப்பிட்ட பாடல்களில் இருந்தே அப்பெரியாருடைய மனநிலையையும் அமைதியையும் காண முடிகிறது.

**குகை வரலாறு, பாததீர்த்தம், முலைப்பால் தீர்த்தம் :—** ஊர் மக்களிடையில் இருந்து காலங்கடத்தினால் தனக்கு நிட்டை கூட அமைதி கிடைக்காததை உணர்ந்த தேசிகர் பெருமான், இறைவனை நல்லிடம் ஒன்றளிக்குமாறு வேண்டினார். அதற்குப் பக்தி வலையிற் படுவோனாகிய பெருமானா

திருவுளமிரங்கி அன்னார் கனவில் தோன்றி மலையின்பால் உரியதோர் இடத்தைக் காட்டிச் சென்றார் எனவும் அதைக் குறிப்பாக அமைத்துக்கொண்டு சுவாமிகள் அவ்விடம் சென்று பார்க்கும்பொழுது ஒரு குகையைக் கண்டார். அதுவே தனக்கு ஏற்றதென்றுணர்ந்தார். இக்குகை மலையடிவாரத்திலிருந்து ஒரு பர்லாங் அளவில் உள்ளதெனலாம். அக்குகையை ஏற்றதென் றறிந்த பின்னர், தமக்கு வேண்டிய விடாய் முதலானவற்றைப் போக்கிக் கொள்ள நீர் இல்லையென் றேங்கி நிற்கவும், அவர் குகைக்குச் சற்று மேற்புறத்தில் சென்றபொழுது அசரீரி யொன்று தோன்றி அன்பனே ! நீ பாதம் வைத்துள்ள இடத்தையே அகழ்ந்தால், உன் தேவைக்குரிய நன்னீர் கிடைக்கும். எனலும் அவ்வாக்கினை ஏற்று, அகழ்ந்தகாலை நன்னீர் கிட்டிற்று. பாதம் போலவே அத்தீர்த்தம் அமைந்திருப்பதால் அதற்கு பாததீர்த்தம் எனப் பெயர் வழங்கலாயிற்று. மற்றோர் தீர்த்தமும் சுவாமிகளுக்கு உண்ணாமுலைத் தாயாரால் அருளப் பெற்றது. அஃதே முலைப்பால் தீர்த்தம் என்பதாகும். பின்வரும் செய்யுள்களால் முன் கூறியவை உணர்க.

குகை :

நடலிங்க மூர்த்தி நமசிவா யர்க்கென்று
அடிமுடிமால் வேதர்க் கரிதாம்—நெடிய
திருமேனியிற் குகையாய் தெய்வீக மாக
அருணேசர் பாலிந்தா ரன்று.

பாத தீர்த்தம் :

வேதத்தால் மாலயனால் விண்ணவர்பிரான் காணாத
பாதத்தால் காட்டைப் பறித்ததே—தீதற்ற
உன்னை சோணகிரி ஓம்நமசி வாயருக்கு
என்னாளும் பாத தீர்த்தம்.

முலைப்பால் தீர்த்தம் :

ஆனை முகனும் அரிமுகனும் காணாப்பால்
ஞானக் குகைநமசி வாயருக்கு—மாநிலத்தில்
முந்திப்பிறந் தருணேசர் முக்கணுண் ணாமுலைத்தாய்
தந்த முலைப்பால் தீர்த்தம்.

செயற்கரிய செயல்கள் : பெருமானார் ஒருமுறை வடநாட்டுத் தலயாத்திரை மேற்கொண்டு, காசியம் பதிக்குத்



தன் சீடர்கள் புடைசூழச் சென்றார். வழியில் டில்லி மாநகரில் தங்க நேர்ந்தது. தங்கிய இடம் டில்லி பாதுஷாவின் பூங்கா. அங்கே தங்கி, சிவபூசைகள் இயற்றித் திருப்பாடல்கள் ஓதிய வண்ண மிருக்குங்கால், இவர்கள் செயல்களைக் கண்டு பொறாத காவலாளர்கள் பாதுஷாவிடம் சொல்ல, "பிறர்க்கின்னா முற்பகற் செய்யின், தமக்கின்னா பிற்பகற் றாமேவரும்" என்பதை உணராத பாதுஷா, காவலர்கள் சொற்கேட்ட அவன், சிலர்களை சிறைக்குள் தள்ளுக எனலும், இதை யறிந்த நமசிவாய மூர்த்தி "நினைக்கத் தனக்கு" என்றார். உடனே பாதுஷாமுதலானோர் மூர்ச்சையுற்று, அடியற்ற மரம்போல் சாய்ந்தனர். இக்கோலத்தைக் கண்ட பாதுஷாவின் மனைவியார், பெருமானிடம் வந்து முறையிட, அதற்குச் செவிசாய்த்து அவர்கள் அனைவரையும் எழுப்புவித்தார். "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தன் தகுதியால் வென்றுவிடல்" என்பதற்கேற்ப, தன் தகுதியால் சுவாமிகள் வென்று விளங்கினார். அதுபோழ்து பாதுஷாவும் அவருடைய ஆட்களும் சுவாமிகளை நோக்கித் 'தவச் செல்வரீர்! செழுந்தீயெனக் காய்ச்சப்பெற்ற இரும்புக் கம்பமொன்றைத் தாங்கள் தூக்கினால், தங்கள் பெருமை அறிவோம்' என்றனர். அதற்குச் சம்மதித்து, அவர்கள் வேண்டியபடியே செய்து முடித்தார். அச்செயலை அங்குள்ளா ரனைவரும் கண் கலங்கிடக் கண்டனர். அதற்குரிய பாடலைக் காண்க :

கழுந்தாகிய துலுக்கர் கண்கலங்கிட இரும்புச்
செழுந்தீயாகிய கம்பம் சென்றெடுத் தணைத்தலிங்கம்
எழுந்து மாலயனுக் கெட்டா இரும்பெருஞ் சோதி
குருந்து சோணாசலத்தில் குகை நமசிவாய லிங்கம்.

பின்னர் தலயாத்திரை மேற்கொண்டு, காசி சென்று திரும்பினார். திரும்பி வருங்காலை சென்னையில் பூந்தவல்லியில் தீவிபத்தால் பலர் மாண்டனர் என்ற செய்தி அறிந்து, அங்ஙனம் இறந்தவர்களை எழுப்பி அருளினர். அதுகாலை அவர் பாடிய பாடல் வருமாறு :

மணந்த நாளெறியச் சிக்கி மடிந்த மாந்தரிறை வனோடு
புணர்ந்து தாவெழுந்து பிச்சையுதவியே யுகந்த லிங்கம்
புணர்ந்த தீவினையே வித்தம் பொன்னடித் தொழும்பரேனும்
கொணர்ந்த சோணாசலத்தில் குகைநமசி வாய லிங்கம்.

ஒரு முறை மலையாளங் காணச் சென்று, மலையாள எழில் கண்டு மீண்டகாலை, செங்கம் என்னும் சரித்திரப் பிரசித்தி பெற்ற சிற்றூரில் தங்கினர். அது போழ்து அண்ணாமலை அண்ணல் அர்ச்சகர்கள் கனவில் தோன்றி விருதுகளுடன் நமசிவாயத்தை அழைத்து வருக எனலும், அர்ச்சகர்கள் விருதுகளுடன், புடைசூழச் சென்று பெருந் தவச் செல்வரை அழைத்து வந்தார்கள். அதுகாலை சுவாமி கள் எம்பெருமான் பெயரில் பாடிய பாடல்களைக் காண்க.

பூவரும்சுவர்க்கம் தந்துபுறந்து சங்கரித்துத் தானே
மூவருமாகி நின்ற முழுமுதற் சோதிலிங்கம்
தேவரும் முனிவர் யாவர்சித்தரும் இறைஞ்சிப் போற்றிக்
கோவருணை சலத்தில் குகைநமசி வாயலிங்கம் !

வண்டுசூழ் கொன்றை அண்ணாமலைமருண் டெதிரே சென்று
தண்டிகை தந்தழைத்து வந்தசந்நிதி யமர்ந்த லிங்கம்
கண்ட சீரடியார் உய்யக் கருணையே பொழியும் ஞானக்
கொண்ட சோணசலத்தில் குகை நமசிவாய லிங்கம்.

**சுவாமிகளின் அருட் பாடல்கள் :**

வரம்பலிக்கு மெஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு—முரம்பலிக்குஞ்
சோண சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து.

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராலு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக் காளாவார்
பெரியவர்க்கு மேலான பேர்.

வன மனந்தேட வினையடியுஞ்சீர் முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா—ஞானத்
தழல்கண்டமேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு.

சுவாமிகள் அண்ணாமலை அண்ணலை நேரிற் கண்டு பேசி, தம் குறைகளைக் கூறி, அவைகளை நீக்கித் தனக்கு அருளுமாறு "சாரப் பிரபந்தம்" என்ற தலைப்பில் அருமை யாக நயம்படப் பாடியுள்ளார்கள். அவை படித்து இன்புறத் தக்கதாகும். பாடல்களைப் பதிப்பிற் காண்க.



**நகரை இழித்துரைத்தல் :**—சுவாமிகள் அண்ணாமலை அப் பன்பால் அயராத பற்றுக் கொண்டவர் என்பதை முன்னர் கண்டோம். அத்தகைய அப்பன் வாழூரை ஒருகால் இழிவுபடுத்திப் பேசிவிட்டார். அவர் காலத்தில் அருணை யில் வாழ்ந்த கோளர்கள், எப்பொழுதும் சுவாமிகளுக்கு தொந்தரவு விளைவித்து வந்தார்கள். பொறுமையில் திளைப் பவர்களுக்கு இலகுவில் சினம் பிறக்காது. பிறந்து விட்டாலோ அதை நீக்குவதும் கடினந்தான். எல்லைமீறிய தொல்லைக்கோர்கால் உட்பட்ட நமசிவாய மூர்த்தி, அருணையைக் கீழ்க்கண்டவாறு பழித்தும் இழித்தும் பாட ஆரம்பித்தார். தம் பாட்டிலே, "பழியே சுமக்குமூர், பாதகரே வாழூர்" என்று திருவாய் மலர்ந்தருளிய பொழுது, அண்ணாமலை ஆண்டவன் "நான் ஒருவன் இருக் கிறேன்" என்று அசரீரியால் அறிவிக்க, சுவாமிகள் சினம் தணியப் பெற்றவராய் "அழியும் அழியாவூர் அண்ணாமலை" என்று முடித்ததாகவும் கர்ணபரம்பரையாய்ப் பெரியோர் கள் கூறி வருகிறார்கள். நமசிவாயர் காலத்திற்கு முன்னும், அவர்காலத்தில் ஒரு பகுதியும், நெய்தல்தொழில் அருணைநக ரின்கண் மிக்கிருந்ததென்றும், சுவாமிகள் கோளர்கள்பால் சினந்து பாடிய பின்னரே அவர்களும் அவர்கள் தொழிலும் அந்நகரில் அருகி, முடிவில் தேடவேண்டிய அளவிற்கு வந்து விட்டது என்ற மெய்யுரையை நாளும் அந்நகர் மக்கள் கூறி வருவதால் அறியலாம். சீரொழுகும் சான்ற பெருமக்களின் சினம் அம்பைக்கொண்டு, நீரைக் கிழித்தால் ஆங்கு தோன் றும் வடுப்போல மாறினாலும், அச்சினம் செய்யவேண்டிய கடமையைச் செய்தே முடிக்கிறது. வானில் தோன்றும் நன் மதி இருளைக் கடிந்து, ஒளியை நல்கி இன்பத்தில் திளைக்குந் தன்மை பெற்றிருப்பினும், அதற்கும் களங்கம் இருப்பதைக் காண்கிறோமல்லவோ ? அஃதும் அழிக்க முடியாத களங்க மல்லவா ? அதுவேபோல நினைக்க முக்தியை யளிக்குமூர் அண்ணாமலையாகவே இருப்பினும், அதற்கும் ஒரு சிறு களங்கம் ஞானச் செல்வரால் செய்யப்பட்டது.

கோளர்கள் இருக்குமூர், கொன்றாலும் கேளாவூர்
காளையராய் நின்று கதறுமூர்—மேலே
பழியே சுமக்குமூர் பாதகரே வாழூர்
அழியும் அழியாவூர் அண்ணாமலை.

**சுவாமிகள் ஜீவன் முக்தரானது** :—சுவாமிகள் எப்பொழுதும் குகையிலேயே நிட்டைகூடுவது வழக்கம். மக்கள் அவரை வழிபட இடைவிடாது சென்று வந்தார்களாம். ஓர் நன்னாளில் தன்னைக் காண வந்தவர்களிடம் தான் குகைக்குள் சென்று விடுவதாகவும் குகை வாயிலை நன்றாக அடைத்துவிட்டு மூன்று நாட்கள் கழித்துத் தன்னை வந்து பார்க்குமாறும் கூறினராம். அங்குள்ளார் அவர் கூறிய படியே செய்து குறிப்பிட்ட நாளில் சென்று கண்டபொழுது, அங்கே புகழுடலே நிலவியிருந்ததைக் கண்டு, பூதவுடல் எங்கு சென்றதோ என்ற வியப்பும் அச்சமும் கொண்டனர். சுவாமிகள் ஏற்றிய கற்பூரமொத்து (Sublimation) இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்பதே சால் புடைத்து. உள்ளத்தாற் பொய்யாது ஒழுகிய இத்தகு பெரியாரின் திருநாமம் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் நிலவுதாக ! திருவள்ளுவர்,

> " நத்தம்போற் கேடும் உளவாகும் சாக்காடும்
> வித்தகர்க் கல்லால் அரிது"

என்று கூறியதற்கு இலக்காயினர் என்பதே சரியாகும். (குறள் கருத்து – புகழுடம்பு செல்வமடையப் பூத உடம்பு கெடுதலும், புகழுடம்பு அழியாதுநிற்கப் பூதஉடம்பு அழிதலும் உயர்ந்த அறிவுடைய ஞானச்செம்மல்களுக்கே உண்டு.)

**நமசிவாயர் மடம் அன்றும்–இன்றும்** :—இந்த மடம் மலையடிவாரத்திலேயே இருக்கிறது. இது மிகவும் புராதனமான தென்றே தோன்றுகிறது. இம்மடத்தைச் சார்ந்த சீடர்கள் தமிழகத்தில் பலவிடங்களில் இருந்தார்கள் என அறிய முடிகிறது. சுவாமிகள் காலத்திற்குப்பின் ஒருவர்பின் ஒருவராகப் பட்டத்திற்கு வந்து, தற்போழ்துள்ள பட்டம் 73-வதாகும். காலத்தின் கூறுபாட்டினால் மடம் நாளடைவில் குன்றிக் குன்றி இன்றும் க்ஷீண திசை அடைந்த நிலையில் இருக்கிறது. தற்பொழுது மடத்தின் பாதுகாப்பிற்காக ஒரு குழு அமைக்கப்பெற்று, அதன் குழுவினர்கள் சொத்துக்களின் பரிபாலனத்தை ஏற்க முன் வந்துள்ளனர். அந்த மடத்தில் உள்ள பழைமேனா முதலான விருதுகளைக் காணுங்கால் பழைய நினைவுகள் கடல் அலைமோதுவதைப் போல மனத்திடையே வந்து மோதி மோதி மனமாம் கரையை அரிக்கிறது. செப்புத்தகட்டில் மந்திர வார்த்தை



கள் பொறிக்கப் பெற்றுப் பூசையில் இலங்குகிறது. அவ்விடத்திற்குச் செல்லுங்கால் நம்மை அறியாத ஒரு அமைதி பிறக்கிறது ; உலகச் சூழல்களால் விளையும் கேடுகள் உள்ளத்தை வெறுத்து வெளியேறுகின்றன. மடத்தின் இன்றைய பாழ்த்த தோற்றத்தைக் காணுங்கால் மனம் அனலிடைப்பட்ட மெழுகென கசிந்து ஓடுகிறது.

மடம் பாழானதற்குக் காரணம் மிகுதியாகப் பட்டத்திற்கு வந்த மடாதிபதிகள்தான் என்னில் குறையே யாகாது ; நிறைவே யாகுமென்க. ஒரு பெருஞ் செல்வனுக்குப் பல ஆண்டுகள் பிள்ளைப்பேறில்லாதிருந்து, பின்னர் புதல்வர்ப்பேறு ஒன்று அடைந்தால், அச்செல்வன் அப் புதல்வனை எப்படி வளர்த்து வருவான் என்பதை எழுதி விளக்கவேண்டிய அவசியமில்லையல்லவா ? அச்செல்வனோ அப்புதல்வனைப் பாசமாக வளர்த்து, இறைவனால் இயற்கையில் அளிக்கப் பெற்றிருக்கும் அறிவையும் மழுங்க வைத்து, அறியாமை இருளில் மூழ்கடித்து வருவான். காலப் போக்கில் உலகம் பற்றி உணர ஆரம்பிக்கும் செல்வப் புதல்வன், வாழும் வகையோ வாய்விட்டுக் கூறமுடியாத தாய் இருக்கும். பண்பற்று வாழக் கற்றுக்கொண்ட செல்வனுக்கு அறிவு பெருக வழியேது ? கல்வியின் காற்பல விலை என்னவென்று அல்லவா வினவுவான்? அவனிடம் நிறைந்து விளங்குவது அந்தகாரம் நிறைந்த அவலப்பேய்தான் ! ஒரு பெரிய வைக்கோற் குவைக்கு, ஒரு சிறு நெருப்பு துணையானால் என்ன விளையுமோ, அஃதேபோல் பண்பு நீங்கிய செல்வப் புதல்வன் செல்வம் பாழுறும் அல்லவா ? முடிவில் அவனை மூதேவி இருப்பிடமாகக் கொள்வாள். முன்னர் கூறிய செல்வப் பிள்ளையை யொத்து, மடம் என்ற செல்வத் தந்தை பின்னர் பட்டத்திற்கு வந்த தம் அருமைச் சேய்களை, சுகபோகமாக நிறைந்த சொத்துகள் அளித்து, அவர்களையும் அழித்து, தன்னையும் பாழ்படுத்திக் கொண்டது. இருப்பினும் அவ்விடத்தில், ஞான ஒளி நிலவுவதால், ஆங்கு செல்லின் முன்னறிவும், நுண்ணறிவும் வளர இடந்தருகிறது. நன்முறையில் அமைந்திருந்த மடத்துக் கட்டடங்களெல்லாம், கவனிக்காது விட்ட குறையால் இன்று குட்டிச் சுவர்களாக நிற்கின்றன. அந்தோ ! காணுங்கால் வெந்த புண்ணில் வேல் பாய்ந்த [illegible] இருக்கிறது. ஒரு

மாபெரும் ஞானச் செல்வரின் திருநாமத்தைக் காக்க, அவர் புகழ் தரணியெங்கும் வாழும் மக்கள் அறிய வேண்டுமென்றெண்ணி அமைக்கப் பெற்ற ஓர் மடத்தின் நிலை பாழ்பட்டுக் கிடக்கின்றதென்றால், நாம் மார்தட்டி வாழும் வாழ்வு நாகரீகமுடையதா ? போலி வாழ்வன்றோ ! தென்னாட்டு மக்கள் பட்டினிப் பஞ்சத்தால் வாடி வதங்கி மெலியும் பொழுது, பிறநாட்டு மக்களுக்கு இலாபம் கருதி பண்டகசாலையில் உள்ள பொருள்களை விலை கூறுபவன் மன்னனாய் இருக்க முடியுமா ? அவன் அரச வாழ்வு நிலைக்குமா ? நிலைக்கவே நிலைக்காதென்க! அஃதேபோல் நம் நாட்டில் நாம் போற்றவேண்டியவர்களை—வாழ்க்கைக்குரிய நடைமுறைப் பண்பாடுகளை வகுத்து அளித்துச் சென்ற செல்வர்களை நாம் மறந்தால் வாழ்வில் சிறக்க வழியுண்டா?

முடிபு :—படிக்கின்றவர்கள் தொகை, நாட்டிலே இன்று காட்டுத்தீ யொத்து வளர்கிறது. படிப்பும் எத்தகையது ? பெரியவர்களைப் பற்றிச் சிந்திக்கும் படிப்பா ? அன்றி அறிவியலுக்கு விருந்தோ, வாழ்விற்குப் பயனை அளிக்கும் படிப்பா ? அல்லவே! வருவாய் பெறுதற்குரிய வழி யாதென அறியாது, முன்னோர் ஈட்டிய பொருளைப் பெருவாரியாக செலவு செய்து, பிறகு எப்படி வாழ்வது என்றறியாது திண்டாடி வாழும் நிலைக்கு அழைக்கும் படிப்புத்தானே ? கல்வியுலகில் மறுமலர்ச்சி தோன்றுவதாக ! படிப்பதின் பயன் என்ன ? நன்றாக வாழ்வதுதான் ! நன்றாக வாழ்தல் என்றால் எப்படி ? ஒழுக்கச் சீலர்களாகவும், குணக்குன்றுகளாகவும், பண்புடையவர்களாகவும் வாழ்வதன்றோ நல்வாழ்வு. இத்தகைய வாழ்வில் மனம் தெளிவு பெற்று, அதன் வழி அமைதி பிறக்கும் என்பது திண்ணம். அமைதி காண வேண்டில் நாம் என்ன செய்யவேண்டும் ? வழி காட்டிகளாக நின்று, வாழ்வெனும் பாதையைச் செப்பனிட்டுத் தூய்மை செய்த ஞானத்தபோதனர்களை—அவர்களின் பொன் மொழிகளை—மனத்தில் நிறுத்தி, இடையறாது நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். அது போழ்து நம் வாழ்வு பெருக்கம் அடைந்து ஆங்கு பெரும் பேரின்பம் நிலவும். அத்தகைப் பெருமக்களைப் போற்றுங் கல்வியில் நம் தமிழகச் சிறார்களும் சிறுமிகளும்—எதிர்காலத்தை ஆளும் திறன் படைத்தவர்கள்—ஈடுபடும் வரையில் தமிழ



கத்தில் நல்லதோர் நிலை நிலவ வழியில்லை. அவர்களை ஈடுபடச் செய்து, உயர்த்த வேண்டியது அறிஞர் கடன். நமசிவாய மூர்த்தி போன்ற பெரியார்கள் திருநாமம் தமிழக மக்கள் உள்ளத்தில் நிலவுவதாக !

---

9. ஒழிபு

# திருக்கழுக்குன்றம் ஆனிமகப் பெருவிழா

சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் வழக்கம்போல் ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தை ஒட்டித் திருமுறைப் பெருவிழா சிறப்புற ஆனி 13, 14, 15, 16 தேதிகளில் நடைபெற்றது.

கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டு, விழா பலவகைப் புதிய சிறப்புக்களுடனும் பெருங்கூட்டத்துடனும் திகழ்ந்தது. விழா மிகவும் சிறப்பாகவும் வளர்ச்சிப் போக்கிலும் இருந்தது. விழாவின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் பெருங் காரணம் ஆசிரியர் இளவழகனார், திருமுருக. கிருபாநந்த வாரி, திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய சான்றோர்கள் விழாவில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டதுதான்.

இவர்களுள் வாரி அவர்கள் தான் சென்ற இடங்களில் எல்லாம் விழாப்பற்றி எடுத்துச் சொல்லியதும், ஆசிரியர் அவர்கள் இவ்விழாவை முன்னிட்டே தொண்டமண்டல யாத்திரையை 2-6-52 முதல் மேற்கொண்டு அங்கங்கே சுற்றிச் சொற்பொழிவுகள் (பிரசாரம்) செய்து வந்ததும் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளாகும்.

விழா நிகழ்ச்சிகளை விரிவாகச் செய்வதற்குப் பெருந் துணையாக இருந்தவர்கள் வண்ணையம்பதி சிவத்திரு. வள்ளியம்மையார் அவர்களாவர். ஆயிரக்கணக்கான அன்பர்களுக்கு மூன்று நாட்கள் இரவு பகலும் உணவும் சிற்றுண்டியும் கொடுத்து ' உபசரிப்பது ' எளிதான செயலாகுமா ? அதனை நிறைவேற்றிய அம்மையாரின் தாராளமான பெருந்தன்மைக்கு இக்காலத்தில் ஈடும் எடுப்பும் காண்பது மிகவும் அரிதாகும்.

### முதல் நாள் (26-6-52)

மாலை 7 மணிக்கு அடிவாரத்தில் ஈண்டிய அடியார்களை வரவேற்று எல்லோருக்கும் சந்தனம் பன்னீர் வழங்கித் தலைவர்களுக்கு மலர்மாலை அணிவித்து மேளத்துடன் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். மரக்காணம் திரு. எ. கணபதி முதலியார். இரு வரவேற்பு இதழ்கள் அவராலும் கானக் கோயிற் பேட்டைத் தேவார சபையினராலும் படித்துக் கொடுக்கப்பட்டன. பின், திருவள்ளுவரகம்–இராமநாத பிள்ளை அவர்கள் தலைமையில் ஊர்க் கோயில் வழிபாடு ஏறத்தாழ நாலாயிரம் அன்பர்கள் திரண்டு பின்தொடர நடைபெற்றது.

வழிபாட்டின் பயன் பலவகையிலும் அமைதி பெறுதலே எனப் பிள்ளையவர்கள் மணிமொழிபோல் மிகச் சுருக்கமாக விளக்கினார்கள்.

திரிபுர சுந்தரியின் திருக்கோலக் காட்சியும், அவர் முன்னிலையில் திருநெறித் தமிழிசைச் செல்வர் திரு. கூத்தரசு (சைதை) அவர்களின் இனிய திருமுறை இசையரங்கும் சிறப்பாக அமைந்தன.

### இரண்டாம் நாள் (27-6-52)

**மாணிக்கவாசகர் திருநாள்**

காலை 6–30 மணிக்கு ஊர்க்கோயிலில் உட்கோபுர வாயிற் பிள்ளையார் திருமுன் அடியார்கள் கூடினர். வழிபாட்டுக்குப் பின் ஆசிரியர் திருமுறை வரலாறு பற்றியும், பொல்லாப் பிள்ளையார் அருள் பற்றியும், திருமுறை விழாவுக்குச் சிறப்பிடம் திருக்கழுக்குன்றமே என்பது பற்றியும் உணர்ச்சி மிக விளக்கினார்கள். யானைமேல் திருமுறைகள் ஒப்பனையோடு திகழ, பதினெண்கணத்தவரோ எனப் பல ஊர்களிலிருந்தும் போந்திருந்த 18 சபையார் திருமுறைகளைப் பாராயணம் செய்துகொண்டு அணி அணியாகப்பின் தொடர, விழாக்கூட்டம் மலைவலமாகச் சஞ்சீவிமலைச் சாரலில் உள்ள திருவடிக் கோயிலை 9-9½ மணிக்குச் சேர்ந்தது.

அங்கே மேற்படி பிள்ளையார் வழிபாட்டைச் சிறப்புறச் செய்வித்த சென்னை திரு. வேதாசலம் செட்டியார் அடியார்களுக்குக் காலை உணவாகப் பிள்ளையார் அருளமுதை (பிரசாதம்) வழங்குவித்தார்.



திருவடியிடத்தில் அமைதியான முறையில் பூசையும், வழிபாடும் சிறந்தது. அன்பர் பலர் உருக்கமாகப் பாடினர். திருவள்ளுவரகம்—வாரி, ஆசிரியர் முதலியோரின் அரிய ஆதரவு மொழிகளுக்குப் பின் திரு. எ. கஜபதி நாயகர் திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம் என்னும் விளக்க நூலைத் திருக்கூட்டச் சார்பில் வெளியிட்டார்.

அந்நூல் இராயபுரம் இறைபணிக் கழகத்தில் ஆசிரியர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பாகும். ஏறத்தாழ 80 பக்கமுள்ள அந்நூலை எட்டு அணாவிலைக்குத் திருக்கூட்டத்தார் வெளியிட்டது பெரிதும் போற்றத்தக்க ஒரு செயலாகும். இதுவன்றி இலவசச் சிறு வெளியீடுகளும் விழா நினைவாக கிளிக்குகை திரு. சிவானந்த அடிகள் (சிவ. புராணம், கருணை மலர்), சென்னை வாசுதேவ பிள்ளை (அருட்பா, ஆளுடைய அடிகள் மாலை) முதலியோரால் வெளிவந்து உலவின. வழக்கம்போல் மாம்பாக்கம் குருகுலத்தாரின் (கழுக்குன்றக் காட்சி, திருக்கழுக்குன்றத் திருபதிகங்கள்) அடக்கவிலைப் பதிப்புகளும், கௌணியன் அச்சகத்தாரின் பன்னிரு திருமுறைத் திரட்டு முதலியனவும் விற்பனைக்கு வந்திருந்தன.

பகல் உணவு மிகவும் மகிழ்ச்சி தரத்தக்க வகையில் கதம்ப, தயிர் சோறுகளாக அங்கேயே நிலாச்சோறு போல் வழங்கப்பட்டது.

மருத்து மலைச்சாரலில் மரநிழல்களில் எல்லோரும் ஓர் நிரையாகவும் கூட்டம் கூட்டமாகவும் அமர்ந்து உண்ட காட்சி மிக்க கிளர்ச்சியைக் கொடுத்தது. திருவடியிடமாதலின் அங்கே உண்ட அவ்வருளமுது திருவருள் ஞானத்தையே உண்பது போன்ற பேருணர்ச்சியை நல்கியது. அன்பர்கள் வள்ளியம்மையார் வாழ்க! வாழ்க!! என வாயார வாழ்த்தினர்.

பிற்பகல் 3 மணிக்கு அதே இடத்தில் திருவள்ளுவரகம் அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியர் திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார், சென்னை திரு. இரத்தின சபாபதி நாயகர் முதலியோரின் சொற்பொழிவுகளோடு திருமுறைப் பேரவை நடைபெற்றது.

திருமுறைகளின் பெருமைகளையும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளத் தக்க முறைகளையும் தலைவரும், பிறரும்

தக்கவாறு விளக்கினர். வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் அவற்றைக்கொண்டே தீர்த்துக் கொள்ளலாம் என்றும், எல்லாச் சடங்குகளையும் அவற்றாலேயே செய்விக்கலாம் என்றும் அறிவுறுத்தினர்.

மாலை 5-30 மணிக்கு மீண்டும் மலைவலமாக விழாக் கூட்டம் நால்வர் கோயிலை அடைந்தது. அங்கே நால்வர் வழிபாடும், குளப்பாக்கம் அருணகிரி சுவாமிகளின் பேச்சும், இசைச் சோதி மணி - இரத்தின வேலவரின் மரபு பிறழாத திருமுறை இசையரங்கும் நன்கு நடைபெற்றன. மணிவாசகருக்கு ஊசல் நிலையில் சிறப்பாக அலங்காரம் செய்திருந்தார்கள். இறுதியில் மூவர் பேட்டையார் செலவில் அன்பர்களுக்குச் சுண்டலும் வழங்கப்பட்டது.

இரவு 11 மணி முதல் 2 மணிவரை (ஒலிப்பெருக்கிக் கோளாறினால் நேரங்கடந்து தொடங்கியது) "திருமுருக கிருபானந்தவாரி அவர்களின் பெருந்துணை" என்பது பற்றிய விரிவுரை அடிவாரத்தில் மிக நன்றாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் மிகவும் கிளர்ச்சியோடு அவ்விரிவுரையைக் கேட்டு மகிழ்ந்து பயன் பெற்றார்கள்.

## மூன்றாம் நாள் (28-6-52)

காலை 7 மணிக்குத் திருப்புகழ் மணி அவர்களின் தலைமையில் திருப்படிவிழா தொடங்கியது. பக்திப் பரவசத்தோடு தமது முதிர்ந்த நிலையிலும் அப்பெரியார் உணர்ச்சி மிகப் பாடி அன்பர்களை உருக்க நிலைக்கு ஏற்ற எல்லோரும் மலைமேல் ஏறினார்கள். தொண்டைமண்டல யாத்திரையைக் கருதியபடி திருக்கழுக்குன்றத்தில் முடித்த ஆசிரியர் அவர்கள் உச்சிச் செல்வனை உணர்த்தற் கரிய உருக்கநிலையில் நின்று வழிபட்டு, யாத்திரையில் கலந்துகொண்ட அன்பர்களுக்குத் திருநீறு கொடுத்து மகிழ்வித்து உள்ளங் குளிர்ந்தார்கள்.

பிற்பகல் 4 மணிக்கு அடிவாரத்தில் சித்தாந்த சிகாமணி கா. வச்சிரவேல் முதலியார் அவர்களின் தலைமையில் இரண்டாம் நாள் திருமுறைப் பேரவை தொடங்கியது. அவர்களின் அரிய தலைமைஉரைக்குப்பின் திருவல்லிக்கேணி திருமதி. பத்மாவதி அம்மை B. O. L. (Hon.) அவர்களும், புலவர் முருகவேள் B. O. L. அவர்களும் முறையே 'திரு



வாசகத்தேன்' 'மணிவாசகர் மாட்சி' என்பன பற்றி இனிய முறையில் பேசினர்.

(சொற்பொழிவுகளின் சாரம் முல்லைக் கொடியில் தொடர்ந்து வரும்.)

இடையில் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள், ஆசிரியர் அவர்கள் தந்த விளக்கத்துக்குப் பின் மாம்பாக்கம் குருகுலப்பணித் திட்டத்தை நூல்வடிவில் வெளியிட்டு ஆர்வமாகப் பேசி ஆதரவும் செய்தார்கள்.

தலைவர் அவர்களின் இனிய முடிவுரையோடு பேரவை இரவு 9 மணிக்கு முடிந்தது.

மீண்டும் இரவு 10மணிக்கு அதே இடத்தில் திருவாசக மணி கே. எம். பாலசுப்பிரமணியம், B. A., B. L. அவர்களின் திருவாசகம் பற்றிய விரிவுரை ஒரு மணிவரை சிறப்புற நடைபெற்றது.

## நான்காம் நாள் (29-6-52)

காலை 9-மணிக்கு அடிவாரத்தில் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T., அவர்கள் தலைமையில் சமய வளர்ச்சி மகாநாடு தொடங்கியது. வரவேற்புரையின்போது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் "வழிபாட்டுக் கூட்டவை" என்னும் பொது அமைப்புப் பற்றியும் அதில் சைவ அமைப்புகளெல்லாம் இணைந்து காலத்திற் கேற்றபடி சமயப் பணிகளைக் கிளர்ச்சியாகச் செய்யவேண்டிய கட்டாயம் பற்றியும், இணைய வேண்டிய முறை பற்றியும், சமய வளர்ச்சியிற் கருத்துடைய அன்பர்கள் எல்லாம் ஆண்டுக்கொரு முறை அதற்கு அடையாளமாக 0-4-0 சமயக் காணிக்கை செலுத்தி நூறாயிரக் கணக்கில் திரண்டு நிற்கவேண்டும் என்பது பற்றியும் மாநாட்டின் நோக்கம் பற்றியும் விளக்கப்பட்டது. தலைவர்வரகளின் அரிய முன்னுரைக்குப்பின் இருக்கம் ஆதிமூல முதலியார் (திருக்கூட்ட அமைப்பாளர்) படத்தைப் புலவர் மயிலை - சிவமுத்து அவர்கள் தமக்கே உரிய அழுத்தம் திருத்தமான உரைகளோடு திறந்துவைத்தார்கள். சுந்தரப் பெருமாள் கோயில் திரு. மா. சிவகுருநாதம் பிள்ளை அவர்கள் 'சிதைந்த சிவாலயங்கள்" என்ற தலைப்பில் மனநெகிழ்ச்சியை உண்டாக்கத் தக்க விரிவுரையை நிகழ்த்தினார்கள். பாடல் பெற்ற

பழைய தலங்களைப் பற்றி அவர்கள் கொடுத்த குறிப்புகளும், கொண்டு வந்த தரைப்படங்கள் (Maps) முதலியனவும் அவர்களின் அரிய உழைப்பையும் பெரிய சமயப் பற்றையும் எடுத்துக் காட்டின. அவர்கள் பேச்சும் எழுத்தும் நூலாகிப் பரவினால் சமய உலகில் நல்ல திருத்தங்கள் ஏற்படும் என்பது உறுதி. நிற்க, பிறகு சென்னை, திரு. இராசரத்தினம் அம்மையார், M. A., L. T., அவர்கள் 'சமயம்' என்னும் தலைப்பில் ஓர் இனிய சொற்பொழிவைச் செய்தார்கள். இறுதியில் திரு. சாமி வேலாயுதனார் அவர்கள் முன் மொழியவும், தலைவர் அவர்கள் தம் முடிவுரையாக வழிமொழியவும் கீழ்க்காணும் கருத்துடைய ஒன்பது தீர்மானங்கள் நிறைவேறின.

1. சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் நிறுவப் பெற்றிருக்கும் வழிபாட்டுக் கூட்டவையில் சைவ சபைகள் எல்லாம் இணையவேண்டும்.

2. சமயக் காணிக்கை செலுத்தும் பழக்கத்தையும், வார வழிபாட்டு வழக்கத்தையும் சீவகாருண்யத் தொண்டுணர்ச்சிகளையும் நம் சமயத்தவர்பால் மிகுதியாக்க ஆங்காங்குள்ள சமயத்தொண்டர்கள் முயலவேண்டும். அதற்குத் திருக்கோயில்கள் திருமடங்கள் முதலியவற்றின் அதிகாரங்கள் தக்க ஆதரவு செய்தல் வேண்டும்.

3. திருக்கோயில்களும் திருமடங்களும் தமது வருவாயில் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சமயப் பிரசாரத்திற்கென்று ஒதுக்கிவைத்துச் செலவிடவேண்டும். அரசினரும் அதற்கான சட்டங்களைச் செய்தல் வேண்டும்.

4. திருக் கோயில்களில் தேவார திருவாசக திருநாலாயிரப் பாடல்களைச் சிறப்பான முறையில் ஓதுவிக்க அதன் அதிகாரிகள் ஏற்பாடு செய்யவேண்டும்.

(5) இந்து அறநிலையக் கழகத்தை (H. R. E. Board) அரசாங்கத்தோடு இணைத்தபோது அரசாங்கக் கணக்குக்கு மாற்றிய அதன் பெருந் தொகையைக் கொண்டு அங்கங்கே சிதைந்து கிடக்கும் பழைய, பாடல்பெற்ற இந்துக் கோயில்களைச் சீர்ப்படுத்தி அமைக்கச் செலவிட வேண்டும்.

(6) அர்ச்சகர்களுக்கு எனத் தனியே பாடசாலையும் தேர்வும் வைத்துத் தகுதிவாய்ந்த அர்ச்சகர்களைத் தயார் செய்ய அரசினர் தக்க சமய அறிஞர்களைக் கலந்து ஆவன செய்ய வேண்டும்.



(7) திருக்கோயில்களின் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்களை அவற்றின் அதிகாரிகள் சுண்ணாம்பு முதலியன தீற்றி அழிக்காமல் பாதுகாக்க வேண்டும்.

(8) பூண்டி தண்ணீர்த் தேக்கத்தில் மூழ்கடிக்கப்பட்ட திருவெண்பாக்கம் திருக்கோயிலை உடனே சூளை திரு. T. P. இராமசாமி பிள்ளை அவர்கள் ஒதுக்கியுள்ள பணத்தைக் கொண்டும் மற்றும் சைவப் பெருஞ் செல்வர்கள் உதவக் கூடிய பணத்தைக் கொண்டும் மீண்டும் புதுக்கி அமைக்க அரசினர் முயலவேண்டும்.

(9) சேக்கிழார் திருப்பணிக் கழகத்தினர் குன்றத்தூர் சேக்கிழார் திருக்கோயிலின் நித்திய நைமித்திகங்கட்குச் செய்து வரும் ஏற்பாட்டுக்கு அன்பர்கள் மிகவும் ஆதரவு செய்ய வேண்டும்.

பிற்பகல் 4 மணிக்கு, திரு. கண்ணன் அடிகள் ' எடுப்பான முறையில் மாம்பாக்கம் குருகுலப் பணித் திட்டம் பற்றி ஆதரவு மொழிகள் வழங்கினர்.

அப்போது விழாவுக்கு வந்திருந்த காட்ராம்பாக்கம் திரு. வரதா ரெட்டியாரும் அவர்களின் துணைவி திரு. செயலட்சுமி அம்மையாரும் குருகுலத்துக்கு ஓர் ஏகர் நிலமும், முல்லைக்கொடியின் வளர்ச்சிக்கு ரூபாய் நூறும் கொடுப்பதாக உறுதி கூறினர்.

ஆசிரியர் தலைமையில் 5 மணிக்குமேல் பாராயணத்துடன் அன்பர்கள் அனைவரும் மலைவலமாகப் புறப்பட்டுச் சொக்கம்மை திருக்கோயில் சாரலை அடைந்தனர். அங்கே உள்ள கருங்கற் பீடத்தில் ஆசிரியர் அமர்வதற்கும், இறைவன் திருவருளே என அன்பர்கள் உள்ளமும் உடலும் சூழலும் குளிரச் சிறுதூறலாக மழை பொழிவதற்கும் சரியாக இருந்தது.

சென்ற ஆண்டிலும் இதே இடத்தில் இதே தேனிப்பு நேரத்தில் ஆசிரியர் பெரிய புராணத்துள் தடுத்தாட்கொண்ட புராணத்தில் 'கங்கை' என்று தொடங்கும் முதற் செய்யுளை ஓதி விளக்கம் சொன்னவுடன் அங்கே நிலவிய தண்ணீர்த்தட்டு நீங்கும்படி நல்ல மழை பொழிந்தது. இவ்வாண்டு தண்ணீர்த் தட்டு இல்லையாதலினாற்போலும்,

தேனிப்புக்குத் தடையிராமல் 5-6 நிமிடங்கள் மட்டும் சிறு மழை பெய்து அன்பர்களின் திருவருள் உணர்ச்சியைச் செழிப்பித்தது.

தேனிப்பு முறைகளை முறையாகப் பாடங்கேட்டுப் பயிலவேண்டும் என்னும் உணர்வைப் பெருக்குகிற முறையில் ஆசிரியர் அவர்கள் நேரத்திற்கேற்ப ஒருவகைத் தியான முறையை விளக்க, அன்பர்கள் அதன்படி தியானித்துக் கொண்டு தங்குமிடம் சேர்ந்தனர்.

இரவு (மீண்டும் சிறிது நேரம் மழை நன்றாகப் பொழிந்தது.) 10 மணிக்குமேல் அடிவாரத்தில் தென்றுப்பிரிக்கத் தமிழன்பர் திரு. மாணிக்கம் அவர்களின் கிளர்ச்சியான இசைப் பாட்டுக்குப் பின் காஞ்சிபுரம் இயலிசைத் தமிழ் மணி திரு. சுந்தரமூர்த்தி அவர்களின் மணிவாசகர் வரலாறு பற்றிய இன்னிசை விரிவுரை இரவு நெடுநேரம் வரை மிகவும் நன்றாக நடைபெற்றது.

விழா நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன.

—தமிழ்ச்சிறுவன்

---

## சைவப்புலவர் தேர்வு விவரம்

இத்தேர்வுகள் சென்னை, சிதம்பரம், தஞ்சை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், கோயம்புத்தூர், யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களில் விண்ணப்பிக்கும் இளைஞர்கள் வசதிக்கேற்ப குறிப்பிட்ட தேர்வு நிலையங்களில் நடைபெறும். தேர்வுக்கு ரூபா 2 (இரண்டு) நுழைவுக் கட்டணமாகச் செலுத்தல் வேண்டும். தேர்வுக்கு ஆண்டு வரையறையின்றி எவரும் விண்ணப்பிக்கலாம். தேர்வில் வெற்றி பெறுவோர் சைவப் புலவர் என்ற பட்டம் பெறுவர்.

விண்ணப்பத்தாளும், நுழைவுக்கட்டணமும் செப்டம்பர் 30உக்குள் அனுப்புதல் வேண்டும். நுழைவுக்கட்டணம் எதை முன்னிட்டும் திருப்பியளிக்கப்பட மாட்டாது. வேறொரு தேர்வுக்காகவோ, விண்ணப்பதாரருக்கோ பயன்படுத்தப்பெற மாட்டாது. தேர்வு நிலைய நுழைவுச் சீட்டு நவம்பர் மாதம் அனுப்பப்பெறும். தேர்வுகளின் முடிவு டிசம்பர் சித்தாந்தத்தில் வெளியிடப்பெறும். பட்டங்கள் சமாஜ அடுத்த ஆண்டு விழாவில் வழங்கப்பெறும்.



ஒவ்வொன்றுக்கும் மூன்று மணிப் பொழுதில் விடை எழுதக் கூடிய இரண்டு வினாத்தாள்கள் தேர்வுக்குண்டு. ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக்கு இருபத்தைந்து வீதமும் மொத்தத்தில் நூற்றுக்கு நாற்பத்தைந்து வீதமும் பெறுவோர் மூன்றாம் வகுப்பிலும், மொத்தத்தில் நூற்றுக்கு ஐம்பது, அறுபது வீதங்கள் பெறுவோர் முறையே இரண்டாவது, முதல் வகுப்புக்களிலும் தேறினவர் ஆவர்.

### 1953-ம் வருடப் பாடத் திட்டம்

#### I இலக்கியப் பகுதி

1. திருக்குறள்—அறத்துப்பால்—(அதிகாரம் 1 முதல் 38 வரை).
2. ஒன்பதாம் திருமுறை—(திருவிசைப்பா – திருப்பல்லாண்டு).
3. திருமந்திரம்—(முதல் தந்திரம் – உபதேசம் 30 பாக்கள்).
4. பதினோராம் திருமுறை—(திருமுருகாற்றுப்படை அற்புதத் திருவந்தாதி).
5. பெரியபுராணம்—(காரைக்காலம்மையார் சரிதம்).

#### II சாத்திரப் பகுதி

1. சிவஞானபோதம்.
2. சிவஞானசித்தியார்—சுபக்கம்.
3. திருக்களிற்றுப்படியார்.
4. திருவுந்தியார்.

குறிப்பு :—மேற்குறிப்பிட்ட நூல்களுக்கு எந்த உரையையேனும் படிக்கலாம்.

தேர்வு எழுத விருப்பமுள்ளோர் கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 2 நுழைவுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பத்தாள் பெறலாம்.

சு. இளவழகன்,
துணைச் செயலாளன், சை. சி. மகா சமாசம்,
53, திருவள்ளுவர் தெரு, (ஜோன்ஸ் ரோடு)
சைதாப்பேட்டை, சென்னை-15.

மேற்குறிப்பிட்ட தேதிக்குள் பணமோ விண்ணப்பத்தாளோ வரத்தவறினால் தேர்வு எழுத ஒப்புதல்தர இயலாது.

## செய்தித்திரட்டு

*13-7-52.* கோவைத் தமிழ்ச் சங்கம் : Dr. சுப்பிர மணியம் தலைமையில், ராதாகிருஷ்ண ஐயர், M.A. அவர்கள் கொல்லாமை என்பது பற்றிப் பேசினர்கள்.

*13-7-52.* திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபையில் திரு. அ. நடேச முதலியார் அவர்கள் 'தாயுமானவர்' விளக்க உரை நிகழ்த்தினர்கள்.

*19-7-52* முதல் *28-7-52* வரை தருமபுர ஆதீனம், திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு. சென்னையில் பல இடங்களில் பல பெரியவர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நடத்தினர்கள்.

*20-7-52.* திரிசிரபுரம் சைவ சித்தாந்த சபை : தாயுமானவர் விளக்க உரை.

*20-7-52* கோவைத் தமிழ்ச் சங்கம் : சுப்பிரமணிய முதலியார் தலைமையில் திரு. கந்தசாமி பிள்ளையவர்கள் "சொற்சுவை" என்பது பற்றிப் பேசினர்கள்.

*20-7-52.* ரிஷிகேசம், தெய்வ நெறிக் கழகம் : கோவை — திரு. கே. எஸ். ராமசாமி சாஸ்திரிகள் தலைமையில் முதலாண்டு விழா நடைபெற்றது.

*25-7-52.* தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை : சித்தாந்தப் பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்களின் 80-வது ஆண்டுப் பிறப்புநாள். கோயில் வழிபாடும் பேரவையும் நடைபெற்றது. பொன் முடிப்பு அளிக்கப்பெற்றது.

*30-7-52.* திருவாரூர் ஆலாலசுந்தரர் நினைவு இன்னிசைத் திருமுறை, காசிமடம், திருப்பனந்தாள். 14 வித்வான்கள் கலந்து கொண்டார்கள்.

*30-7-52.* திருவஞ்சைக்களம் சுந்தரர் திருநாள், சேரமான் பெருமாள் திருநாள் : சேக்கிழார் திருக்கூட்டத்தாரால் நடத்தப்பெற்றது.

*30-7-52* முதல் *3-8-52* [illegible] அர்க்காடு சுந்தரர் நிலையத்தில் கண்ணன் [illegible] சுந்தரர் திருநாள் நடைபெற்றது.

186884

**திருவள்ளுவர் செந்தமிழ்ச் சிவநெறிக் கழகம், சைதாப்பேட்டை:—** ஷை கழகத்தில் *16-7-52* முதல் "சிவஞானசித்தியார்" வகுப்புத் துவங்கப் பெற்றுப் புதன்தோறும் மாலை 7-30 மணிக்கு நடைபெற்று வருகின்றது.

மற்றும் ஷை இடத்திலேயே செவ்வாய்தோறும் சிலப்பதிகார வகுப்பும், திருக்காரணீசுவரர் திருக்கோயிலில் திருக்குறள் வகுப்பும் மாலையில் அதே நேரத்தில் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றன. திருக்குறள் வகுப்பிற்குப் புலவர் ப. இராமநாதம் அடிகளும் மற்ற இரு வகுப்பிற்கும் புலவர் முருகவேள் B.O.L. அவர்களும் ஆசிரியர்களாக இருந்து அருந்தொண்டாற்றிவருகின் அன்பர்கள் கேட்டு இன்புறுவார்களாக!

## மதிப்புரை

1. **திருச்சிற்றம்பலக் கோவையார்** :—பழைய உரையுடன் தஞ்சை சரசுவதி மஹால் வெளியீடு. நெ. 44. பதிப்பாசிரியர் திரு. ரா. விசுவநாத அய்யர். விலை சாதா ரூ. 7-8-0; காலிகோ ரூ. 8-0-0.

தஞ்சை சரசுவதி மஹால் நூலகத்தார்கள் பண்டைய மன்னர் சேகரித்து வைத்திருந்த அருமையான நூல்களில் சிறந்தவற்றைப் பொறுக்கியெடுத்து அச்சுவாகனம் ஏற்றிப் பொதுமக்களுக்குப் பயன்படும்படி செய்கிறார்கள். அந்தச் சேவையில் வெளிவந்த நூல்களில் இந்த நூல் சிறந்தது. கௌரவக் காரியதரிசி திரு. எஸ். கோபாலன் அவர்கள் ஆங்கிலத்தில் திருக்கோவையாரைப் பற்றி ஒரு சிறந்த முன்னுரை எழுதியிருக்கின்றார்கள். பிறகு தமிழிலும் ஒன்று எழுதியிருக்கின்றார்கள். பதிப்பாசிரியருடைய முகவுரை ஒன்றும் இருக்கின்றது. முன்னமே திருக்கோவையாருக்குப் பேராசிரியர் உரை ஒன்று உண்டு. இந்த உரை தெளிவாக உள்ளது. குளுக்களுக்குப் பழைய உரை. பொழிப்புரையும், செய்யுட்களுக்குப் பதவுரையும் எழுதப்பட்டுள்ளன. பிறகு சில பாடல்களுக்குக் குறிப்புரைகளும்

அதில் அறிஞர்கள் சேர்ந்து உழைத்தால் அதுவும் சீர்திருத்தம் பெற்று மற்றை இரண்டையும் ஆதரித்து நிற்கும். நமது நாட்டில் கணக்கற்ற கழகங்கள் தோன்றி நின்று, அழிகின்றன. காளான் அல்லது நாய்க்கொடையின் ஆயுள் தான் அவைகளுக்கு உண்டு. அவைகள் நிரந்தர ஆயுள் பெற்று நாட்டுப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் சேவை செய்யும்பட்சத்தில் அவைகளும், நாடும் முன்னேற்றம் அடைவது திண்ணம்.

4. நமது சமாஜம் : தென்னாட்டுச் சமயக் கழகங்களில் நமது சமாஜம் முன் அணியில் நிற்பவைகளில் ஒன்று. சென்ற 47–ஆண்டுகளாக அது சமயத்திற்கும், நாட்டிற்கும் கணக்கற்ற அரிய சேவைகள் செய்துவந்திருக்கின்றது. 1905–முதல் அது செய்திருக்கும் சேவைகளை ஒழுங்காக எழுதினால் ஒரு பெரும் நூலே ஆகும். ஆனால் அவைகளைப் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியும் வகையில் நிரந்தரமான செய்கைகள் ஏற்படவில்லை. பல்லாயிரக்கணக்கில் வெளியிட்ட இலவச சமய நூல்கள் சமாஜம் செய்த வேலைக்குச் சான்றுகளாக இருக்கக்கூடும். ஆனால் அவைகள் சில சமய அன்பர்களின் வீடுகளில் பார்த்து அறியலாமே தவிர ஒரு குறிப்பிட்ட நூல் நிலையத்தில் வைக்கப்படவில்லை. சமாஜத்தின் திங்கள் வெளியீடாகச் சித்தாந்தம் என்ற பத்திரிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது. அதில் அருமையான சமயக் கட்டுரைகளும் ஆண்டுவிழாப் பேச்சுகளும் அறிக்கைகளும் வந்துகொண்டிருக்கின்றன. அவைகளைக்கொண்டு சமாஜத்தின் வேலையை நன்கு அறியலாம். அச்சித்தாந்தத் தொகுதிகளும் ஒழுங்காக ஒரு நிலையத்தில் வைக்கப்படவில்லை.

ஆண்டுதோறும் ஆண்டுவிழாவும் சமயச் சொற்பொழிவுகளும் நடந்து வருகின்றன. தலைமைப் பேச்சுகளாவது, தனியாக ஓரிடத்தில் தொகுத்து வைக்கப்படவில்லை. ஆண்டுக்கொருமுறை ஆயிரக்கணக்காக பணச் செலவு செய்து, பாணவேடிக்கைபோல திருவிழாக்களை நடத்திப் பயனென்ன ? சமாஜம் செய்யும் வேலைகள் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்றால் அதற்கு ஒரு தனி நிலையம் வேண்டாமா ? அச்செய்திகளைக் காட்டும் சான்றுகள் முழுவதும் அதில் அமைக்கப்பட வேண்டாமா ? அமெரிக்க,



ஐரோப்பா முதலிய இடங்களில் எந்த இயக்கத்திற்கும் ஒரு தனி நிலையம் உண்டு. ஒரு நிலையம் மட்டுமல்ல, ஒரு நடுநிலையமும், பல கிளை நிலையங்களும் தோன்றிப் பெருகி வரும். சமய இயக்கத்திலோ நிரந்தர நிலையங்கள் மிக அவசியம். கோயில்களே யன்றிச் சமயக் கழக நிலையங்களும் அங்கே ஏற்படுகின்றன. நமது சமாஜம் ஒரு சமய இயக்கம் ஆதலால் அதற்கு ஒரு நடுநிலையம் வேண்டாமா ? அமெரிக்காவில் நாள் ஒன்றுக்கு 10 கோயில்கள் கட்டி முடித்தார்கள் என்றால் நமது சமாஜத்திற்கு 50–வருஷத்தில் ஒரு நடுநிலையம் ஆவது அமைக்கவேண்டாமா ? அதைப் பற்றிச் சிந்திப்பதற்கு இதுவே தகுந்த தருணம்.

நமது சமாஜத்தார் தொடக்கத்திலேயே நடுநிலையம் ஒன்று தாபிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள். ஆனால் அது நடைபெறவில்லை. பிறகு ஒவ்வொரு ஆண்டுக் கூட்டத்திலும் ஒரு நடுநிலையமும், புத்தகசாலையும் நிறுவிக்க வேண்டுமென்று பேசிக்கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஒரு சொந்த நிலையம் ஏற்படவில்லை. மீண்டும் 1917–ஆம் ஆண்டில். சபாஇரத்தின முதலியார் தலைமையில் நடந்த கூட்டத்தில் சமாஜத்திற்காக ஒரு நிலையம் கட்டவேண்டுமென்று தீர்மானித்து, அதற்காக இராஜூ கிராமணியார், மயிலாப்பூரில் அதற்கு வேண்டிய நிலத்தைக் கொடுப்பதாகவும் 42 அன்பர்கள் தொகைகள் கொடுப்பதாகவும் கையொப்பமிட்டிருக்கிறார்கள். இந்தச் செய்தி அந்த ஆண்டு அறிக்கையில் அச்சிடப்பட்டுள்ளது. அப்போது வசூலித்த தொகையும் கையொப்பமிட்ட தொகைகளும் உத்தேசித்த நிலமும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. நிலையம் ஒன்று ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பிறகு 1941–முதல் பல ஆண்டு விழாக்களில் நடுநிலையத்தைப் பற்றிய பேச்சுக்களும் தீர்மானங்களும் முயற்சிகளும் கூடத் தோன்றின. ஆனால் அவைகளும் சித்தியானதாகத் தெரியவில்லை.

இந்த ஆண்டாவது நடைபெறும் விழாவில் நடுநிலையத்தைப்பற்றிப் பேச்சு அளவில் நிறுத்தாமல் செயல் முறையில் கொண்டுவர வேண்டும். மூன்று ஆண்டுகளில் வெள்ளி விழா நடத்தவேண்டும். அப்போது ஒரு நடுநிலையமும், ஒரு நூலகமும் நமது சமாஜத்திற்கு இருக்கின்றன என்று

தோற்றுவித்தாலன்றி, நமது முந்திய செயல்கள் எல்லாம் பகட்டுகள்போல பயனின்றி மறைந்து போகும். மேலே கூறியபடி அமெரிக்காவில் நூறுாயிரக்கணக்கில் சமய நிலையங்கள் தோன்றிக் கொண்டிருக்க, 50—ஆண்டு அரிய வேலை செய்து வருகிற சமாஜத்திற்கும் ஒரு நிரந்தரமான நிலையம் இருக்கவேண்டுமென்ற உறுதி அன்பர்களுடைய நெஞ்சில் படியவேண்டும். இது ஒரு சிறந்த திருத்தொண்டாகையால் இதனைக் குறித்துப் பன்னிப்பன்னி மீண்டும் மீண்டும் வற்புறுத்தி எழுதிவர வேண்டும். இனி அன்பர்கள் ஊக்கங்கொண்டு எண்ணின காரியத்தைச் செயல்முறைக்குக் கொண்டு வருவார்களாக.

---

## 2. தலப்பகுதி

# 1. திருமாகறல்

1. இடம் : செங்கல்பட்டு வட்டத்தில் காஞ்சிபுரத்திற்குத் தெற்கே 11 கல்லில் உள்ளது. சேயாற்றின் வட கரையில் உள்ளது. ஊர் சிறியது. இதற்குச் செல்லும் வழியில் வேகநதி பாலாறு என்ற இரண்டு ஆறுகளையும் கடக்க வேண்டும். பாலாற்றிற்கு அணைவழியும் கிடையாது. ஊரில் 2000 மக்கள் இருக்கலாம். பாதிப்பேர் அரிஜனங்கள்.

பத்து ஆண்டுகளின் போது திருத்தேர் இழுக்கையில் சக்கரம் ஒரு குழியில் இறங்க மேல்தளம் உடைந்து முன்னால் சாய்ந்தது. அருகில் இருந்த போலீஸ் உத்தியோகஸ்தர் உள்பட ஐந்து பேர்கள் இறந்தனர். சிறிது எச்சரிக்கையாக இருந்திருந்தால் இந்த விபத்து நேர்ந்திருக்காது.

2. கோவில் : கருங்கற்பணி. ஆனால் செப்பனிடப்படவில்லை. முன் வாயில் கோபுரம் இல்லை. தொடங்கியது நின்றுவிட்டது. வடக்கிலும் மேற்கிலும் மதில்கள் விழுந்து விட்டன. உள்மண்டபங்கள் இருட்டு. காற்றிற்கும் வெளிச்சத்திற்கும் ஆக எடுத்துக்கட்டுக்கள் அமைக்க வேண்டும். வாகன மண்டபத்தில் தூண்கள் மட்டும் நிற்கின்றன. மேல்தளம் இல்லை. அறுபத்துமூவர் மண்டபம்



செங்கல் சுவரால் மூடப்பட்டுள்ளது. உள்ளே இருட்டு. இச்சுவரை எடுத்துவிடலே நன்று. மூலஸ்தானம் வெகு அழகாக இருக்கிறது. அது யானை முதுகு என்ற அமைப்பில் உள்ளது (கஜப்பிருஷ்டம்). அம்மன்கோயில் தெற்கு நோக்கி இருக்கிறது. கோயில் சுத்தமாக வைக்கப்படுவதில்லை.

3. மூர்த்திகள் : சுவாமி அடைக்கலம் காத்தநாதர். தேவி புவனநாயகி அல்லது திரிபுவன சுந்தரியம்மை. தீர்த்தம் சேயாறு. மூலஸ்தானத்தில் சுவாமி ஒரு நீண்ட மால்போன்ற வடிவில் இருக்கின்றார். தலமான்மியத்தில் அதனை உடும்பின் உருவம் என்று கூறப்பட்டுள்ளதாம். புராணம் கிடைக்கவில்லை.

4. பதிகம் : தேவாரப்பதிகம் சம்பந்தரால் பாடப் பெற்றது.

“ விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகண் மாடமலி
நீடுபொழின் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணலடி சேர்பவர்க
டீவினைக டீருமுடனே.

கலையினொலி மங்கையர்கள் பாடலொலி
யாடல்கவி னெய்தி யழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகற லுளான்
இலையின்மலி வேலுனைய சூலம்வல
னேந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புன லேந்துபெரு மானடியை
யேத்தவினை யகலுமிகவே.

கடைகொணெடு மாடமிக வோங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும்வகை யாற்பரவி யரனையடி
கூடுசம் பந்தனுரையால்

மடைகொள்புன லோடுவயல் கூடுபொழின்
மாகறலு ளானடியையே
உடையதமிழ் பத்துமுணர் வாரவர்க
டொல்வினைக ளொல்குமுடனே.

5. கல் வெட்டுக்கள் : இக்கோயிலில் 6 கல் வெட்டுக்களும், பெருமாள் கோயிலில் 5 கல் வெட்டுக்களும் உள்ளன. சோழர்கள் கல்வெட்டு 9-ம் பாண்டியர் கல்வெட்டு இரண்டும் உள்ளன. அவைகளின்படி எயிற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல் என்று ஊர்ப்பெயரும், சுவாமியின் பெயர் அகத்தீசுவர் என்றும் அறிகிறோம். சுந்தரபாண்டியன் காலத்தில் (1251–1264) சாமனவரதன் என்பவன் அகத்தீசுவரர் ஆலயத்தைச் சுற்றிலுமிருந்த இடங்களில் புதிதாகத் திருவீதிகளும் திருமடை விளாகங்களும் கட்டினான்.

இனி வைகுந்தப்பெருமாள் கோயில் கல்வெட்டுக்களின்படி இராசராசச் சோழன் III நாளில் இக்கோயில் பெருமாளுக்குத் திருமேற் கோயில் வீற்றிருந்த பெருமாள் என்று பெயர் இருந்ததாம். அதே அரசன் 23-ம் ஆண்டில் ஸ்ரீவிமானம் (மூலஸ்தானம்), திருவர்த்தமண்டபம், திருமண்டபம், சோபானம் (படி), ஸ்ரீபீடம் முதலியன அவ்வூர்க்கு பட்டியர்போயன் கட்டினான்.

தாயார் சந்நிதியில் முன்புறத்தில் ராசராசன் 6-வது ஆண்டில் இச்சந்நிதி கட்டப்பட்டதாம்.

இக்கோயிலில் மெய்க்கீர்த்திகளைத் தவிர வேறு இரண்டு செய்யுள்களும் இருக்கின்றன.

1. திருமன்னு சீராசராசற்கி யாண்டு சென்ற
இருபத்துமூன்றுவதில் செந்தளிச் சூழ்
மருமன்னும் பொழில் திருமாகறல் திருமேற் கோயில்
மன்னி வீற்றிருந்த பெருமாளுக்கு மண்மேல்
கருமன்னு சீவிமான மத்தமண்டப மேல்கலந்த
மண்டபத்தொடு சோபானஞ்சீ பீடம்
தருமன்னும் கொடை பட்டியர் போயன் மணியன்
தரும் பொருள்கள் செய்வித்தான் தருமநிலை பெறவே.



2. சீராச ராசற்காண் டாறிற்றென் மாகறற்
பாரார் புகழண்டம் பாக்கிழான்—சாரார்
தரும்போர்க் கருர்திருவன் காழன் முருகன்
திருக்கோயில் செய்தான் சிறந்து.

---

## 2. திருவிரிஞ்சிபுரம்*

1. இடம் : இத்தலம் தொண்டை நாட்டில் வடார்க்காடு ஜில்லாவில் உள்ள வேலூருக்கு நேர்மேற்கே 7 கல்லிலும் (மைலிலும்), காட்பாடியிலிருந்து பெங்களூர் செல்லும் ரயில் பாதையில் 3-வது ஸ்டேஷனை விரிஞ்சிபுரத்திலிருந்து தெற்கே $2\frac{1}{2}$ கல் தூரத்திலும் உள்ளது. இது பாலாற்றின் தென்கரையிலுள்ளது. இதற்கு வேலூரிலிருந்து மோட்டார் முதலிய போக்குவரத்து வசதியுண்டு.

2. கோயில் : மிகப் பழைய கோயில். இது ஐந்து கோபுரங்களும், ஐந்து ஆவரணங்களும் (பிராகாரங்களும்), சுமார் 30 அடி உயரமுள்ள கருங்கல்லாலாகிய வேலைப்பாடமைந்த அழகிய மதிற்சுவரும், நூற்றுக்கால் மண்டபம் முதலிய பல மண்டபங்களும், சிங்க புஷ்பகரணி முதலிய தீர்த்தங்களும், ஓர் உயரிய துவஜஸ்தம்பமும் (கொடிமரமும்), கஜபிரஷ்ட பிரணவத்தூபியுடைய கர்ப்பக்கிரகமும் கொண்டு விளங்குகின்றது. இவற்றுள் மேற்குக்கோபுரம் மட்டும் சிதலப்பட்டுள்ளது.

3. மூர்த்திகள் : சுவாமி பெயர் ஸ்ரீமார்க்கசகாயர், மார்க்கபந்தீசர் (வழித்துணைவர்); அம்பிகை பெயர் ஸ்ரீமரகதவல்லி, சுவாமி சுயம்புமூர்த்தி, நீண்ட திருமேனி. முதல் நான்கு ஆவரணங்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க மூர்த்திகள் உமாமகேசர், நிருத்தகணபதி, சொர்ண கணபதி, வல்லபகணபதி, சப்தமாதாக்கள், அஷ்டோத்திர

---

* இஃது, சித்தூர், சித்தாந்த சைவ வளர்ச்சிக் கழகத்தினரின் 18-வது ஆலய வழிபாடு திருவிரிஞ்சைப்பதியில் 23-3-52ல் நடைபெற்றபோது, ஷை கழகத் தலைவரால் எடுக்கப்பட்ட குறிப்புகளின் சாரமாகும்.

186884

சதநாமலிங்கம், சகஸ்ரலிங்கம், ஹரிஹரபுத்திரர், சிவசர்மர் முதலியனவாகும். ஐந்தாம் ஆவரணத்தில் குறிப்பிடத்தக்க மூர்த்திக் கோயில்கள் திருப்பிரமேசர் கோயில், வீரபத்திரர் கோயில், அப்பையதீக்ஷிதர் கோயில், காளி கோயில் முதலியனவாகும்.

4. தல மகிமை: பரமசிவன் ஒரு சமயம் பார்வதியை காளி (கருநிறமுடையவள்) என அழைக்க, அதற்கு நாணி, அச்சக்தி இங்கு எழுந்தருளி நோன்புநோற்று மரகதவல்லி எனப் பெயர் பெற்ருள். ஆதலின் " கௌரிபுரி " எனவும், விஷ்ணு பூசித்ததால் " விண்டுபுரி " எனவும், அருணையில் முடிகாணுது அவத்தையுற்ற விரிஞ்சனுல் (பிரமனுல்) பூசிக்கப்பட்ட காரணத்தால் " விரிஞ்சிபுரம் " எனவும், கரன் பூசித்து வழிப்பட்டதால் "கரபுரி" எனவும் சிறப்புப் பெயர் பெற்றுள்ளது.

சிவசருமன் என்னும் ஆதிசைவ இளைஞர் தனது உரிமைப் பூசனையை நிறைவேற்ற, அவற்காக இறைவனும் இலிங்கமூர்த்தி திருமுடி வளைத்துத்தந்த வரலாறும், குந்தளபுரியிலிருந்து கொண்டுவந்த மிளகு வியாபாரிக்கு இறைவன் வழித்துணைபுரிந்து " மார்க்கசகாயர் " என திருப்பெயர் கொண்ட வரலாறும், அத்தலபுராணத்தால் அறியத்தக்கதாகும். தலம் தீர்த்தம் மூர்த்தி விசேடம் பெற்ற ஓர் வைப்புத்தலமாகும். இங்கு நடைபெறும் திருவிழாக்களில் கார்த்திகைமாதக் கடை ஞாயிறு விழா மிகச் சிறப்புடையது.

5. நூல்கள் : திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய காப்புத்திருத்தாண்டகத்தில், " தெண்ணீர்ப்புனற் கெடிலவீரட்டமும் " என்ற பாசுரத்தில், " கண்ணார் நுதலார் கரபுரமும் " எனவும், பட்டினத்தார் பாடலில், " கான்சாயும் வெள்ளிமலே " என்ற செய்யுளில், " ஊன்சாயும் சென்மம் ஒழித்திடுவாய் கரவூரனுக்கா " எனவும், இத்தலம் பற்றிய குறிப்பு வருதல் காண்க. இன்னும் அருணகிரிநாதர் அருளிய திருப்புகழில் திருக்கரபுரம், கரபுரி, திருவிரிஞ்சை என்று குறிப்பிட்டுப் பாடிய பாடல்கள் ஆறு வந்துள்ளன. தனிப் பாடற்றிரட்டில் இரட்டைப்புலவர் இத்தலம் பற்றிப் பாடியதாக 14 செய்யுட்கள் உள்ளன. " திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் " என்ற பிரபந்தமும், சைவ—எல்லப்பநாவலர் இயற்றிய 'திருவிரிஞ்சைப்புராணம்' என்னும் தலபுராணமும் இத்தலத்திற்கு உள்ளது. கல்வெட்டுக்களும் பல உள்ளன.



இத்தகைய சிறப்பு வாய்ந்த தலத்திற்கு அன்பர்கள் பலரும் சென்று பிறவிப் பெருங்கடல் கடக்க, பெருமானின் வழித்துணை வேண்டி வழிபட்டு இன்புற்று உய்வாராக.

---

## 3. சமயப்பகுதி

**தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 68-வது ஆண்டுவிழாவில்**

குன்றக்குடி, திருவண்ணுமலை ஆதீனம்

**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணுசல தேசிகசுவாமிகள்**

அருளிய

# தலைமை உரை

(26-5-52)

(மலர் - 25 ; இதழ் - 7 ; பக்கம் 281இன் தொடர்ச்சி)

இச் சிவநெறி மிகப் பழைய காலத்திலிருந்து இன்று வரை மக்கட் சமுதாயத்தின் வாழ்க்கையிலே அமைந்து விளங்கி வருகின்றது. தமிழ்மக்களது அன்பின் பெருக் காலும், ஊக்கத்தின் ஊட்டத்தாலும் வளர்ந்து வளம் பெற்று வந்திருக்கிறது. சங்க காலத்தில் சிவநெறியும் அதன் வழிபாடும் மிகச் சிறந்த முறையில் இருந்திருக் கிறது. சங்க இலக்கியங்களில் சிவபெருமானது பெருமை களும் வழிபாட்டு முறைகளும் பேசப்படுகின்றன. பின் வந்த தமிழ்ப்பெருங் காவியங்களெல்லாம் சிவபிரானது பெரு மையைப் பேசுகின்றன. " பிறவா யாக்கைப் பெரி யோன் " என்று சிலப்பதிகாரம் சிவபெருமானைப் போற்று கின்றது. "போகம் ஈன்ற புண்ணியன்" என்று சிந்தாமணி புகழ்கின்றது. "நுதல்விழி நாட்டத் திறையோன் " என்று மணிமேகலை வாழ்த்துகின்றது, இங்ஙனம் அறிவுடைப் புலவர் பெருமக்களால் சங்க காலம் முதல் இலக்கியங் களின் மூலம் சைவம் வளர்க்கப்பெற்றது. சைவத் திரு

நெறியின் வளர்ச்சியிலே தமிழ் மன்னர்களுக்குப் பெரும் பங்கு உண்டு. தமிழ் மன்னர்கள் தமது வெற்றியின் சின்னமாகச் சிவபெருமானுக்கு விண்ணளாவும் மாண்புடைய திருக்கோயில்கள் பல எடுத்தனர். திருக்கோவில்களுக்கு நிறைய இறையிலியாக - நிபந்தங்களாக நிலங்களை விட்டு முன்னேன் பூசையை முட்டின்றி நடத்தினர். சமண பௌத்த சமயங்களின் பேராபத்திலிருந்து, தமிழகத்தைக் காத்துச் சிவநெறியை நாடெங்கும் பரப்பிய நாயன்மார்களின் அருண்மொழிகளை மக்களிடையே பரப்பினர். திருமுறைகளை ஓதித் திருந்திய வாழ்க்கையை நடத்த மக்களை ஆற்றுப்படுத்தினர். தாமே சிவபூசை முதலியன அன்புள்ளத்தோடு செய்து தமது வழி நிற்கும் மக்களையும் நன்னெறியிற் செலுத்தினர். தமிழ்ப் பேரரசர்களுக்கு முன்னும் பின்னுமாக சைவத்தின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட மடாலயங்கள் பல எழுந்தன. அவைகள் தோன்றிய காலத்திலும் பின்னரும் செய்த சமயப் பணிகளை யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. இங்ஙனம் புலவர்களாலே - இலக்கியங்களாலே - திருமுறைகளினாலே - மடாதிபதிகளாலே சைவம் வளர்ந்து வந்தது.

## சைவத்தின் சாதனங்கள்

சைவத்தின் சாதனங்கள் அருமையில் எளியன. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு திறத்தனவாம். இவற்றையே வேறு முறைகளாலும் பேசும் மரபு உண்டு.

இந்நெறிகளின் தொடர்பைத் தாயுமான அடிகள் அரும்பு, மலர், பிஞ்சு, காய் என்று உவமைகளின் மூலம் தொடர்பு படுத்தி விளக்குவார். இச்சாதன நெறி நின்று விதித்தன செய்தல், வேள்வி வேட்டலிலும் உயர்வாம். வேதத்துள் விதித்தவேள்வி முதலியன நிலையற்ற இம்மைப் பயன்களையே தரவல்லன. அவை சிவஞானத்தைத் தரவல்லன அல்ல. சிவஞானம் தராததோடன்றித் தீவினை போல் அச்சிவஞானம் நிகழவொட்டாது தடை செய்து நிற்கும். தீவினைகள் கரும்பொன் விலங்கும், வேதத்துள் விதித்த வேள்வி முதலிய நல்வினைகள் செம்பொன் விலங்குமாம் என உணரற்பாலன. வேள்வி முதலிய அறங்களின் பயன், முன் பசித்து உண்டு பின்னும் பசிப்பானுக்கு அவ்வுண்டியால் வரும் இன்பத்தைப் போலும். சரியை முதலிய அன்பு நெறிகளால் எய்தப்படும் சிவஞானம், பசித்துண்டு பின்னும் பசித்தலில்லாத அமரர்களது அமுத உண்டியாலாய பயனைப் போலும். அமுத உண்டி, நரை திரை மூப்பின்றி நிலைபெறுதலாய பயனைத் தருதலோடு பசி தீர்தலாகிய அவாந்தரப் பயனையும் தருதல் போலச் சரியை முதலியனவும், சிவஞானத்தைப் பயத்தலோடன்றித் தத்தம் பதி முத்தியாகிய அவாந்தரப் பயனையும் தரவல்லன. ஞானத்தாலன்றி வீட்டின்பத்தைப் பெறுதல் முடியாது. சரியை முதலியன ஞானத்தைக் காட்ட, அந்த ஞானம் திருவடி இன்பத்தைக் கொடுக்கும். மேலாய திருவடி இன்பத்தை ஞானமே தருதலால் அதனை மெய்கண்ட தேவர் "நன்னெறியாகிய ஞானம்" என்பர்.



சரியை முதலிய நெறிகளில் நிற்பார், திருக்கோயில் வழிபாடு, குருவழிபாடு, சிவனடியார் வழிபாடு முதலிய சைவ வழிபாட்டு நெறிகளில் தவறாது நிற்பர். உணர்ந்தவர்கள் உள்ளத்தில் ஒளிவளர் விளக்காக அமைந்திலங்கும் சிவபெருமான், கருணையின் காரணமாக யாவரும் வழிபட்டுய்ய அருளுருவம் தாங்கி ஆலயங்களில் இருந்து அருள் வழங்குகின்றார். "திருக்கோயில் உள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவே கண்டவர்க்குச் சிவனுறைவன் அங்கே" என்று நம்பிக்கையின் சிகரமேறி அன்பின் வழி நின்று, சித்தம் சிவமாய நிலையில் வழிபடுவார்க்குத் திருவுருவங்களில் வெளிப்பட்டு அருள் வழங்குவன். உயிர்கள் மூத்திறத்தன; அவை விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப் பேசப்பெறும். சகலான்மாக்களுக்குச் சகலான்மாக்களைப் போலவே உருவம் தாங்கி வந்து உபதேச வாயிலாகவும், நூல் வாயிலாகவும் அனுபவ வாயிலாகவும் அறிவுறுத்தி மலபந்தங்களினின்றும் நீங்கி சிவஞானம் பெறத் துணை செய்வார். இங்ஙனம், பேருதவி செய்கின்ற குருமூர்த்திகளைச் சிவமே எனக்கருதி வழிபடுதல் வேண்டும். சைவத்திற்கே உரிய உயர்ந்த வழிபாடாகக் காட்சி அளிப்பது சிவனடியார் வழிபாடு.

சைவத் திருநெறியின் பெருமைகள் பலவற்றுள் சிவனடியார் வழிபாட்டை வற்புறுத்துவது ஒன்றாகும். அடி

யார் வழிபாடும்கூட ஈற்றுச் சாதனமாகச் சீவன் முத்தர் நிலையிலும், செய்யப்படுவனவாக அமைத்தது உணரத்தக்கது. சமய வாழ்க்கையில் தறுக்கு உள்ளம் இருத்தல் கூடாது. ஆணவ இருளைப் போக்கும் தக்க ஒளியாக யான், எனது என்ற தீய உணர்ச்சிகளை ஓட்டும் உயர் சாதனமாக—சந்தேகம் என்னும் சஞ்சலப் பேயை விரட்டும் உயர் மருந்தாகச்—சிவனடியார் வழிபாட்டைக் கண்டனர். சமய வாழ்க்கையின் வளர்ச்சிக்கு வேண்டற்பாலது சந்தேகமற்ற உள்ளம். சாதாரண உலகியலிலேகூடச் சந்தேக உணர்ச்சி கொண்டவனுக்கு ஆக்கம் இல்லை. தீய குணங்களுள் ஒன்றாகத்தானே சந்தேகம் வைத்தெண்ணப்படுகிறது! மகாகவி ஷேக்ஸ்பியர் - (Suspision always haunts the guilty mind) சந்தேகம் குற்றமுள்ள நெஞ்சிற் குடியிருக்கும் என்று கூறுகின்றார். பிறரைப் பற்றி அவர்களது அகத்தைப்பற்றி ஆராய்தலே எப்பொழுதும் ஆபத்தாக முடிதல் உலக இயற்கை. தன்னை விடப் பிறர் சீரியர் அல்லர் என்ற உணர்ச்சி உலகில் பெரும்பாலோர்க்கு இருப்பது இயற்கை. இதனாலெல்லாம் விளைகின்ற தீமைகளை எண்ணித்தான் சைவப் பெருமக்கள், 'தூய்மையின் சின்னமாகிய நீறு, கருணையின் காரணமாகிய கண்டிகை அடிமைத் திறம், நினைந்துருகும் பெற்றியைக் காட்டும் ஐந்தெழுத்தோதல் முதலியவற்றைக் கொண்டவர்களைக் கண்டால் சிவமாகவே கருதி வழிபடுக' என்று ஆணையிட்டார்கள். அயராத அன்பிற் சிறந்த – சித்தம் சிவமேயாய சிவஞானிகளோடு இணங்கி இருக்க என்று ஆணையிட்டார்கள். சிவவேடம் நமக்குச் செய்கின்ற உதவி அளப்பிலது. சிவவேடம் சிவபெருமானை நமக்கு நினைப்பித்து வாழ்த்த வகை செய்கிறது. உலகியலிலே இருக்கின்ற பொழுது சிவபெருமானை நினைப்பிக்கின்ற தொண்டு பெருந்தொண்டு. அதனாலன்றோ சேரமான்பெருமாள் நாயனார், "திரு நீற்றின் வாரவேடம் நினைப்பித்தீர் வருந்தாதேகும்" என்று கூறினார். சிவவேடத்தைக் கருணை என்றே சேக்கிழார் பாராட்டுகின்றார். திருநாவுக்கரசர் பெருமான் கல்லையே தெப்பமாகக் கொண்டு, கருங்கடலைக் கடந்து கரையேறி பாதிரிப் புலியூர் நகரினுள் வருகின்றார். இந்த இடத்தில் சேக்கிழா



ரடிகள் திருநாவுக்கரசரைத் திருவேடத்தரசராகக் காட்டுகின்றார்.

"தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

என்று திருநாவுக்கரசரின் தோற்றத்தைக் காட்டுகின்றார். இந்தத் திருவேடப் பொலிவுடன் நகரினுள் நுழைந்த அடிகளைக் கண்ட மக்கள் கைகுவித்து வணங்குகின்றார்கள். அடிகளது திருவேடம் அத்துணை பேருக்கும் சிவபெருமானை நினைப்பிக்கின்ற கருணையாலாய தொண்டைச் செய்தது. இத்தகு கருணையைக் கண்டால், அமணருக்கும் தீய எண்ணம் உண்டாகி இருக்காது என்று தம்முள் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

"கண்டார்கள் கைதலை மேல்குவித் திந்தக் கருணைகண்டால்
மிண்டாய செய்கை அமண்கையர் தீங்கு விளைக்கச்செற்றம்
உண்டா யினவண்ணம் எவ்வண்ணம் என்றுரைப் பார்கள்பின்னும்
தொண்டாண்டு கொண்ட பிரானைத் தொழுது துதித்தனரே"

என்பது சேக்கிழார் அடிகள் பாடல். சிவவேடத்தைக் கண்டபொழுது சிவபெருமானை நினைத்து வாழ்த்த முடிகிறது என்பதனைச் சுந்தரர்,

"துணிப்படும் உடையும் சுண்ணவெண் ணீறும்
தோற்றமும் சிந்தித்துக் காணில்
மணிப்படு கண்டனை வாயினால்கூறி மனத்தினால்
தொண்டனேன் நினைவேன்"

என்று அருளி விளக்குகின்றார். சிவனடியார் வழிபாட்டினாலும் இணக்கத்தினாலும் வாசனாமலத் தாக்கலிலிருந்து வீடுபெற முடிகிறது. மாதவச் சிவஞான முனிவர் தமது மாபாடியத்தில் சிவனடியார் வழிபாட்டைப் பற்றிக் கூறுவன சிந்தனைக்குரியன. செல்வப் பெருக்கம் உடையார்க்கு உணவாகிய ஆன்பால், உடம்பு நோயின்றி வளரச்செய்யும் மருந்தும் ஆமாறுபோல இவ்வழிபாடு மலவாசனை சிறிதும் தாக்காது, சிவானந்தம் மேன்மேல் வளரச்செய்யும் சாதன

மாதலும் உண்மையான்; அதுபற்றி ஆசிரியர் விதித்துரைத்தலும் செய்தாரென்க" என்பது அவர்களது பொருளுரை.

சமயத்தினுடைய சீரிய இயல்பு சமுதாயத்தை ஒட்டியதாக இருத்தலேயாம். ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு முறையை எல்லோரும் பின்பற்றுவார்கள் என்பது இயலாததொன்று. அவரவர்களது மனோ நிலைக்கு ஏற்பப் பணி செய்யவும், வழிபாடாற்றவும், நல்லறம் செய்யவும் வழி துறைகள் வகுத்துக் கொடுக்கின்ற சமயமே தலையாய சமயம். என்றும் நிலைபெற்றிருக்கின்ற பேறும், அத்தகைய சமயத்திற்கே உண்டு என்றும் அறியப்படும். இங்ஙனம் சமுதாயத்திற்கே ஏற்றவாறாக, சமுதாயத்தின் சாயலாக, பழைமைக்குப் பழைமையாக, புதுமைக்குப் புதுமையாக விளங்குவது சைவம்.

இன்று தமிழகத்தில், கடவுட் கொள்கைக்குப் புறம்பான கருத்துக்கள் உலவுகின்றன. சமயச் சார்புடையோம் என்பவர்களிடத்திலும் உண்மைச் சமய வாழ்க்கையைக் காண்பது முயற்கொம்பாக இருக்கின்றது. இன்றைய சமயம் சடங்குச் சமயமாகக் காட்சி அளிக்கின்றதே அன்றி வாழ்க்கையில் தோய்ந்த சமயமாகக் காட்சி அளிக்கவில்லை. ஆலயங்களிலும் பிற சமய நிலையங்களிலும் சமயச் சார்புள்ள தொண்டுகள் குறைந்து லௌகீகச் சார்பு பெருகி ஆடம்பரங்களும், ஆர்ப்பாட்டங்களும் நிறைந்து வருகின்றன. ஆலயங்களும், ஏனைய சமயநிலையங்களும், செய்யவேண்டிய அளவு சமயப் பணியைச் சால்புறச் செய்யவில்லை. அவைகளின் பணி வளரவேண்டும். சமயம் சடங்களவில் நிற்கும் நிலைமாறி வாழ்க்கையில் தோய்ந்த நிலையில் காட்சி அளிக்கவேண்டும்.

## ஒருசில கடமைகள்

இன்றைய சமயத்தின் நிலையையும், சிறப்பாகச் சைவத்தின் நிலையையும் எண்ணிப் பார்த்தால் செய்யவேண்டிய தொண்டுகள் பலவுள. சமயச் சார்புடைய பெருமக்கள் அனைவரும், பொது மக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும். அவர்களின் உளம் அறிந்து உவப்பக் கூறிச் சமய வாழ்க்கையை வற்புறுத்துதல் வேண்டும்.



அதற்குச் சிற்றூர் பேரூர்களிலெல்லாம் சமயப் பணிக்கெனத் தனித்த கழகங்கள் அமைக்கப் பெறுதல் வேண்டும். மக்கள் அனைவருக்கும், திருவாசகம் ஓதுகின்ற உணர்ச்சியை உண்டாக்க வேண்டும். திருவாசகத்தை முறையாக ஓதுகின்ற பணியைக் கைக்கொண்டால், சீக்கிரத்தில் தமிழகம் தனது பண்டைப் பெருமையை எய்தக் கூடும். திருவாசகம் ஓதுதலால் உள்ளம் தூய்மை யடைந்து அன்பில் சிறந்த நல்லறப் பண்பாட்டைப் பெறலாம். எனவே தமிழகத்தில், ஒவ்வொரு ஆண்மகனும் பெண்மகளும் ஒன்றியஉள்ளத்தோடு திருவாசகம் ஓதுதல்வேண்டும். அந்தத் திருத்தொண்டைக் காலந் தாழ்த்தாது தொடங்க வேண்டும். பல ஆலயங்களின் நிலை இரங்கத்தக்க நிலையில் இருக்கிறது. சென்ற மாதத்தில் நாம் ஒரு தலத்திற்கு வழிபாட்டிற்குச் சென்றிருந்தோம். அந்த ஆலயத்தை இருள் படலம் சூழ்ந்திருந்தது. நிர்மால்யங்கள் சிதறிக் கிடந்தன. சிவபெருமான் தோற்றத்தால் கரிய பரிவட்டம் உடுத்திருந்தார். அறுபான்மும்மை நாயன்மார்கள் புழுதி தோய்ந்த மேனியாக நிர்வாண நிலையில் காட்சி அளித்தனர். இந்த ஆலயத்தின் வருவாய்க்கோ, அதனைப் பரிபாலிப்பவரின் செல்வச் செழிப்புக்கோ யாதொரு குறையும் இல்லை. இந்த மாதிரி எத்தனையோ தலங்களைச் சுற்றுப் பிரயாணங்களில் பார்க்கிறோம். இந்தக் கொடிய பரிதாபகரமான நிலையில் மாற்றத்தைக் காணவேண்டும். இன்னும் சமய வாழ்க்கையின், முறைகளையும் பயன்களையும் எளியமுறையில் எடுத்துச் சொல்ல வேண்டும். இளைஞர்களுக்குச் சமயக் கல்வி கற்றுக் கொடுப்பதனாலும், சிறந்த சமய நூற்பயிற்சியாளருக்கும் வாழ்க்கையாளருக்கும் பரிசுகள் கொடுப்பதினாலும் மக்களைச் சமய வாழக்கை உடையவர்களாக ஆக்கவேண்டும்.

## முடிவுரை

காணப்பட்ட உலகத்தின் வியத்தகு அமைப்புக்களுக்கு முதல்வனாக—கர்த்தாவாக—எல்லாம் வல்ல இறைவன் இருக்கின்றான் என்று அறிவுடைப் பெருமக்கள் எடுத்தோதினர் என்பதையும், அம்முதல்வனை நன்றி யறிதல் உணர்ச்சியோடு வழிபடத்தொடங்கிய காலத்துச் சமய

வாழ்க்கைத் தொடங்கிற்று என்பதையும், தமிழகத்தின் தனி நெறியே சித்தாந்தத் திருநெறி என்பதையும், அது முடிந்த முடிபாகத் தொன்மை நலம் மிக்கதாகக் காட்சி அளிக்கிறது என்பதையும், சைவத்தின் வழிபாட்டு நெறிகள் எளிமை நலம் மிக்கு இம்மையும் எம்மையும் இன்பம் தருவனவாகக் காட்சி அளிக்கின்றன என்பதையும், சைவத்தின் சிவனடியார்–சிவவேட வழிபாடு மிகச் சிறந்த பண்பாட்டை அடிப்படையாக உடையதென்பதையும், சமுதாயத்தைத் தழுவிய சமயமாக சைவம் விளங்குகிறது என்பதையும் அதன் தற்கால இரங்கத்தக்க நிலையையும் ஆக்கத்திற்குரிய பணிகள் சிலவற்றையும், சிறப்பாகத் திருவாசகம் ஓதுகின்ற திருத்தொண்டின் பெருமையைப் பற்றியும், திருவருளால் நினைந்து உங்களுக்கும் நினைவுபடுத்துகின்ற பணியைச் செய்தோம்.

பல ஆண்டுகளாக, அன்பு நிறைந்த ஆர்வம் பொருந்திய உள்ளத்துடன், சைவப் பணி ஆற்றுகின்ற சபையின் திருத்தொண்டை வாழ்த்துகின்றோம். சபையின் நிரந்தர சித்தாந்த ஆசிரியராக விளங்கிப் பலருக்குச் சாத்திரப் பயிற்சியைத் தருகின்ற சித்தாந்தப் பேராசிரியர் சிவகுருநாதம் பிள்ளைக்குத் தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையது. சபையின் தொண்டர்கள் அனைவருக்கும், நமது உளம் தோய்ந்த வாழ்த்து.

வாழ்க சபை! வளர்க சைவம்!!

---

5. கலைப்பகுதி

# பால் இனம்

(ம. ரா)

ஓர் ஆங்கில ஆசிரியர் தன் ஆங்கில சஞ்சிகையில் பால் இனத்தைப் பற்றி (sex) ஒரு ருசிகரமான கட்டுரை ஒன்று எழுதியிருக்கின்றார். அதில் தன்னுடைய கருத்துக்களை கூறுவதற்கு முன் சில கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்.

"பால் இனம் என்பதென்ன? எங்கிருந்து எப்படி ஏன் வந்தது? அதனை நில உலகத்தில் காண்கிறோம். இந்த நில உலக உடலாகிய பரு உடல் அழிந்த பிறகு அது நிலைத்திருக்குமா? அப்படியாகில் அது எந்த உருவத்தில் நிலைத்திருக்கும்? அதனுடைய நோக்கமென்ன? இந்த உலகமாகிய பூவுலகத்தில் வாழ்க்கையில் ஆண், பெண் என்ற வேறுபாடு ஏற்பட்டு அவைகளின் சேர்க்கையால் புது உடல்கள் தோன்றுகிறாற்போல நுண் உலகமாகிய புவர்லோகத்திலும், அதைவிட நுட்ப உலகமாகிய சுவர்க்கலோகத்திலும் தொடர்ந்து அதே நோக்கத்துடன் அந்த வேறுபாடு இருக்குமா? ஆண் தன்மையும், பெண் தன்மையும் ஒரு முறை அது அதற்கேற்ற தனுக்களைப் பெற்ற பிறகு, பின்னர் அத்தன்மைகளோ அல்லது தனுக்களோ வளர்ச்சி தத்துவ முறையில் மாறுதல் பெறுவதுண்டோ? அவ்வாறு மாறுதல் அடைவதுண்டாயின் அம்மாறுதலுக்கு ஏதாவது, எங்காவது சான்று இருக்கின்றதா?"

இந்தக் கேள்விகளை எழுப்பிவிட்டு அவைகளுக்கு விடைகள் கூறமுடியுமா என்று அப்பத்திரிகை ஆசிரியர் எழுதுகின்றார்—முதன் முதலில் உலகில் உலாவிவரும் பல்வேறு சமயங்கள் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் கூறுகின்றன என்று கேட்டுவிட்டுத் தற்கால விஞ்ஞான ஆராய்ச்சி இதற்கு என்ன விடை கூறுகின்றது என்றும் அவர் எழுதியிருக்கின்றார். விஞ்ஞான ஆராய்ச்சியிலே உடல்கூறு நூலாசிரியர்களும், உயிர் நூலாசிரியர்களும் பல அரிய சோதனைகள் செய்து எழுதியிருக்கின்றார்கள். ஆண் பெண் தத்துவங்கள் எந்த முறையில் ஒன்றோடொன்று மாறுபடுகின்றன, எந்த முறையில் ஒன்றோடொன்று கவர்ச்சி கொள்கின்றன என்ற கேள்விகளுக்குப் பல இபற்கை விதிகளையும், ஆராய்ந்து கூறியிருக்கின்றார்கள். உயிர்த் தத்துவ நூலில் பரம்பரையாக என்ன குணங்கள் தொடர்ந்து வருகின்றன என்றும் அவ்வாறு தொடர்ந்து வரும் நோய்களையும் பலமின்மையையும் எவ்வாறு தடுக்க முடியும் என்றும், கூறுவது மட்டுமன்றிப் புது உடல்களையும், புதுக் குணங்களையும் எவ்வாறு வளர்த்த முடியும் என்றும் அந்நூல் அறிவிக்கின்றது.



இவ்வாறு உயிர் நூல் அளிக்கும் அறிவானது மிகவும் விரிந்திருந்தபோதிலும் மேலே கேட்ட கேள்விகளுக்கு ஒரு விதமான விடையும் தருவதில்லை. பால் இனத்தின் உண்மை

நிலையைப் பற்றியாவது, அடிப்படை இயற்கையைப் பற்றியாவது உயிர் நூல் இதுவரை யாதொரு விடையையும் தரவில்லை. உயிரின் வாழ்க்கையில் பால் குணம் மிகவும் சக்தி வாய்ந்த பண்பு என்று எல்லாரும் அறிவார்கள். அக்குணத்தினால் மிகுந்த இன்பமும், மிகுந்த துன்பமும் ஏற்படுகின்றன. அழுக்காறு, பொறாமை, கொடுங்குற்றம், பேரழிவு முதலிய பல தீமைகளும், அந்தப் பண்பே விளைவிக்கின்றது என்று கூறமுடியும். அப்படியிருந்தும் அதனுடைய உண்மை நிலை யாருக்குத் தெரியும்? உலகிலே ஆகாயக் கப்பல், நீராவி யந்திரம், மின்சாரம், காந்தம் முதலியவைகளை எவ்வாறு கொள்ளுகிறோமோ அவ்வாறு பால் இனத்தையும் ஒரு உள்ளப் பொருளாகக் கருதுகிறோம்.

பால் இனத்தினுடைய செயல்கள் பல மக்களிடம் பலவாறாக விளைந்து வருவதைப் பார்ப்போம். மக்களுடைய ஒழுக்க முறைகள் அவரவர்களுடைய பண்பாடுகளுக்கேற்றபடி மாறிவர, பால் இனத்தைப் பற்றிய எண்ணங்களும் அவ்வாறே மாறுபடும். சில சமயச் சமூகங்கள், பால் இனத்தால் ஏற்படும் உயிர்ப் பெருக்கம் தீமையின் செயல் என்று கருதி அதனை அறவே ஒழிப்பார்கள். அதற்காக பிரம்மசரியம் காத்துத் துறவறம் பூண்டிருப்பார்கள். அந்த வகையில் இல்லற வாழ்க்கையின் கட்டுப்பாடுகளை விட்டுச் சுதந்திரத்துடன் இருக்க விரும்புவார்கள். சில சமயங்களோ இல்லற வாழ்க்கையே நன்றென்று கருதி உயிர்ப் பெருக்கம் இறைவனால் ஆணையிடப்பட்ட கட்டளைகளில் ஒன்று என்று கருதி சாதாரண மக்களேயன்றிச் சமய வாழ்க்கையில் ஈடுபட்டவர்களும் அவ்வறத்தையே கைக்கொள்ளுவார்கள்.

உலகம் மாயையால் ஏற்பட்டது. அங்கே செய்யக்கூடும் செயல்களும் மாயையே என்று கூறிப் பால் இனத்தில் கட்டுப்பாடு வைத்துக்கொள்ளாத மக்களும் உண்டு. ருஷியாவில் புரட்சி நடந்த காலத்தில் தண்ணீர் வேட்கை போல புணர்ச்சி வேட்கையும் ஒன்று என்று கருதி நாட்டில் எங்கும் ஏகக்குழப்பம் ஏற்பட்டுவிட்டது. பின்னால் அதனைத் தடுக்கத் தலைவர்கள் கட்டளையிட்ட பிறகுதான் அக்குழப்பம் நின்றது.



இவ்வாறு நிலவுலகத்தில் பால் இனத்துக் குணங்களும், செயல்களும் இருக்க இவைகள் உடல் அழிந்த பிறகும் உண்டா என்பதுதான் இப்போதைய கேள்வி? உலகத்தில் உள்ள பால் இனத்தின் அடிப்படை முற்றும் நமக்கு விளங்காதிருக்கையில் நுண்ணிய உலகங்களில் அது எவ்வாறு இருக்குமென்று அறிய முடியுமா? மேல்நாட்டு அறிஞர்களில் இக்கொள்கைகளைப் பற்றி ஒரு சிறிது கூறினவர் ஸ்வீடன்போர்க் என்ற ஸ்வீடன் நாட்டு அறிஞர். நுண் உலகத்தின் செய்திகளை அந்த அறிஞருக்கு அறிவுறுத்தின அமரதூதன் பால் இனத்தைப் பற்றிய உண்மை இயல்பைக் கூற மறுத்துவிட்டானும்.

ஆனால் தற்காலத்தில் நுண் உலக ஆராய்ச்சிகள் செய்துவரும் கழகத்தார்கள் பல செய்திகளை வெளியிடுகிறார்கள். வெறும் கட்டுக்கதைகள், புராணக்கதைகள் முதலியவைகளில் கூறப்படும் செய்திகளை ஒழித்துவிட்டு, நுண் உலகத்திலிருந்து அறியக் கூடிய மர்மச் செய்திகளின் மூலம் அறிவிப்பதாக ஆன்மீக அறிவாளர்கள் (spirtualist) கூறுகிறார்கள். அவர்கள் கூறும் செய்திகளைக் கொண்டு நிலவுலகத்தில் இருப்பதைப்போலவே, நுண் உலகங்களிலும், பால் வேறுபாடு இருக்கின்றதாம்.

மேற்கூறிய கருத்துக்களைக் கூறிவிட்டு ஆங்கில சஞ்சிகை ஆசிரியன் பால் இனத் தத்துவங்களை, ஐந்து பாகங்களாகப் பிரித்துக்கொண்டு ஆராய்ச்சி செய்து வருகிறார்.

இதுவரை மிக விரிவாக ஆங்கில ஆசிரியருடைய எண்ணப் போக்கை எடுத்து எழுதினோம். அப்போக்கு விஞ்ஞானத் துறையில் சென்று கொண்டிருக்கின்றது. சமயத் துறையில் சென்றதாகத் தெரியவில்லை. அதனை சமயத் துறையில் வைத்து ஒரு சிறிது ஆராய்வோம்.

ஆண், பெண் என்ற தத்துவங்கள் எதிரிடைக் குணங்களைக் கொண்டிருந்த போதிலும் சமநிலையான ஆற்றல் கொண்டிருக்கிறதென்று அறியலாம். அவைகள் ஒன்றுக்கொன்று மேல் அல்லது கீழ் என்று கூற இயலாது. சில பண்புகளில் ஒன்று மேலாகவும், மற்றது கீழாகவும் இருக்க, மற்றைப் பண்புகளில் பின்னது மேலாகவும், முன்னது கீழாகவும் இருக்கக் காண்போம். ஆகவே இரண்டும்

மொத்தத்தில் ஏற்றத்தாழ்ச்சியின்றி சமநிலை கொண்டதாக இருக்கின்றன எனக் கருதவேண்டும்.

ஆனால் சில மதங்களில் ஆண்பாலை உயர்ந்ததாகவும், பெண்பாலைத் தாழ்ந்ததாகவும் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவத்தில், ஆதாமைக் கடவுள் முதலில் படைத்துப் பின்னர் அவனுடைய விலா எலும்பைக்கொண்டு ஏவாளை உண்டாக்கினர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தக் கதையே இஸ்லாமியத்திலும், யூதத்திலும் கூறப்பட்டுள்ளது.

இக்கதையினால் ஆணைவிடப் பெண் குறைந்தவள் என்று சொல்வது மட்டுமன்றி ஆலயத்தில் தொழுவதற்குப் போகையில் ஆண்கள் வெறுந் தலையோடும், பெண்கள் முக்காடிட்டும் செல்லவேண்டுமாம். அந்த மதங்களில் பிறப்பு ஒன்றே என்று கருதப்படும். பின் பிறப்பு இல்லை என்றபடியால் இறந்த பிறகு பால் இனம் எப்படிப்பட்டதென்ற கேள்வியே எழுவதில்லை.

மறுபிறப்பு உண்டென்று நம்புகிற கீழை நாட்டுச் சமயங்களில் மட்டும் இந்தக் கேள்வி எழுகிறது. சமண சமயத்தில் பெண்களைக் கீழ்நிலையில் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுபேறு இல்லையென்றும் கூறுகிறார்கள். இதைக் கேட்க நமக்கு வியப்பாயிருக்கின்றது. இந்துச் சமயங்களை ஆராய்ந்து பார்த்தால் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமத்துவம் உண்டு என்று சமய தத்துவ நூல்கள் கூறினபோதிலும் உலக நடவடிக்கைகளில் பெண்கள் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். தரும சாத்திரங்கள் அல்லது ஸ்மிருதிகளில் பெண் தன்மை கீழ்நிலை ஆக்கப்பட்டிருக்கிறது. அந்தணர்களுடைய பெண்கள் வேதம் படிக்கப்படாதென்ற கொள்கையின் பொருள் என்ன? வேள்விகளிலும்கூட அவர்களுக்குச் சமபங்கு இல்லை. ஆனால் சைவத்தில் வேறு வகையாக இருக்கக் காண்போம்.

சைவ சித்தாந்தத்தின்படி முப்பொருள்கள் உண்டு. இம் முப்பொருள்கள் எக்காலத்திலும் உள்ளவை. அவைகள் கடவுள், உயிர், தளை என்பன. வடமொழியில் பதி, பசு, பாசம் என்பர். இம் முப்பொருள்களில், உயிர் என்பது குறுகிய அறிவுடையது. ஆனால் பெருகும் தன்மை



யுடையது. கடவுளோ ஒருவர், உயிர்களோ கணக்கற்றவை. எல்லா உயிர்களுக்கும் பண்புகள் ஒன்றே. தாழ்மையான நிலையிலிருந்து மேன்மையான நிலை அடையும் ஆற்றல் அவைகட்கு உண்டு. அவை படிப்படியாக வளர்ச்சி பெறும். அவ்வளர்ச்சி எல்லா உயிர்களுக்கும் சமமான ஆற்றல் அமைந்தது. இந்த வகையில் உயிர்களில் வேறுபாடில்லை. உயிர்கள் வளர்ச்சி பெறுவதினால் முழு அறிவை அடையக் கூடும். அவ்வாறு உயிர்கள் அடைவதன் பொருட்டு இறைவன் தன்னுடைய அநந்த கருணையினால் தனு, கரண, புவன, போகங்களை அவைகட்குக் கொடுக்கின்றான். அவைகளைப் பெற்று உயிர்கள் மேன்மையான நிலை அடையும். இந்நான்குவகைகளில், தனு என்பது உடல்; இந்த உடலில்தான் பேதம் உண்டு. அது ஆண் பெண் என்ற இருவகைப்படும். உடலில் பேதம் இருந்தாலும் ஆன்மாவில் பேதமில்லை. ஆகவே ஆண் உடலில் இருக்கும் உயிரும், பெண் உடலில் இருக்கிற உயிரும் இரண்டும் மேல்நிலை அல்லது வீடுபேறு அடையக் கூடியவை. இந்த வகையில் சைவத்தில் வீடுபேறு என்ற அளவில் வேற்றுமை இல்லை.

சைவ சிந்தாந்தக் கொள்கை பொதுத் தன்மையில் இவ்வாறு இருக்கச் சிறப்புத் தன்மையில் புராணக் கூற்றுகள் என்ன சொல்லுகின்றன என்று பார்ப்போம். சமய வாழ்க்கை வாழ்ந்து இறைபணி நிற்றலில் திகழ்ந்த சைவப் பெருமக்களில் ஆண்பாலாரும் உண்டு; பெண்பாலாரும் உண்டு. 63 மெய்யடியார்களில் ஆண்பாலாரு மிருக்கின்றனர். பெண்பாலாரு மிருக்கின்றனர். சம்பந்தர் முதலிய நாயன்மார்கள் ஆண்பாலரா யிருக்க, காரைக்காலம்மையார் முதலிய அடியார்கள் பெண்பாலராயிருந்தார்கள். சம்பந்தர் முதலிய மூவர்களும் தேவாராதிகளைப் பாடியிருக்க, காரைக்காலம்மையார் அருட் பிரபந்தங்களைப் பாடியிருக்கின்றார். சம்பந்தப் பெருமான் நல்லூர்த் திருமணத்தில் ஜோதியில் கலந்த காலத்தில் ஆண்பாலரோடு பெண்பாலரும் வீடுபேற்றைப் பெற்றார்கள். இதுபோலவே வைணவத்திலும் ஆழ்வார்களில் பெண்பாலர் உண்டு. ஆகவே சித்தாந்தத்தைக் குறித்தமட்டில் வீடுபேற்றில் மதவேறுபாடு இல்லை.

இனி, மேலான தத்துவ ஞானத்தை விட்டு நடுத்தரமாகவுள்ள புராணக் கூற்றுக்களை எடுத்துக்கொண்டால் நுட்ப உலகங்களில் ஆண், பெண் வேறுபாடு உண்டா என்ற கேள்விக்கு விடைகள் இருக்கின்றன. ஓர் உயிர் மரணத்தினால் உடலைவிட்டு நீங்கின பிறகு மறுபடி வேறு உடலை எடுக்கும் மட்டும் இடையில் இரண்டு நுட்ப உடல்களைக் கொண்டு அங்கே பாவம், புண்ணியம் என்ற இரண்டையும் முறையே அனுபவிக்கும் என்று கருட புராணம் கூறும். அந்த நுண்ணிய உடல்களில் ஆண் பெண் வேற்றுமை உண்டா? இச்சா உலகத்திலும் மானசீக உலகத்திலும் இந்த பேதங்கள் இருக்கலாமென்று புராணங்கள் சூசிப்பிக்கின்றன. இந்திர லோகத்தில் பெண்கள் உண்டு என்று புராணம் கூறும். தேவர், யக்ஷர், கந்திருவர், வித்யாதரர் முதலிய தெய்வீகப் பிறப்புக்களில் இருபாலாரும் இருக்கின்றனராம்.

இனி சைவப் புராணங்களில் கைலையில்ஆலாலசுந்தரர் பூத்தொடுக்கும் திருத்தொண்டில் அமர்ந்திருக்க கமலினி, நந்தினி என்ற இரு சேடிமார்களும் பூ எடுத்தார்கள் என்பது புராணக் கூற்று. மற்றும் இறைவனே கைலையில் இறைவியோடு எழுந்தருளி யிருக்கின்றார் என்றால் அதன் பொருள் என்ன? இந்த வரலாறுகளின் அடிப்படைப் பொருளை நாம் அறியவேண்டாமா?

இனி மாணிக்கவாசகர்,

" தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பா லியோகெய்தி வீடுவர்காண் சாழலோ "

" மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது வென்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ"

என்ற செய்யுள்களில் பால் வேறுபாடு கூறியிருத்தலை அறிவோம். இவற்றில் அடங்கியிருக்கும் உட்பொருளை ஆராய்வோமாக.

---

## 6. கவிப் பகுதி

# " குகை-நமசிவாய தேசிகர் "

(அ. தா. ப. திருஞான சம்பந்தம்)

**தோற்றுவாய் :**—ஒரு நாட்டின் புகழ், எவ்வளவு மக்களைத் தன்னகத்தேகொண்டிலங்குகிறது என்பதால் வளர்வதில்லை. பின் எதனால் வளர இயலும் என்பதை வள்ளுவர் வகுத்துரைத்த நாட்டின் இலக்கணம் மூலம் நன்குணரலாம்.

*தள்ளா விளையுளுந் தக்காரும் தாழ்விலாச்*
*செல்வரும் சேர்வது நாடு.* (குறள் : அதி. 74–1)

குறையாமல் எல்லாப் பொருள்களையும், விளைவு செய்வோரும், தகுதிவாய்ந்த பெருமக்களும், கேடில்லாத செல்வமுடையோரும் ஒன்று சேர்ந்து வாழ்ந்திருப்பதே நாடாகும் என்பது வள்ளுவர் கருத்து. வள்ளுவப் பெருந்தகையார் அமைத்துப் பாடியுள்ள, தள்ளாத விளையுள், தக்கார், தாழ்விலாச் செல்வர் என்ற மூன்றில் இடையில் அமைத்துள்ள தக்கார் என்ற சொல் சிந்திக்கத் தகுந்தது. வள்ளுவர் முப்பொருள்கள் அமைத்துக் கூறுமிடங்களில் இடைப்பட்டதாய ஒன்று சிறந்ததோர் கருத்தை வெளியிட்டு உதவும் என்பதை உணர்க. தக்கார் என்ற சொல்லுக்குப் பொருள் காணவந்த உரை இயற்றுவதில் வல்லுனரான பரிமேலழகர், அந்தணர், தவச் செல்வர்கள், அறவோர் என்றே பொருள் கண்டிருத்தல் ஈண்டு உணரத்தக்கது. இதனால் நாம் இதுபோழ்து ஒரு முடிவிற்கு வரவேண்டியவர்களாய் இருக்கிறோம். அஃதாவது நாட்டின் புகழ் – குருதியை நீரென நிலத்தில் வடித்து உண்பொருள் அளிக்கும் உழவன், பேராசைப் பித்தர்களாய் வாழாத நற்செல்வர்கள் இவர்களால் அந்நாட்டிற்கு வருகிற புகழைவிட, இந்த இருவகையினர்க்கும் இடைப்பட்ட ஞானச் செல்வர்களால் வரும் புகழே மிகுதியுடையது; என்றென்றும் அழியாப் புகழுடன் நின்று நிலவுவதுமாகும்.

குன்றாத புகழை என்றென்றும் நிறைவோடு இப்பரத கண்டம் — சிறப்பாகத் தமிழகம் — பெற்று இலங்குகிறதெனின் அதற்குக் காரணம் என்ன? இடைவிடாது

தமிழகம் தன்பால் சமய மணத்தையும், அனுபூதிச் செல்வர்களையும் கொண்டு திகழ்வதே யாகும். அனுபூதிச் செல்வர்கள் சிவராஜ யோகியர்களாய்த் தவராஜ யோகத்தில் ஆழ்ந்து இன்ப வடிவினனும் இறைவனுடன் இடையறுத் தொடர்பு பூண்டு, அவன் அருளால் அவன் பெருமையை வந்தித்து அவன் திருத்தாள்களுக்கு இலக்காயினர் என்பது நன்கு உணரத்தக்கது. அத்தகு பெரியோர்கள் நாட்டில் வாழ்ந்தார்கள் என ஊகித்தறிய ஒருசில ஏதுக்கள் ஓரோவிடங்களில் கிடைக்கின்றனவே யன்றி, அவர்களைப்பற்றிய முடிந்த வரலாற்றுண்மைகள் கிடைக்கின்றில. இதற்குக் காரணம் தண்ணளிமிக்கத் தமிழக மக்கள்தான்! தமிழரினம் தன்னைப் பற்றி விளம்பரப் படுத்திக் கொள்ளத் தெரியாத இனம் எனச் சிலர் கூறுவதிலும் தவறில்லை. தங்களின் இனப்பெருமையைப் பகட்டாக வெளிப்படுத்தவேண்டிய அவசியமில்லாவிட்டாலும், தாங்கள் உணரவும், தன்மானங் கொண்டு வகையாக வாழ்வாவது அறியவேண்டுமல்லவா? இதையும் உணர அவர்களுக்கு அறிவு கீழ்ப்பட்டால், அஃது அவலநிலை அன்றோ! பலதவச் செம்மல்களின் பெயர்கள் மட்டில் நாட்டில் ஏதோ மூலை முடுக்குகளில் தெரிந்துள்ளனவே யொழிய, வரலாற்றுண்மைகளால் அறிய முடியாதிருக்கிறது. அங்ஙனம் அறிய முடியாதிருக்கும் வரலாற்றுண்மைகளில் குகை நமசிவாய தேசிகப் பெரியாருடையது மொன்றாகும். இவரைப் பற்றிய சிறு குறிப்புக்களே, அருணாசல புராணப் பதிப்பில் குருநமசிவாயர் வரலாற்றினின்றும் அறிய முடிகிறது. முற்றிலும், வரலாற்றுண்மைகளை உணர்ந்த அன்பர்கள் சிரமம் பாராமல் வெளியிட்டுதவினால் தமிழகம் அன்னார்க்கு என்றென்றுங் கடப்பாடுடைத்து.

**வரலாறு** : சுவாமிகள் வடநாட்டிலே கர்னாடகப் பகுதியில் உள்ள மல்லிகார்ச்சுனம் என்றதோர் திருவூரில் தோன்றினார்கள். இவர் தந்தையார் பெயர் தெரியவில்லை. தாயார் பெயர் மனோன்மணி யம்மையார். இவ்வம்மையார்க்கு நெடுநாட்கள் பிள்ளைப்பேறு இன்மையால். வருந்தி இறை வழிபாடியற்றி வருங்காலை சுவாமிகள் தோன்றினார். இளமைக் காலத்திலேயே, இறையருள் பெற்ற சுவாமிகள் கல்வி கேள்விகளில் திறம்பட்ட அறிவுடையராகி, உலகப்



பொருள்கள்பால் வெறுப்புணர்ச்சி தோன்றிச் சிவானுபூதியில் இலபிக்க வேண்டும் என்ற விருப்பு மீதூற, ஞானச் செல்வர்களை அழைக்கும் அண்ணாமலை வந்தடைந்தார். அவன் தாள்களுக்குத் தன்னை அடைக்கலப் படுத்தி, பண்செறிந்தப் பாமாலைகள் பல பாடி அண்ணாமலைப் பெருமானார்க்குச் சூட்டினார். இங்ஙனம் வாழுங்காலை இவர்க்கு உற்ற சீடராக ஒருவர் வாய்த்தார். அவர்தான் குருநமசிவாயர் என்பவராவர். இவரே தன் குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டு, பொன்னம்பலம் சென்று பல பெரும் கோயிற் றிருப்பணிகள் செய்வித்தார் என அவர் வரலாறு கூறுகிறது. அவர் வரலாற்றை அருணாசலப் புராணப் பதிப்பில் காண்க.

சுவாமிகள் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றைந்தின் வகையறிந்து, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவையனைத்தும் நீத்து வாழ்ந்தவர் என்பது அவர் பாடல்களால் அறிய முடிகிறது. இத்தகைய பெரியாரின் வரலாறு ஏனோ எழுதிவைக்கப் படவில்லை. அவர் சீடராகிலும் வரலாற்றை எழுதிவைத்திருக்கலாம். ஆனால் வரலாறு எழுதுவதற்குப் பதிலாகக் குருவின் பெயரில் தனக்கிருந்த அயராத பற்றைக் காட்டுவான் வேண்டிப் புகழ்மாலைகள் பல, எண்ணரிய பாடல்களாகச் சூட்டியுள்ளார். மடத்தில் உள்ள பல பழைய ஏட்டுச் சுவடிகள் செல்லுக்கு விருந்தாயின. எஞ்சியுள்ள சில சுவடிகளும், நன்முறையில் பாதுகாக்கப் பெறவில்லை. சுவாமிகள் அருளியுள்ள அருணகிரி யந்தாதி, சாரப் பிரபந்தம் இவைகளே அருணாசலப் புராணப் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. அந்தோ! வாழ்வைத் தூய்மை செய்யும் ஏடுகள் மண்ணுக்குள் மண்ணாய் அழிந்தனவே! எண்ண எண்ண நாடிகள் படபடக்கின்றன. சுவாமிகள் இயற்றியுள்ள மேற்குறிப்பிட்ட பாடல்களில் இருந்தே அப்பெரியாருடைய மனநிலையையும், அமைதியையும் காண முடிகிறது.

**குகை வரலாறு, பாததீர்த்தம், முலைப்பால் தீர்த்தம்** :—ஊர் மக்களிடையில் இருந்து காலங்கடத்தினால் தனக்கு நிட்டைகூட அமைதி கிடைக்காததை உணர்ந்த தேசிகர் பெருமான், இறைவனை நல்லிடம் ஒன்றளிக்குமாறு வேண்டினார். அதற்குப் பக்தி வலையிற் படுவோனாகிய பெருமானார்

திருவுளமிரங்கி அன்னார் கனவில் தோன்றி மலையின்பால் உரியதோர் இடத்தைக் காட்டிச் சென்றார் எனவும் அதைக் குறிப்பாக அமைத்துக்கொண்டு சுவாமிகள் அவ்விடம் சென்று பார்க்கும்பொழுது ஒரு குகையைக் கண்டார். அதுவே தனக்கு ஏற்றதென்றுணர்ந்தார். இக்குகை மலையடிவாரத்திலிருந்து ஒரு பர்லாங் அளவில் உள்ளதெனலாம். அக்குகையை ஏற்றதென்றறிந்த பின்னர், தமக்கு வேண்டிய விடாய் முதலானவற்றைப் போக்கிக் கொள்ள நீர் இல்லையென்றேங்கி நிற்கவும், அவர் குகைக்குச் சற்று மேற்புறத்தில் சென்றபொழுது அசரீரி யொன்று தோன்றி அன்பனே! நீ பாதம் வைத்துள்ள இடத்தையே அகழ்ந்தால், உன் தேவைக்குரிய நன்னீர் கிடைக்கும் எனலும் அவ்வாக்கினை ஏற்று, அகழ்ந்தகாலை நன்னீர் கிட்டிற்று. பாதம் போலவே அத்தீர்த்தம் அமைந்திருப்பதால் அதற்கு பாததீர்த்தம் எனப் பெயர் வழங்கலாயிற்று. மற்றோர் தீர்த்தமும் சுவாமிகளுக்கு உண்ணாமுலைத் தாயாரால் அருளப் பெற்றது. அஃதே முலைப்பால் தீர்த்தம் என்பதாகும். பின்வரும் செய்யுள்களால் முன் கூறியவை உணர்க.

**குகை :**

நடலிங்க மூர்த்தி நமசிவா யர்க்கென்று
அடிமுடிமால் வேதர்க் கரிதாம்—நெடிய
திருமேனியிற் குகையாய் தெய்வீக மாக
அருணேசர் பாலித்தா ரன்று.

**பாத தீர்த்தம் :**

வேதத்தால் மாலயனால் விண்ணவர்பிரான் காணாத
பாதத்தால் காட்டைப் பறித்ததே—தீதற்ற
உன்னான சோணகிரி ஓம்நமசி வாயருக்கு
என்னாளும் பாத தீர்த்தம்.

**முலைப்பால் தீர்த்தம் :**

ஆனை முகனும் அரிமுகனும் காணாப்பால்
ஞானக் குகைநமசி வாயருக்கு—மாநிலத்தில்
முந்திப்பிறந் தருணேசர் முக்கணுண் ணாமுலைத்தாய்
தந்த முலைப்பால் தீர்த்தம்.

**செய்ற்கரிய செயல்கள் :** பெருமானார் ஒருமுறை வடநாட்டுத் தலயாத்திரை மேற்கொண்டு, காசியம் பதிக்குத்



தன் சீடர்கள் புடைசூழச் சென்றார். வழியில் டில்லி மாநகரில் தங்க நேர்ந்தது. தங்கிய இடம் டில்லி பாதுஷாவின் பூங்கா. அங்கே தங்கி, சிவபூசைகள் இயற்றித் திருப்பாடல்கள் ஓதிய வண்ணமிருக்குங்கால், இவர்கள் செயல்களைக் கண்டு பொறாத காவலாளர்கள் பாதுஷாவிடம் சொல்ல, "பிறர்க்கின்னா முற்பகற் செய்யின், தமக்கின்னா பிற்பகற் றாமேவரும்" என்பதை உணராத பாதுஷா, காவலர்கள் சொற்கேட்ட அவன், சீலர்களை சிறைக்குள் தள்ளுகஎனலும், இதை யறிந்த நமசிவாய மூர்த்தி "நினைக்கத் தனக்கு" என்றார். உடனே பாதுஷாமுதலானோர் மூர்ச்சையுற்று, அடியற்ற மரம்போல் சாய்ந்தனர். இக்கோலத்தைக் கண்ட பாதுஷாவின் மனைவியார், பெருமானிடம் வந்து முறையிட, அதற்குச் செவிசாய்த்து அவர்கள் அனைவரையும் எழுப்புவித்தார். "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தன் தகுதியால் வென்றுவிடல்" என்பதற்கேற்ப, தன் தகுதியால் சுவாமிகள் வென்று விளங்கினார். அதுபோழ்து பாதுஷாவும் அவருடைய ஆட்களும் சுவாமிகளை நோக்கித் 'தவச் செல்வரீர்! செழுந்தீயெனக் காய்ச்சப் பெற்ற இரும்புக் கம்பமொன்றைத் தாங்கள் தூக்கினால், தங்கள் பெருமை அறிவோம்' என்றனர். அதற்குச் சம்மதித்து, அவர்கள் வேண்டியபடியே செய்து முடித்தார். அச்செயலை அங்குள்ளாரனைவரும் கண் கலங்கிடக் கண்டனர். அதற்குரிய பாடலைக் காண்க :

கழுந்தாகிய துலுக்கர் கண்கலங்கிட இரும்புச்
செழுந்தீயாகிய கம்பம் சென்றெடுத் தணைத்தலிங்கம்
எழுந்த மாலயனுக் கெட்டா இரும்பெருஞ் சோதி
குருந்து சோணாசலத்தில் குகை நமசிவாய லிங்கம்.

பின்னர் தலயாத்திரை மேற்கொண்டு, காசி சென்று திரும்பினார். திரும்பி வருங்காலை சென்னையில் பூந்தவல்லியில் தீவிபத்தால் பலர் மாண்டனர் என்ற செய்தி அறிந்து, அங்ஙனம் இறந்தவர்களை எழுப்பி அருளினர். அதுகாலை அவர் பாடிய பாடல் வருமாறு :

மணந்த நாளெறியச் சிக்கி மடிந்த மாந்தரிறை வனோடு
புணர்ந்து தானெழுந்து பிச்சையுதவியே யுகந்த லிங்கம்
புணர்ந்த தீவினையே வித்தம் பொன்னடித் தொழும்பரேனும்
கொணர்ந்த சோணாசலத்தில் குகைநமசி வாய லிங்கம்.

ஒரு முறை மலையாளங் காணச் சென்று, மலையாள எழில் கண்டு மீண்டகாலை, செங்கம் என்னும் சரித்திரப் பிரசித்தி பெற்ற சிற்றூரில் தங்கினர். அது போழ்து அண்ணாமலை அண்ணல் அர்ச்சகர்கள் கனவில் தோன்றி விருதுகளுடன் நமசிவாயத்தை அழைத்து வருக எனலும், அர்ச்சகர்கள் விருதுகளுடன், புடைசூழச் சென்று பெருந் தவச் செல்வரை அழைத்து வந்தார்கள். அதுகாலை சுவாமிகள் எம்பெருமான் பெயரில் பாடிய பாடல்களைக் காண்க.

பூவரும்சுவர்க்கம் தந்துபுறந்து சங்கரித்துத் தானே
மூவருமாகி நின்ற முழுமுதற் சோதிலிங்கம்
தேவரும் முனிவர் யாவர்சித்தரும் இறங்கிப் போற்றிக்
சேர்வருணா சலத்தில் குகைநமசி வாயலிங்கம் !

வண்டுசூழ் கொன்றை அண்ணாமலைமருண் டெதிரே சென்று
தண்டிகை தந்தழைத்து வந்தசந்நிதி யமர்ந்த லிங்கம்
கண்ட சீரடியார் உய்யக் கருணையே பொழியும் ஞானக்
கொண்ட சோணசலத்தில் குகை நமசிவாய லிங்கம்.

**சுவாமிகளின் அருட் பாடல்கள் :**

வரம்பலிக்கு மெஞ்ஞான வாழ்வே பலிக்குந்
திரம்பலிக்குஞ் செல்வம் பலிக்கு—முரம்பலிக்குஞ்
சோண சலனைச் சுவாமிதனை யுள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து.

குலமில்லார் வண்மைக் குணமில்லார் கல்வி
நலமில்லா ராகிலு நன்றே—வலம்வந்
தரிய திருவருணை யண்ணலுக் காளாவார்
பெரியவர்க்கு மேலான பேர்.

வன மனந்தேட வினையடியுஞ்சீர் முடியுந்
தானவற்றிற் கெட்டாத தாணுவா—ஞானத்
தழல்கண்டமேனித் தலைவனரு ணேசன்
கழல்கண்டார் காணார் கரு.

சுவாமிகள் அண்ணாமலை அண்ணலை நேரிற் கண்டு பேசி, தம் குறைகளைக் கூறி, அவைகளை நீக்கித் தனக்கு அருளுமாறு "சாரப் பிரபந்தம்" என்ற தலைப்பில் அருமையாக நயம்படப் பாடியுள்ளார்கள். அவை படித்து இன்புறத் தக்கதாகும். பாடல்களைப் பதிப்பிற் காண்க.



**நகரை இழித்துரைத்தல் :**—சுவாமிகள் அண்ணாமலை அப்பன்பால் அயராத பற்றுக் கொண்டவர் என்பதை முன்னர் கண்டோம். அத்தகைய அப்பன் வாழுமூரை ஒருகால் இழிவுபடுத்திப் பேசிவிட்டார். அவர் காலத்தில் அருணையில் வாழ்ந்த கோளர்கள், எப்பொழுதும் சுவாமிகளுக்கு தொந்தரவு விளைவித்து வந்தார்கள். பொறுமையில் திளைப்பவர்களுக்கு இலகுவில் சினம் பிறக்காது. பிறந்துவிட்டாலோ அதை நீக்குவதும் கடினந்தான். எல்லைமீறிய தொல்லைக்கோர்கால் உட்பட்ட நமசிவாய மூர்த்தி, அருணையைக் கீழ்க்கண்டவாறு பழித்தும் இழித்தும் பாட ஆரம்பித்தார். தம் பாட்டிலே, "பழியே சுமக்குமூர், பாதகரே வாழுமூர்" என்று திருவாய் மலர்ந்தருளிய பொழுது, அண்ணாமலை ஆண்டவன் "நான் ஒருவன் இருக்கிறேன்" என்று அசரீரியால் அறிவிக்க, சுவாமிகள் சினம் தணியப் பெற்றவராய் "அழியும் அழியாவூர் அண்ணாமலை" என்று முடித்ததாகவும் கர்ணபரம்பரையாய்ப் பெரியோர்கள் கூறி வருகிறார்கள். நமசிவாயர் காலத்திற்கு முன்னும், அவர்காலத்தில் ஒரு பகுதியும், நெய்தல்தொழில் அருணைநகரின்கண் மிக்கிருந்ததென்றும், சுவாமிகள் கோளர்கள்பால் சினந்து பாடிய பின்னரே அவர்களும் அவர்கள் தொழிலும் அந்நகரில் அருகி, முடிவில் தேடவேண்டிய அளவிற்கு வந்துவிட்டது என்ற மெய்யுரையை நாளும் அந்நகர் மக்கள் கூறி வருவதால் அறியலாம். சீரொழுகும் சான்ற பெருமக்களின் சினம் அம்பைக்கொண்டு, நீரைக் கிழித்தால் ஆங்கு தோன்றும் வடுப்போல மாறினாலும், அச்சினம் செய்யவேண்டிய கடமையைச் செய்தே முடிக்கிறது. வானில் தோன்றும் நன்மதி இருளைக் கடிந்து, ஒளியை நல்கி இன்பத்தில் திளைக்குந் தன்மை பெற்றிருப்பினும், அதற்கும் களங்கம் இருப்பதைக் காண்கிறோமல்லவோ? அஃதும் அழிக்க முடியாத களங்கமல்லவா? அதுவேபோல நினைக்க முக்தியை யளிக்குமூர் அண்ணாமலையாகவே இருப்பினும், அதற்கும் ஒரு சிறு களங்கம் ஞானச் செல்வரால் செய்யப்பட்டது.

கோளர்கள் இருக்குமூர், கொன்றாலும் கேளாவூர்
காளையராய் நின்று கதறுமூர்—மேலே
பழியே சுமக்குமூர் பாதகரே வாழுமூர்
அழியும் அழியாவூர் அண்ணாமலை.

**சுவாமிகள் ஜீவன் முக்தரானது** :—சுவாமிகள் எப்பொழுதும் குகையிலேயே நிட்டைகூடுவது வழக்கம். மக்கள் அவரை வழிபட இடைவிடாது சென்று வந்தார்களாம். ஓர் நன்னாளில் தன்னைக் காண வந்தவர்களிடம் தான் குகைக்குள் சென்று விடுவதாகவும் குகை வாயிலை நன்ருக அடைத்துவிட்டு மூன்று நாட்கள் கழித்துத் தன்னை வந்து பார்க்குமாறும் கூறினராம். அங்குள்ளார் அவர் கூறிய படியே செய்து குறிப்பிட்ட நாளில் சென்று கண்டபொழுது, அங்கே புகழுடலே நிலவியிருந்ததைக் கண்டு, பூதவுடல் எங்கு சென்றதோ என்ற வியப்பும் அச்சமும் கொண்டனர். சுவாமிகள் ஏற்றிய கற்பூரமொத்து (Sublimation) இறைவனுடன் இரண்டறக் கலந்தார் என்பதே சால் புடைத்து. உள்ளத்தாற் பொய்யாது ஒழுகிய இத்தகு பெரியாரின் திருநாமம் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் நிலவுதாக ! திருவள்ளுவர்,

> " நத்தம்போற் கேடும் உளவாகும் சாக்காடும்
> வித்தகர்க் கல்லால் அரிது"

என்று கூறியதற்கு இலக்காயினர் என்பதே சரியாகும். (குறள் கருத்து – புகழுடம்பு செல்வமடையப் பூத உடம்பு கெடுதலும், புகழுடம்பு அழியாதுநிற்கப் பூதஉடம்பு அழிதலும் உயர்ந்த அறிவுடைய ஞானச்செம்மல்களுக்கே உண்டு.)

**நமசிவாயர் மடம் அன்றும்–இன்றும்** :—இந்த மடம் மலையடிவாரத்திலேயே இருக்கிறது. இது மிகவும் புராதனமான தென்றே தோன்றுகிறது. இம்மடத்தைச் சார்ந்த சீடர்கள் தமிழகத்தில் பலவிடங்களில் இருந்தார்கள் என அறிய முடிகிறது. சுவாமிகள் காலத்திற்குப்பின் ஒருவர்பின் ஒருவராகப் பட்டத்திற்கு வந்து, தற்போழ்துள்ள பட்டம் 73-வதாகும். காலத்தின் கூறுபாட்டினால் மடம் நாளடைவில் குன்றிக் குன்றி இன்றும் க்ஷீண திசை அடைந்த நிலையில் இருக்கிறது. தற்பொழுது மடத்தின் பாதுகாப்பிற்காக ஒரு குழு அமைக்கப்பெற்று, அதன் குழுவினர்கள் சொத்துக்களின் பரிபாலனத்தை ஏற்க முன் வந்துள்ளனர். அந்த மடத்தில் உள்ள பழைமேறு முதலான விருதுகளைக் காணுங்கால் பழைய நினைவுகள் கடல் அலைமோதுவதைப் போல மனத்திடையே வந்து மோதி மோதி மனமாம் கரையை அரிக்கிறது. செப்புத்தகட்டில் மந்திர வார்த்தைகள் பொறிக்கப் பெற்றுப் பூசையில் இலங்குகிறது. அவ்விடத்திற்குச் செல்லுங்கால் நம்மை அறியாத ஒரு அமைதி பிறக்கிறது; உலகச் சூழல்களால் விளையும் கேடுகள் உள்ளத்தை வெறுத்து வெளியேறுகின்றன. மடத்தின் இன்றைய பாழ்த்த தோற்றத்தைக் காணுங்கால் மனம் அனலிடைப்பட்ட மெழுகென கசிந்து ஓடுகிறது.



மடம் பாழானதற்குக் காரணம் மிகுதியாகப் பட்டத்திற்கு வந்த மடாதிபதிகள்தான் என்னில் குறையேயாகாது; நிறைவே யாகுமென்க. ஒரு பெருஞ் செல்வனுக்குப் பல ஆண்டுகள் பிள்ளைப்பேறில்லாதிருந்து, பின்னர் புதல்வர்ப்பேறு ஒன்று அடைந்தால், அச்செல்வன் அப்புதல்வனை எப்படி வளர்த்து வருவான் என்பதை எழுதி விளக்கவேண்டிய அவசியமில்லையல்லவா? அச்செல்வனே அப்புதல்வனைப் பாசமாக வளர்த்து, இறைவனால் இயற்கையில் அளிக்கப் பெற்றிருக்கும் அறிவையும் மழுங்க வைத்து, அறியாமை இருளில் மூழ்கடித்து வருவான். காலப் போக்கில் உலகம் பற்றி உணர ஆரம்பிக்கும் செல்வப் புதல்வன், வாழும் வகையோ வாய்விட்டுக் கூறமுடியாததாய் இருக்கும். பண்பற்று வாழக் கற்றுக்கொண்ட செல்வனுக்கு அறிவு பெருக வழியேது? கல்வியின் காற்பல விலை என்னவென்று அல்லவா வினவுவான்? அவனிடம் நிறைந்து விளங்குவது அந்தகாரம் நிறைந்த அவலப்பேய்தான்! ஒரு பெரிய வைக்கோற் குவைக்கு, ஒரு சிறு நெருப்பு துணையானல் என்ன விளையுமோ, அஃதேபோல் பண்பு நீங்கிய செல்வப் புதல்வன் செல்வம் பாழுறும் அல்லவா? முடிவில் அவனை மூதேவி இருப்பிடமாகக் கொள்வாள். முன்னர் கூறிய செல்வப் பிள்ளையை யொத்து, மடம் என்ற செல்வத் தந்தை பின்னர் பட்டத்திற்கு வந்த தம் அருமைச் சேய்களை, சுகபோகமாக நிறைந்த சொத்துகள் அளித்து, அவர்களையும் அழித்து, தன்னையும் பாழ்படுத்திக் கொண்டது. இருப்பினும் அவ்விடத்தில், ஞான ஒளி நிலவுவதால், ஆங்கு செல்லின் முன்னறிவும், நுண்ணறிவும் வளர இடந்தருகிறது. நன்முறையில் அமைந்திருந்த மடத்துக் கட்டடங்களெல்லாம், கவனிக்காது விட்ட குறையால் இன்று குட்டிச் சுவர்களாக நிற்கின்றன. அந்தோ! காணுங்கால் வெந்த புண்ணில் வேல் பாய்ந்த சோகம் இருக்கிறது. ஒரு

மாபெருஞ் ஞானச் செல்வரின் திருநாமத்தைக் காக்க, அவர் புகழ் தரணியெங்கும் வாழும் மக்கள் அறிய வேண்டுமென் றெண்ணி அமைக்கப் பெற்ற ஓர் மடத்தின் நிலை பாழ் பட்டுக் கிடக்கின்றதென்றால், நாம் மார்தட்டி வாழும் வாழ்வு நாகரீகமுடையதா? போலி வாழ்வன்றோ! தென் னாட்டு மக்கள் பட்டினிப் பஞ்சத்தால் வாடி வதங்கி மெலி யும் பொழுது, பிறநாட்டு மக்களுக்கு இலாபம் கருதி பண்டகசாலையில் உள்ள பொருள்களை விலை கூறுபவன் மன்னனாய் இருக்க முடியுமா? அவன் அரச வாழ்வு நிலைக்குமா? நிலைக்கவே நிலைக்காதென்க! அஃதேபோல் நம் நாட்டில் நாம் போற்றவேண்டியவர்களை—வாழ்க்கைக்குரிய நடைமுறைப் பண்பாடுகளை வகுத்து அளித்துச் சென்ற செல்வர்களை நாம் மறந்தால் வாழ்வில் சிறக்க வழியுண்டா?

முடிபு:—படிக்கின்றவர்கள் தொகை, நாட்டிலே இன்று காட்டுத்தீ யொத்து வளர்கிறது. படிப்பும் எத்தகையது? பெரியவர்களைப் பற்றிச் சிந்திக்கும் படிப்பா? அன்றி அறிவியலுக்கு விருந்தோ, வாழ்விற்குப் பயனை அளிக்கும் படிப்பா? அல்லவே! வருவாய் பெறுதற்குரிய வழி யாதென அறியாது, முன்னோர் ஈட்டிய பொருளைப் பெருவாரியாக செலவு செய்து, பிறகு எப்படி வாழ்வது என்றறியாது திண்டாடி வாழும் நிலைக்கு அழைக்கும் படிப்புத்தானே? கல்வியுலகில் மறுமலர்ச்சி தோன்றுவதாக! படிப்பதின் பயன் என்ன? நன்றாக வாழ்வதுதான்! நன்றாக வாழ்தல் என்றால் எப்படி? ஒழுக்கச் சீலர்களாகவும், குணக்குன்றுக ளாகவும், பண்புடையவர்களாகவும் வாழ்வதன்றோ நல் வாழ்வு. இத்தகைய வாழ்வில் மனம் தெளிவு பெற்று, அதன் வழி அமைதி பிறக்கும் என்பது திண்ணம். அமைதி காண வேண்டில் நாம் என்ன செய்யவேண்டும்? வழி காட்டிகளாக நின்று, வாழ்வெனும் பாதையைச் செப்ப னிட்டுத் தூய்மை செய்த ஞானத்தபோதனர்களை—அவர் களின் பொன் மொழிகளை—மனத்தில் நிறுத்தி, இடை யறாது நினைவிற்குக் கொணர்தல் வேண்டும். அது போழ்து நம் வாழ்வு பெருக்கம் அடைந்து ஆங்கு பெரும் பேரின்பம் நிலவும். அத்தகைப் பெருமக்களைப் போற்றுங் கல்வியில் நம் தமிழகச் சிறார்களும் சிறுமிகளும்—எதிர்காலத்தை ஆளும் திறன் படைத்தவர்கள்—ஈடுபடும் வரையில் தமிழ



கத்தில் நல்லதோர் நிலை நிலவ வழியில்லை. அவர்களை ஈடு படச் செய்து, உயர்த்த வேண்டியது அறிஞர் கடன். நமசிவாய மூர்த்தி போன்ற பெரியார்கள் திருநாமம் தமிழக மக்கள் உள்ளத்தில் நிலவுவதாக!

---

9. ஒழிபு

# திருக்கழுக்குன்றம் ஆனிமகப் பெருவிழா

சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் வழக்கம்போல் ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தை ஒட்டித் திருமுறைப் பெருவிழா சிறப்புற ஆனி 13, 14, 15, 16 தேதிகளில் நடைபெற்றது.

கடந்த ஆண்டுகளைவிட இவ்வாண்டு, விழா பலவகைப் புதிய சிறப்புக்களுடனும் பெருங்கூட்டத்துடனும் திகழ்ந் தது. விழா மிகவும் சிறப்பாகவும் வளர்ச்சிப் போக்கிலும் இருந்தது. விழாவின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் பெருங் காரணம் ஆசிரியர் இளவழகனார், திருமுருக. கிருபாநந்த வாரி, திருப்புகழ்மணி டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை முதலிய சான்றோர்கள் விழாவில் மிகவும் ஆர்வத்தோடு ஈடுபட்டதுதான்.

இவர்களுள் வாரி அவர்கள் தான் சென்ற இடங் களில் எல்லாம் விழாப்பற்றி எடுத்துச் சொல்லியதும், ஆசிரியர் அவர்கள் இவ்விழாவை முன்னிட்டே தொண்ட மண்டல யாத்திரையை 2–6–52 முதல் மேற்கொண்டு அங்கங்கே சுற்றிச் சொற்பொழிவுகள் (பிரசாரம்) செய்து வந்ததும் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளாகும்.

விழா நிகழ்ச்சிகளை விரிவாகச் செய்வதற்குப் பெருந் துணையாக இருந்தவர்கள் வண்ணையம்பதி சிவத்திரு. வள்ளி யம்மையார் அவர்களாவர். ஆயிரக்கணக்கான அன்பர் களுக்கு மூன்று நாட்கள் இரவு பகலும் உணவும் சிற்றுண் டியும் கொடுத்து 'உபசரிப்பது' எளிதான செயலாகுமா? அதனை நிறைவேற்றிய அம்மையாரின் தாராளமான பெருந்தன்மைக்கு இக்காலத்தில் ஈடும் எடுப்பும் காண்பது மிகவும் அரிதாகும்.

## முதல் நாள் (26-6-52)

மாலை 7 மணிக்கு அடிவாரத்தில் ஈண்டிய அடியார்களை வரவேற்று எல்லோருக்கும் சந்தனம் பன்னீர் வழங்கித் தலைவர்களுக்கு மலர்மாலை அணிவித்து மேளத்துடன் திருக்கோயிலுக்கு அழைத்துச் சென்றார். மரக்காணம் திரு. எ. கணபதி முதலியார். இரு வரவேற்பு இதழ்கள் அவராலும் கானக் கோயிற் பேட்டைத் தேவார சபையினராலும் படித்துக் கொடுக்கப்பட்டன. பின், திருவள்ளுவரகம்–இராமநாத பிள்ளை அவர்கள் தலைமையில் ஊர்க் கோயில் வழிபாடு ஏறத்தாழ நாலாயிரம் அன்பர்கள் திரண்டு பின்தொடர நடைபெற்றது.

வழிபாட்டின் பயன் பலவகையிலும் அமைதி பெறுதலே எனப் பிள்ளையவர்கள் மணிமொழிபோல் மிகச் சுருக்கமாக விளக்கினார்கள்.

திரிபுர சுந்தரியின் திருக்கோலக் காட்சியும், அவர் முன்னிலையில் திருநெறித் தமிழிசைச் செல்வர் திரு. கூத்தரசு (சைதை) அவர்களின் இனிய திருமுறை இசையரங்கும் சிறப்பாக அமைந்தன.

## இரண்டாம் நாள் (27-6-52)

### மாணிக்கவாசகர் திருநாள்

காலை 6–30 மணிக்கு ஊர்க்கோயிலில் உட்கோபுர வாயிற் பிள்ளையார் திருமுன் அடியார்கள் கூடினர். வழிபாட்டுக்குப் பின் ஆசிரியர் திருமுறை வரலாறு பற்றியும், பொல்லாப் பிள்ளையார் அருள் பற்றியும், திருமுறை விழாவுக்குச் சிறப்பிடம் திருக்கழுக்குன்றமே என்பது பற்றியும் உணர்ச்சி மிக விளக்கினார்கள். யானைமேல் திருமுறைகள் ஒப்பனையோடு திகழ, பதினெண்கணத்தவரோ எனப் பல ஊர்களிலிருந்தும் போந்திருந்த 18 சபையார் திருமுறைகளைப் பாராயணம் செய்துகொண்டு அணி அணியாகப் பின்தொடர, விழாக்கூட்டம் மலைவலமாகச் சஞ்சீவிமலைச் சாரலில் உள்ள திருவடிக் கோயிலை 9-9½ மணிக்குச் சேர்ந்தது.

அங்கே மேற்படி பிள்ளையார் வழிபாட்டைச் சிறப்புறச் செய்வித்த சென்னை திரு. வேதாசலம் செட்டியார் அடியார்களுக்குக் காலை உணவாகப் பிள்ளையார் அருளமுதை (பிரசாதம்) வழங்குவித்தார்.



திருவடியிடத்தில் அமைதியான முறையில் பூசையும், வழிபாடும் சிறந்தது. அன்பர் பலர் உருக்கமாகப் பாடினர். திருவள்ளுவரகம்–வாரி, ஆசிரியர் முதலியோரின் அரிய ஆதரவு மொழிகளுக்குப் பின் திரு. எ. கஜபதி நாயகர் **திருக்கழுக்குன்றத் திருப்பதிக விளக்கம்** என்னும் விளக்க நூலைத் திருக்கூட்டச் சார்பில் வெளியிட்டார்.

அந்நூல் இராயபுரம் இறைபணிக் கழகத்தில் ஆசிரியர் ஆற்றிய சொற்பொழிவுகளின் தொகுப்பாகும். ஏறத்தாழ 80 பக்கமுள்ள அந்நூலை எட்டு அணாவிலைக்குத் திருக்கூட்டத்தார் வெளியிட்டது பெரிதும் போற்றத்தக்க ஒரு செயலாகும். இதுவன்றி இலவசச் சிறு வெளியீடுகளும் விழா நினைவாக இளிக்குகை திரு. சிவானந்த அடிகள் (சிவ புராணம், கருணை மலர்), சென்னை வாசுதேவ பிள்ளை (அருட்பா, ஆளுடைய அடிகள் மாலை) முதலியோரால் வெளிவந்து உலவின. வழக்கம்போல் மாம்பாக்கம் குருகுலத்தாரின் (கழுக்குன்றக் காட்சி, திருக்கழுக்குன்றத் திருபதிகங்கள்) அடக்கவிலைப் பதிப்புகளும், கௌணியன் அச்சகத்தாரின் பன்னிரு திருமுறைத் திரட்டு முதலியனவும் விற்பனைக்கு வந்திருந்தன.

பகல் உணவு மிகவும் மகிழ்ச்சி தரத்தக்க வகையில் கதம்ப, தயிர் சோறுகளாக அங்கேயே நிலாச்சோறு போல் வழங்கப்பட்டது.

மருத்து மலைச்சாரலில் மரநிழல்களில் எல்லோரும் ஓர் நிரையாகவும் கூட்டம் கூட்டமாகவும் அமர்ந்து உண்ட காட்சி மிக்க கிளர்ச்சியைக் கொடுத்தது. திருவடியிடமாதலின் அங்கே உண்ட அவ்வருளமுது திருவருள் ஞானத்தையே உண்பது போன்ற பேருணர்ச்சியை நல்கியது. அன்பர்கள் வள்ளியம்மையார் வாழ்க! வாழ்க!! என வாயார வாழ்த்தினர்.

பிற்பகல் 3 மணிக்கு அதே இடத்தில் திருவள்ளுவரகம் அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம் மெய்கண்டார் கழக ஆசிரியர் திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார், சென்னை திரு. இரத்தின சபாபதி நாயகர் முதலியோரின் சொற்பொழிவுகளோடு திருமுறைப் பேரவை நடைபெற்றது.

திருமுறைகளின் பெருமைகளையும் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளத் தக்க முறைகளையும் தலைவரும், பிறரும்

தக்கவாறு விளக்கினர். வாழ்க்கைச் சிக்கல்கள் அனைத்தையும் அவற்றைக்கொண்டே தீர்த்துக் கொள்ளலாம் என்றும், எல்லாச் சடங்குகளையும் அவற்றாலேயே செய்விக்கலாம் என்றும் அறிவுறுத்தினர்.

மாலை 5-30 மணிக்கு மீண்டும் மலைவலமாக விழாக் கூட்டம் நால்வர் கோயிலை அடைந்தது. அங்கே நால்வர் வழிபாடும், குளப்பாக்கம் அருணகிரி சுவாமிகளின் பேச்சும், இசைச் சோதி மணி - இரத்தின வேலவரின் மரபு பிறழாத திருமுறை இசையரங்கும் நன்கு நடைபெற்றன. மணிவாசகருக்கு ஊசல் நிலையில் சிறப்பாக அலங்காரம் செய்திருந்தார்கள். இறுதியில் மூவர் பேட்டையார் செலவில் அன்பர்களுக்குச் சுண்டலும் வழங்கப்பட்டது.

இரவு 11 மணி முதல் 2 மணிவரை (ஒலிப்பெருக்கிக் கோளாறினால் நேரங்கடந்து தொடங்கியது) "திருமுருக கிருபாநந்தவாரி அவர்களின் பெருந்துணை" என்பது பற்றிய விரிவுரை அடிவாரத்தில் மிக நன்றாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் மிகவும் கிளர்ச்சியோடு அவ்விரிவுரையைக் கேட்டு மகிழ்ந்து பயன் பெற்றார்கள்.

### மூன்றாம் நாள் (28-6-52)

காலை 7 மணிக்குத் திருப்புகழ் மணி அவர்களின் தலைமையில் திருப்படிவிழா தொடங்கியது. பக்திப் பரவசத்தோடு தமது முதிர்ந்த நிலையிலும் அப்பெரியார் உணர்ச்சி மிகப் பாடி அன்பர்களை உருக்க நிலைக்கு ஏற்ற எல்லோரும் மலைமேல் ஏறினார்கள். தொண்டைமண்டல யாத்திரையைக் கருதியபடி திருக்கழுக்குன்றத்தில் முடித்த ஆசிரியர் அவர்கள் உச்சிச் செல்வனை உணர்த்தற் கரிய உருக்கநிலையில் நின்று வழிபட்டு, யாத்திரையில் கலந்துகொண்ட அன்பர்களுக்குத் திருநீறு கொடுத்து மகிழ்வித்து உள்ளங் குளிர்ந்தார்கள்.

பிற்பகல் 4 மணிக்கு அடிவாரத்தில் சித்தாந்த சிகாமணி கா. வச்சிரவேல் முதலியார் அவர்களின் தலைமையில் இரண்டாம் நாள் திருமுறைப் பேரவை தொடங்கியது. அவர்களின் அரிய தலைமைஉரைக்குப்பின் திருவல்லிக்கேணி திருமதி. பத்மாவதி அம்மை B. O. L. (Hon.) அவர்களும், புலவர் முருகவேள் B. O. L. அவர்களும் முறையே 'திரு



வாசகத்தேன்' 'மணிவாசகர் மாட்சி' என்பன பற்றி இனிய முறையில் பேசினர்.

(சொற்பொழிவுகளின் சாரம் முல்லைக் கொடியில் தொடர்ந்து வரும்.)

இடையில் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள், ஆசிரியர் அவர்கள் தந்த விளக்கத்துக்குப் பின் மாம்பாக்கம் குருகுலப்பணித் திட்டத்தை நூல்வடிவில் வெளியிட்டு ஆர்வமாகப் பேசி ஆதரவும் செய்தார்கள்.

தலைவர் அவர்களின் இனிய முடிவுரையோடு பேரவை இரவு 9 மணிக்கு முடிந்தது.

மீண்டும் இரவு 10மணிக்கு அதே இடத்தில் திருவாசக மணி கே. எம். பாலசுப்பிரமணியம், B. A., B. L. அவர்களின் திருவாசகம் பற்றிய விரிவுரை ஒரு மணிவரை சிறப்புற நடைபெற்றது.

### நான்காம் நாள் (29-6-52)

காலை 9-மணிக்கு அடிவாரத்தில் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, B. A., L. T., அவர்கள் தலைமையில் சமய வளர்ச்சி மகாநாடு தொடங்கியது. வரவேற்புரையின்போது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் ஏற்படுத்தப் பட்டிருக்கும் "வழிபாட்டுக் கூட்டவை" என்னும் பொது அமைப்புப் பற்றியும் அதில் சைவ அமைப்புகளெல்லாம் இணைந்து காலத்திற் கேற்றபடி சமயப் பணிகளைக் கிளர்ச்சியாகச் செய்யவேண்டிய கட்டாயம் பற்றியும், இணைய வேண்டிய முறை பற்றியும், சமய வளர்ச்சியிற் கருத்துடைய அன்பர்கள் எல்லாம் ஆண்டுக்கொரு முறை அதற்கு அடையாளமாக 0-4-0 சமயக் காணிக்கை செலுத்தி நூறாயிரக் கணக்கில் திரண்டு நிற்கவேண்டும் என்பது பற்றியும் மாநாட்டின் நோக்கம் பற்றியும் விளக்கப்பட்டது. தலைவர்வரகளின் அரிய முன்னுரைக்குப்பின் இருக்கம் ஆதிமூல முதலியார் (திருக்கூட்ட அமைப்பாளர்) படத்தைப் புலவர் மயிலை - சிவமுத்து அவர்கள் தமக்கே உரிய அழுத்தம் திருத்தமான உரைகளோடு திறந்துவைத்தார்கள். சுந்தரப் பெருமாள் கோயில் திரு. மா. சிவகுருநாதம் பிள்ளை அவர்கள் "சிதைந்த சிவாலயங்கள்" என்ற தலைப்பில் மனநெகிழ்ச்சியை உண்டாக்கத் தக்க விரிவுரையை நிகழ்த்தினார்கள். பாடல் பெற்ற

பழைய தலங்களைப் பற்றி அவர்கள் கொடுத்த குறிப்புக்களும், கொண்டு வந்த தரைப்படங்கள் (Maps) முதலியனவும் அவர்களின் அரிய உழைப்பையும் பெரிய சமயப் பற்றையும் எடுத்துக் காட்டின. அவர்கள் பேச்சும் எழுத்தும் நூலாகிப் பரவினால் சமய உலகில் நல்ல திருத்தங்கள் ஏற்படும் என்பது உறுதி. பிற்க, பிறகு சென்னை, திரு. இராசரத்தினம் அம்மையார், M. A., L. T., அவர்கள் 'சமயம்' என்னும் தலைப்பில் ஓர் இனிய சொற்பொழிவைச் செய்தார்கள். இறுதியில் திரு. சாமி வேலாயுதனார் அவர்கள் முன் மொழியவும், தலைவர் அவர்கள் தம் முடிவுரையாக வழிமொழியவும் கீழ்க்காணும் கருத்துடைய ஒன்பது தீர்மானங்கள் நிறைவேறின.

1. சென்னை சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் நிறுவப் பெற்றிருக்கும் வழிபாட்டுக் கூட்டவையில் சைவ சபைகள் எல்லாம் இணையவேண்டும்.

2. சமயக் காணிக்கை செலுத்தும் பழக்கத்தையும், வார வழிபாட்டு வழக்கத்தையும் சிவகாருண்யத் தொண்டுணர்ச்சிகளையும் நம் சமயத்தவர்பால் மிகுதியாக்க ஆங்காங்குள்ள சமயத்தொண்டர்கள் முயலவேண்டும். அதற்குத் திருக்கோயில்கள் திருமடங்கள் முதலியவற்றின் அதிகாரங்கள் தக்க ஆதரவு செய்தல் வேண்டும்.

3. திருக்கோயில்களும் திருமடங்களும் தமது வருவாயில் குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சமயப் பிரசாரத்திற்கென்று ஒதுக்கிவைத்துச் செலவிடவேண்டும். அரசினரும் அதற்கான சட்டங்களைச் செய்தல் வேண்டும்.

4. திருக் கோயில்களில் தேவார திருவாசக திருநாலாயிரப் பாடல்களைச் சிறப்பான முறையில் ஓதுவிக்க அதன் அதிகாரிகள் ஏற்பாடு செய்யவேண்டும்.

(5) இந்து அறநிலையக் கழகத்தை (H. R. E. Board) அரசாங்கத்தோடு இணைத்தபோது அரசாங்கக் கணக்குக்கு மாற்றிய அதன் பெருந் தொகையைக் கொண்டு அங்கங்கே சிதைந்து கிடக்கும் பழைய, பாடல்பெற்ற இந்துக் கோயில்களைச் சீர்ப்படுத்தி அமைக்கச் செலவிட வேண்டும்.

(6) அர்ச்சகர்களுக்கு எனத் தனியே பாடசாலையும் தேர்வும் வைத்துத் தகுதிவாய்ந்த அர்ச்சகர்களைத் தயார் செய்ய அரசினர் தக்க சமய அறிஞர்களைக் கலந்து ஆவன செய்ய வேண்டும்.



(7) திருக்கோயில்களின் சுவர்களில் உள்ள கல்வெட்டுக்களை அவற்றின் அதிகாரிகள் சுண்ணாம்பு முதலியன தீற்றி அழிக்காமல் பாதுகாக்க வேண்டும்.

(8) பூண்டி தண்ணீர்த் தேக்கத்தில் மூழ்கடிக்கப்பட்ட திருவெண்பாக்கம் திருக்கோயிலை உடனே சூளை திரு. T. P. இராமசாமி பிள்ளை அவர்கள் ஒதுக்கியுள்ள பணத்தைக் கொண்டும் மற்றும் சைவப் பெருஞ் செல்வர்கள் உதவக் கூடிய பணத்தைக் கொண்டும் மீண்டும் புதுக்கி அமைக்க அரசினர் முயலவேண்டும்.

(9) சேக்கிழார் திருபணிக் கழகத்தினர் குன்றத்தூர் சேக்கிழார் திருக்கோயிலின் நித்திய நைமித்திகங்கட்குச் செய்து வரும் ஏற்பாட்டுக்கு அன்பர்கள் மிகவும் ஆதரவு செய்ய வேண்டும்.

பிற்பகல் 4 மணிக்கு, திரு. கண்ணன் அடிகள் 'எடுப்பான முறையில் மாம்பாக்கம் குருகுலப் பணித் திட்டம் பற்றி ஆதரவு மொழிகள் வழங்கினர்.

அப்போது விழாவுக்கு வந்திருந்த காட்ராம்பாக்கம் திரு. வரதா ரெட்டியாரும் அவர்களின் துணைவி திரு. செயலட்சுமி அம்மையாரும் குருகுலத்துக்கு ஓர் ஏகர் நிலமும், முல்லைக்கொடியின் வளர்ச்சிக்கு ரூபாய் நூறும் கொடுப்பதாக உறுதி கூறினர்.

ஆசிரியர் தலைமையில் 5 மணிக்குமேல் பாராயணத்துடன் அன்பர்கள் அனைவரும் மலைவலமாகப் புறப்பட்டுச் சொக்கம்மை திருக்கோயில் சாரலை அடைந்தனர். அங்கே உள்ள கருங்கற் பீடத்தில் ஆசிரியர் அமர்வதற்கும், இறைவன் திருவருளே என அன்பர்கள் உள்ளமும் உடலும் சூழலும் குளிரச் சிறுதூறலாக மழை பொழிவதற்கும் சரியாக இருந்தது.

சென்ற ஆண்டிலும் இதே இடத்தில் இதே தேனிப்பு நேரத்தில் ஆசிரியர் பெரிய புராணத்துள் தடுத்தாட்கொண்ட புராணத்தில் 'கங்கை' என்று தொடங்கும் முதற் செய்யுளை ஓதி விளக்கம் சொன்னவுடன் அங்கே நிலவிய தண்ணீர்த்தட்டு நீங்கும்படி நல்ல மழை பொழிந்தது. இவ்வாண்டு தண்ணீர்த் தட்டு இல்லையாதலினாற்போலும்,

தேனிப்புக்குத் தடையிராமல் 5-6 நிமிடங்கள் மட்டும் சிறு மழை பெய்து அன்பர்களின் திருவருள் உணர்ச்சியைச் செழிப்பித்தது.

தேனிப்பு முறைகளை முறையாகப் பாடங்கேட்டுப் பயிலவேண்டும் என்னும் உணர்வைப் பெருக்குகிற முறையில் ஆசிரியர் அவர்கள் நேரத்திற்கேற்ப ஒருவகைத் தியான முறையை விளக்க, அன்பர்கள் அதன்படி தியானித்துக் கொண்டு தங்குமிடம் சேர்ந்தனர்.

இரவு (மீண்டும் சிறிது நேரம் மழை நன்றாகப் பொழிந்தது.) 10 மணிக்குமேல் அடிவாரத்தில் தென்றுப்பிரிக்கத் தமிழன்பர் திரு. மாணிக்கம் அவர்களின் கிளர்ச்சியான இசைப் பாடலுக்குப் பின் காஞ்சீபுரம் இயலிசைத் தமிழ் மணி திரு. சுந்தர மூர்த்தி அவர்களின் மணிவாசகர் வரலாறு பற்றிய இன்னிசை விரிவுரை இரவு நெடுநேரம் வரை மிகவும் நன்றாக நடைபெற்றது.

விழா நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்தன.

—தமிழ்ச்சிறுவன்

---

## சைவப்புலவர் தேர்வு விவரம்

இத்தேர்வுகள் சென்னை, சிதம்பரம், தஞ்சை, திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி, சேலம், கோயம்புத்தூர், யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களில் விண்ணப்பிக்கும் இளைஞர்கள் வசதிக்கேற்ப குறிப்பிட்ட தேர்வு நிலையங்களில் நடைபெறும். தேர்வுக்கு ரூபா 2 (இரண்டு) நுழைவுக் கட்டணமாகச் செலுத்தல் வேண்டும். தேர்வுக்கு ஆண்டு வரையறையின்றி எவரும் விண்ணப்பிக்கலாம். தேர்வில் வெற்றி பெறுவோர் சைவப் புலவர் என்ற பட்டம் பெறுவர்.

விண்ணப்பத்தாளும், நுழைவுக்கட்டணமும் செப்டம்பர் 30உக்குள் அனுப்புதல் வேண்டும். நுழைவுக்கட்டணம் எதை முன்னிட்டும் திருப்பியளிக்கப்பட மாட்டாது. வேறொரு தேர்வுக்காகவோ, விண்ணப்பதாரருக்கோ பயன்படுத்தப்பெற மாட்டாது. தேர்வு நிலைய நுழைவுச் சீட்டு நவம்பர் மாதம் அனுப்பப்பெறும். தேர்வுகளின் முடிபு டிசம்பர் சித்தாந்தத்தில் வெளியிடப்பெறும். பட்டங்கள் சமாஜ அடுத்த ஆண்டு விழாவில் வழங்கப்பெறும்.



ஒவ்வொன்றுக்கும் மூன்று மணிப் பொழுதில் விடை எழுதக் கூடிய இரண்டு வினாத்தாள்கள் தேர்வுக்குண்டு. ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக்கு இருபத்தைந்து வீதமும் மொத்தத்தில் நூற்றுக்கு முப்பத்தைந்து வீதமும் பெறுவோர் மூன்றும் வகுப்பிலும், மொத்தத்தில் நூற்றுக்கு ஐம்பது, அறுபது வீதங்கள் பெறுவோர் முறையே இரண்டாவது, முதல் வகுப்புக்களிலும் தேறினவர் ஆவர்.

### 1953-ம் வருடப் பாடத் திட்டம்

**I இலக்கியப் பகுதி**

1. திருக்குறள்—அறத்துப்பால்—(அதிகாரம் 1 முதல் 38 வரை).
2. ஒன்பதாம் திருமுறை—(திருவிசைப்பா – திருப்பல்லாண்டு).
3. திருமந்திரம்—(முதல் தந்திரம் – உபதேசம் 30 பாக்கள்).
4. பதினோராம் திருமுறை—(திருமுருகாற்றுப்படை அற்புதத் திருவந்தாதி).
5. பெரியபுராணம்—(காரைக்காலம்மையார் சரிதம்).

**II சாத்திரப் பகுதி**

1. சிவஞானபோதம்.
2. சிவஞானசித்தியார்–சுபக்கம்.
3. திருக்களிற்றுப்படியார்.
4. திருவுந்தியார்.

குறிப்பு :—மேற்குறிப்பிட்ட நூல்களுக்கு எந்த உரையையேனும் படிக்கலாம்.

தேர்வு எழுத விருப்பமுள்ளோர் கீழ்க்கண்ட முகவரிக்கு ரூ. 2 நுழைவுக் கட்டணம் செலுத்தி விண்ணப்பத்தாள் பெறலாம்.

சு. இளவழகன்,
துணைச் செயலாளன், சை. சி. மகா சமாசம்,
53, திருவள்ளுவர் தெரு, (ஜோன்ஸ் ரோடு,)
சைதாப்பேட்டை, சென்னை-15.

மேற்குறிப்பிட்ட தேதிக்குள் பணமோ விண்ணப்பத்தாளோ வராத்தவறினல் தேர்வு எழுத ஒப்புதல்தர இயலாது.

உண்டு. பதிப்பாசிரியர் அடிக்குறிப்புக்களாகப் பிற ஆசிரியர் கூற்றுக்களைச் சிறப்பாகப் பேராசிரியர் உரைப் பாடங்களை எழுதியிருக்கின்றார். ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இவ்வுரை பேதங்கள் மிக்க பயன்படும். சேர்க்கையாகப் பொருளடக்கம் ஒன்றும், அதில் கிளவித்தொகையும், துறைவகையும், பாட்டு முதற் குறிப்பகராதியும், அரும்பத அகராதியும் அச்சிடப்பட்டுள்ளன. அரும்பத அகராதியில் மூவல் முதலிய சில சொற்கள் விடப்பட்டுள்ளன. பதிப்பு உயர்ந்த பதிப்பு. நூல் படி… எடுப்பாக உள்ளது.

—வைத்ய முறைகள் :—நான்கு நூல்கள். நெ. 26, பாண்டு, காமாலை சிகித்சை. நெ. 27, காஸ, ச்வாஸ சிகித்சை. நெ. 28, சிரோரோக சிகித்சை. நெ. 38, நீரிழிவு சிகித்சை.

தஞ்சை சரசுவதி மஹால் வெளியீடுகள். காரியதரிசி அவர்கள், டாக்டர் வெங்கடராஜன் அவர்களைக் கொண்டு இந்நூல்களை ஆராய்ந்து பதிப்பித்திருக்கிறார்கள். இந்நூல்கள் ரூ. 2–0–0, ரூ. 3–0–0, ரூ. 3–0–0, ரூ. 4–0–0 முறையே விலைகள். தஞ்சை மன்னர் சரபோஜி அரசரவர்கள் சிறந்த வைத்தியர்களைக் கொண்டு, நோய்களுக்கு ஆராய்ந்த சிகித்சைகளைத் தொகுத்து எழுதி வைத்த கையெழுத்துப் பிரதிகளைத் தற்போது காரியதரிசி அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இந்நூல்களால் வைத்தியர்களுக்கு மட்டுமேயன்றிப் பொதுமக்களுக்கும் மிகுந்த பயன் உண்டு. வாங்கிப் படிப்பார்களாக.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15. P.I.Card No. M. S. 81.